www.padippakam.com

நவம்பர் 1999 ☆ விலை ரூ.5

# சிந்தனையாளன்

திருவள்ளுவராண்டு 2030 பெரியாராண்டு 121

## தூக்கில் இட்டுக் கொல்லுவதால் கொலை செய்வதைத் தடுக்க முடியுமா? வேண்டவே வேண்டாம் தூக்குத் தண்டனை!


நளினி


முருகன்


பேரறிவாளன்


சாந்தன்

*தமிழ்நாட்டில் இன்றுவரை 250பேர் தூக்கில் போடப்பட்டார்கள். இவர்களில் எத்தனைப்பேர் அப்பாவிகளோ! சிறைத்தண்டனை சீர்திருத்துவதற்கே. உயிருக்கு உயிர் - பழிக்குப் பழி வாங்குவது காட்டாட்சிச் சட்டம். தூக்குத் தண்டனை தரும் அத்தகைய சட்டத்தை அடியோடு அகற்றுக!*

★ விழி பிதுங்கச் செய்யும் விலை உயர்வுகள்!

★ இந்திய அரசியல்: கெட்டதிலிருந்து கழிசடைக்கு!

படிப்பகம்

www.padippakam.com

## உள்ளே...


### தலையங்கம்

☆ விழி பிதுங்கச் செய்யும் விலை உயர்வுகள்

- வே. ஆனைமுத்து

### கட்டுரைகள்

☆ தென் எல்லைப் போராட்டத்தின் வரலாறு

- நாஞ்சில்

☆ இந்திய அரசியல் : கெட்டதிலிருந்து கழிசடைக்கு!

- வே. ஆனைமுத்து

☆ தேர்தல் கூத்து!

-து. தில்லைவனம்

☆ கொள்கை ஏடுகளும் நம் கடமையும்

- வே. ஆனைமுத்து

☆ விவசாயிகள் குமுறல்

- தொ. எழில்நிலவன்

☆ எரி மூளட்டும்!

- தமிழேந்தி


## முதன்மையான அறிவிப்பு!

சிந்தனையாளன் ஆண்டுக் கட்டண உறுப்பினர் தொகை செலுத்தாதவர்களுக்கு, 1999 டிசம்பர் மாதத்துடன் இதழ் நிறுத்தப்படும் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம். தொடர்ந்து இதழ் பெற விரும்புவோர் உடனே ரூ.60/– ஆண்டுக் கட்டணம் செலுத்திப் புதுப்பித்துக் கொள்ள வேண்டுகிறோம்.

– ஆசிரியர் குழு

## நான்கு தமிழர்களின் உயிரைக் காக்க அணியமாவோம்!

தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக் குழுவின் கூட்டம் 22.10.99 மாலை 4 மணிக்கு இராயப்பேட்டை இலாயிட்ஸ் குடியிருப்பு சமூக நலக் கூடத்தில் ஒருங்கிணைப்பாளர் பழ. நெடுமாறன் தலைமையில் நடைபெற்றது. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து, தமிழ் ஆர்வலர்கள் பலரும் கலந்துகொண்டனர். கூட்டத்தின் முடிவில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன.

நளினி, முருகன், பேரறிவாளன், சாந்தன் ஆகியவர்களின் மரண தண்டனையை வாழ்நாள் தண்டனையாகக் குறைக்க குடியரசு தலைவருக்கும்; ஆளுநருக்கும் கருணை மனுக்கள் கொடுக்க தீர்மானிக்கப்பட்டது.

நவம்பர் 15ஆம் தேதி வரை கருணை மனுவில் தமிழ் மக்களிடம் இலட்சக்கணக்கில் கையொப்பம் பெறுவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

நவம்பர் மாதம் 19ஆம் தேதி தமிழகத்தின் அனைத்து மாவட்டத் தலைநகரிலும் ஒரு நாள் பட்டினிப் போரை நடத்துவது என்றும் நவம்பர் இறுதியில் சென்னையில் தமிழர்களின் ஒட்டுமொத்த உணர்வை வெளிப்படுத்தும் வகையில் மிகப் பெரிய பேரணி ஒன்றை நடத்தி, அதில் பல நாடுகளைச் சேர்ந்த, மனித உரிமை அமைப்புகளின் தலைவர்களும், இந்தியாவில் பல மாநிலங்களைச் சேர்ந்த மனித உரிமை அமைப்புகளின் தலைவர்களும் கலந்து கொள்ளச் செய்து ஆளுநரிடம் கருணை மனு கொடுப்பது என்றும், புதுதில்லி சென்று நூற்றுக்கும் மேற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் கருணை மனுவில் கையொப்பம் பெற்றுக் குடியரசு தலைவரிடம் அளிக்கவும் முடிவு செய்யப்பட்டது. எல்லா அரசியல் கட்சித் தலைவர்களையும் இதற்கு உதவ நேரில் சென்று வேண்டுவது என்றும் முடிவு செய்யப்பட்டது. தமிழர்கள் அனைவரும், கட்சி பாராமல், சாதி பாராமல் ஒட்டுமொத்தத் தமிழர்களின் உணர்வை வெளிப்படுத்தும் வகையிலும் தமிழக அரசினரின் கவனத்தையும், இந்திய அரசினரின் கவனத்தையும் ஈர்க்கும் வகையிலும் நவம்பர் 19ல் மாவட்டத் தலைநகர்களில் நடைபெறும் பட்டினிப் போராட்டத்தில் நவம்பர் இறுதியில் சென்னையில் நடைபெற உள்ள பேரணியிலும், திரளாகக் கலந்துகொண்டு நான்கு பேரின் உயிரைக் காக்க வேண்டுகிறோம்.

செய்தி : வல்லவன்

படிப்பகம்

www.padippakam.com

## சமதர்மக் காவலர்கள்



மார்க்ஸ் லெனின் சிங்காரவேலர் பெரியார்

## சமூகநீதிக் காவலர்கள்



புலே பெரியார் அம்பேத்கர் லோகியா

இந்தியாவில் பொதுவுடைமை மலர மார்க்சிய — பெரியாரிய நெறியில் தேசிய இனவழிப் பட்ட சம உரிமை உடைய சமதர் மக் குடிஅரசுகள் ஒருங்கி ணைந்த உண்மையான கூட் டாட்சி அமைய ஆவன செய்தல்

**கொள்கை முழக்கம் :**

உலகத் தொழிலாளிகளே
ஒன்று சேருங்கள்!
— **மார்க்ஸ்-எங்கெல்ஸ்**

ஒடுக்கப்பட்ட தேசிய இன மக்களே
ஒன்று சேருங்கள்!
— **லெனின்**

ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களே
ஒன்று சேருங்கள்!
— **பெரியார்**


**ஆசிரியர்**

**வே. ஆனைமுத்து**

**ஆசிரியர் குழு**

வே. ஆனைமுத்து
சங்கமித்ரா
க. முகிலன்
து. தில்லைவனம்
தமிழேந்தி
க. நாகராசன்
வாலாசா வல்லவன்
மங்கலம் அரசன்

சென்னை நவம்பர் 1999
விலை ரூ.5/-


# சிந்தனையாளன்

சுவடி : 22 மாத இதழ் ஏடு : 3

## விழி பிதுங்கச் செய்யும் விலை உயர்வுகள்

இந்தியாவில் 13வது நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப் பட்டுவிட்டது. எப்போதும் நடக்காத தன்மையில், 5 கட்டங்களில் 30 நாள்கள் இடைவெளியில் தேர்தல் நடத்தப்பட்டது. பருவ காலக்கோளாறு, பாதுகாப்பு ஏற்பாடு என்று என்ன காரணங்கள் சொன்னாலும், இது பொருத்தமற்றது.

கடைசிக் கட்டத் தேர்தல் 5/10/99 அன்று தான் முடிந்தது. தேர்தல் முடிந்த கையோடு, அன்று இரவே டீசல் விலை ஒரு லிட்டருக்கு ரூ.4 உயர்த்தப்படுவதாக இந்திய அரசினால் அறிவிக்கப்பட்டுவிட்டது.

இது பற்றிப் பெட்ரோலியம் அமைச்சகம் முடிவெ டுத்ததா? பிரதமரிடம் கலந்து பேசப்பட்டதா? என்கிற எந்த விவரமும் நாட்டு மக்களுக்குத் தெரிவிக்கப்பட வில்லை. இது மக்களை மதிக்காத அடாவடிப் போக்கு ஆகும்.

டீசல் விலை உயர்த்தப்பட்டதற்கு என்ன காரணம் கூறப்படுகிறது? டீசல், பெட்ரோல் வர்த்தகக் கணக்கில் ரூ.10 ஆயிரம் கோடி பாக்கி நிற்கிறது. இதில் உடனடியாக ஒரு பகுதியையாவது அடைக்க வேண்டும். எனவே டீசல் விலையை ஒரேயடியாக 40% உயர்த்தினால் தான் சுமார் ரூ.6500 கோடி கூடுதலாகக் கிடைக்கும் என்பது முதலா வது காரணம். டீசலை இந்தியாவுக்கு விற்கிற அயல்

படிப்பகம்

www.padippakam.com



நாடுகள் அண்மையில் விலையை உயர்த்திவிட்டன என்பது இரண்டாவது காரணம். பெட்ரோலுக்கு இப்போது உள்ள விலையே மிக அதிகம். ஆகையால் அதன் விலையை இப்போது உயர்த்தாமல், அதையும் சேர்த்து, விலை உயர்வை டீசல் தலையில் போட நேரிட்டது என்பது மூன்றாவது காரணம்.

இதுவும் போதாதாம். மிக விரைவில் மண்ணெண்ணெய் விலையையும், எரிவாயு (கேஸ்) வின் விலையையும் இந்திய அரசினர் கட்டாயமாக உயர்த்தப் போகிறார்களாம். ஏனென்றால் அண்டையிலுள்ள பாக்கிஸ்தான், பங்களாதேஷ் நாடுகளில் மண்ணெண்ணெய் விலை எப்போதே மிக மிக உயர்த்தப்பட்டுவிட்டதாம். மேலும் மண்ணெண்ணெயைக் குறைந்த விலையில் விற்பதற்காக இந்திய அரசு தருகிற மானியம் ஆண்டுக்கு ரூ.7000 கோடி; எரிவாயுக்காகத் தரப்படும் மானியம் ஓராண்டுக்கு ரூ.5000 கோடி. இவற்றைத் தாங்க முடியாததால் இவற்றின் விலையையும் மிக மிக விரைவில் அரசு உயர்த்தப் போகிறது.

இவை எல்லாமே கிராமப்புற மக்களையும், எல்லா ஏழைகளையும் உடனடியாகப் பாதிக்கிற கேடான திட்டங்களல்லவா?

டீசல் பயன்பாடு இந்தியா முழுவதிலும் அதிகம். சிற்றூர்களிலிருந்தும், பேரூர்களிலிருந்தும், மாவட்டத் தலைநகரங்களிலிருந்தும், வெளிமாநிலங்களிலிருந்தும் பண்டங்களை ஏற்றி வருவதற்கும், ஏற்றிச் செல்லுவதற்கும் போதிய சரக்கு இரயில் வண்டிகளோ, இரயில்வே இருப்புப்பாதைகளோ இல்லை. எனவே பெரிய, சிறிய லாரிகள், டிரக்குகள், வேன்கள், மினி பேருந்துகள் மூலம்தான் உணவுப் பண்டங்கள், கட்டடம் கட்டுவதற்கான பொருள்கள், தொழிற்சாலைகளுக்கான மூலப் பொருள்கள், ஆலைகளில் உற்பத்தியாகும் பொருள்கள் மற்றும் அன்றாடத் தேவைக்கான காய்கறிகள், மீன், பால், தானியங்கள் இவற்றை ஏற்றிச் செல்கிறார்கள்.

இந்தியா முழுவதிலும் இந்த வகைச் சரக்கு உந்துகள் 25 இலட்சம் ஓடுகின்றன. இவை தமிழ்நாட்டில் இரண்டு இலட்சம் உள்ளன. வெளி மாநிலங்களிலிருந்து அன்றாடம் 20 ஆயிரம் லாரிகள் இங்கு வந்து போகின்றன. இந்த ஒவ்வொரு வாகனமும் ஒரு நாளைக்கு உறுதியாக ரூ.500 முதல் ரூ.1000, வரை கூடுதலாகச் செலவு செய்ய வேண்டிய விளைவு. டீசல் உயர்வினால் உடனே ஏற்பட்டுவிட்டது.

கடைசியாக, உண்மையில் இதைச் சுமக்கப் போவது யார்? பண்டங்களை வாங்கப் போகிற ஒவ்வொருவரும் தான். உண்மையில் சிற்றூர்ப் புறச் சிறிய - பெரிய விவசாயிகள், நகர்ப் புற ஏழைகள், நகர்ப்புற மாதச் சம்பளக்காரர்கள், சிறுகடைக்காரர்கள் ஒன்றுக்கு மூன்று நான்கு மடங்கு விலை கொடுத்து அன்றாடத் தேவைக்கான பண்டங்களை வாங்கி விழி பிதுங்கி நிற்கப் போகிறார்கள். அதிகம் பிள்ளைகளைப் பெற்றுள்ளவர்கள் ஏழைகள். இவர்கள் இனி வெறுஞ்சோறும், தண்ணீர்ச் சோறும் சாப்பிடுவதே முடியாததாக ஆகப் போகிறது.

டீசல் விலை ஏற்றப்பட்டதை அடுத்து, நகரப் பேருந்துகளுக்கு 50 காசு தொடங்கி, 100 காசு வரையிலும், தொலைதூர - வெளியூர் பேருந்துகளுக்கு 20 முதல் 30 விழுக்காடு வரையிலும் கட்டணத்தை உயர்த்தி விட்டது தமிழ்நாட்டு அரசு. படிக்கவும் - கோவிலுக்குப் போகவும், அலுவலகம் - தொழிலகம் - கடை வேலை - வைத்தியம் - திருமணம் - இழவு - நீதிமன்றம் - வணிகம் இவற்றுக்காகவும் பயணம் போவோரில் 100க்கு 90 பேர் பேருந்தில் பயணிக்கிறவர்கள்தாம். இவர்கள் தாங்க முடியாத பணச் சுமைக்கு ஆளாகப் போகிறார்கள்.

இவ்வளவு கேடான நிலைமைகளை உருவாக்காமல் எண்ணெய் இறக்குமதி நிலுவை என்கிற வெறும் 10 ஆயிரம் கோடி ரூபாயை ஈடுகட்ட வேறு வழியே இல்லையா?

மண்ணெண்ணெய்க்கும் எரிவாயுக்கும் தரப்படுகிற ஆண்டு மானியம் 12 ஆயிரம் கோடி ரூபாயை ஈடுகட்ட உண்மையில் வேறு வழியே இல்லையா?

இன்றைய மக்கள் விரோத பாரதிய சனதாக் கூட்டணி அரசுக்கும், அமைச்சர்களுக்கும்; எதி

படிப்பகம்

www.padippakam.com



ரிக் கட்சிகளாகவே எப்போதும் இயங்குகிற பொறுப்பற்ற எதிர்க்கட்சிகளுக்கும்; இந்திய அரசின் உயர் அதிகார வர்க்கத்துக்கும் இந்த 22 ஆயிரம் கோடியை ஈடுகட்ட வேறு மாற்று வழியே உண்மையில் தெரியாதா?

(1) 1999 செப்டம்பர் கணக்குப்படி, பொதுத் துறை நிறுவனங்களான - தேசிய மயமாக்கப் பட்ட வங்கிகள் தந்துள்ள கடனில் திருப்பி வராத கடன்கள் மட்டும் 45 ஆயிரம் கோடி ரூபாய் என்று, 8/10/99 அன்று, வங்கி அதிகாரிகளே அறிவித்துள்ளனர். இப்படி வராத கடன்களைப் பெற்றவர்களில் நலிந்த சிறு தொழில் - வணிகக் காரர்கள் தரவேண்டிய பாக்கி ஒரு பகுதி இருக்கலாம். மீதிப்பட்ட பெருந்தொகை, பெரிய பெரிய தொழில் அதிபர்கள் - வணிகர் களிடமிருந்தே வரவேண்டும்.

மாதச்சம்பளமாக ரூ.10 ஆயிரம் முதல் 30 ஆயிரம் வரை பெறுகிற இந்த வங்கித் துறை அதிகாரிகளுக்கு இது தெரியாதா? ஆளும் கட்சித் திருடர்களும், எதிர்க்கட்சிப் பிழைப்பு வாத அரசியல்காரர்களும், எந்தச் சமூகப் பொறுப்பும் இல்லாத இந்த வங்கித் துறை உயர் அதிகார வர்க்கமும் இதற்கு உரிய நடவடிக்கை எடுத்திட என்ன செய்தார்கள்? எப்போது செய்வார்கள்? ஏன் இது வரையில் ஒன்றும் செய்யவில்லை? வராத கடன்களை வசூலிப்பதற்கான தீர்ப்பாயம் (DEBT RECOVERY TRIBUNAL) இக்கடன்களை வசூலிக்க என்ன செய்தது? இதன் செயல்பாடு களை வேகப்படுத்திட வங்கித்துறையும், இந்திய அரசும் ஏன் முனைய வில்லை? இவை எல்லாமே மூடு மந்திரம் - பகல்கொள்ளை!

(2) நேர்முக வரிகள் வருமான வரி, நிலவரி, தொழில் வரி முதலானவை.

வருமான வரியை மாதச் சம்பளக்காரர்களி டமிருந்து 100க்கு 100 பங்கும் வாங்கிவிடுகிறார் கள். இவர்கள் தப்பவே முடியாது. ஆனால் தொழிலதிபர்கள், திரைப்படத் துறையினர், தனி யார் தொலைக்காட்சியினர், காண்ட்ராக்டர்கள் ஆகியோர் செலுத்த வேண்டிய பல ஆயிரக்கணக் கான கோடி ரூபாய் வருமான வரியை வருமான வரித்துறை அதிகாரிகள் 100க்கு 100 பங்கு ஏன் வசூலிக்கவில்லை? வசூலிக்கப் போதிய சட்ட - விதிகள் இல்லையா? வசூலுக்குப் போக மனமில்லையா? அல்லது இவர்களுக்குக் கை நிறையக் கிடைக்கிற கைக்கூலியும், பெரிய இடத்து அரசியல் தலையீடுகளும் இவர்கள் வசூலிப்பதைத் தடுக்கின்றனவா? அல்லது இதற்கு மக்களிடம் எந்த எதிர்ப்புமே இல்லை என்கிற மமதையா?

(3) மறைமுக வரிகள் என்பவை சுங்கம், கலால் முதலானவை. ஏற்றுமதி இறக்குமதி வணிகப் பண முதலைகளும், அரசியல் கட்சிக் காரர்களும், கள்ளக் கடத்தல்காரர்களும், இத்து றைகளின் அதிகாரித் தரகர்களும் கூட்டுச் சேர்ந்து கொண்டு இத் துறைகளில் பல பத்தாயிரம் கோடி ரூபாய் வரியாக வர வேண்டியதைச் சுருட்டிக் கொள்ளுகிறார்கள். இதை, மக்கள் என்கிற மதிப்புக்குரிய வாக்காளர்களும் உணர வில்லை. இவர்களுக்கு இதை உணர்த்திடவும் எவரும் எதுவும் செய்யவில்லை.

இந்திய அரசு உயர் அதிகார வர்க்கமும், இந்திய ஆளும் வர்க்கத்தினரும், அரசியல் கட்சித் தலைவர்களும், ஆளும் கட்சியினரும் இப்படிப் பட்ட ஒவ்வொன்றுக்கும் வெண்ணெயும் விளக் கெண்ணெயும் பூசப்பட்ட நீண்ட சமாதான விளக்கம் தர மட்டுமே முன் வருகிறார்கள்.

உண்மையில் எந்தச் சமூகப் பற்றும் இல்லா மல் வயிற்றுப்பாடும் பகட்டான வாழ்க்கையுமே வாழ்வு என்றும்; அதையும் மிஞ்சினால் "நம் ஆள்", "நம் சாதிக்காரர்", "நம் கட்சிக்காரர்", "நம் துறை சார்ந்த அதிகாரி" என்கிற பற்றும் மட்டுமே பெரும்பாலோரை மக்கள் எதிரிகளாக இங்கே நடக்க வைத்து விட்டன.

இதை மாற்றிட நாம் வழி காண வேண்டும். சிலரேனும், எதற்கும் துணிந்தவர்களாக - முழு அர்ப்பணிப்புடன் இப்படிப்பட்ட பணிகளுக்கு முன்வர வேண்டும்.

மக்கள் நலன் நாடுவோரின் நீங்காக் கடமை இது.

1-11-99 வே.ஆனைமுத்து

படிப்பகம்

www.padippakam.com



# சுயமரியாதைச் செம்மல் சுந்தரமூர்த்தி மறைந்தார்!



நெட்டையான உருவம் - முழுக்கைச் சட்டை - நேராகச் சீவப் பட்ட தலை முடி - ஆழ்ந்த சிந்தனையைக் காட்டும் அகன்ற நெற்றி - தோழமையை நீட்டும் புன்சிரிப்பு! பெரியார் பெருமை பேசப்படுகிற இடத்திலெல்லாம் - தமிழ்காக்க முழக்கமிடும் களங்களில் எல்லாம் 1938 முதல் கடந்த 60 ஆண்டுக் காலமாக நீக்கமற நிறைந்து காணப் பட்ட இவர்தான் சென்னை இராயபுரம் தோழர் தி.வே. சுந்தரமூர்த்தி. அன்னாரின் அன்புத் துணைவியார் இரத்தினாவதி அம்மையாரும் அப்படிப்பட்டவரே.

சுயமரியாதைப் பரப்பல் பணிக்கு முழுவதுமாக - மனைவி மக்களுடன் பங்களிப்புச் செய்த செம்மல் தி.வே. சுந்தரமூர்த்தி அவர்கள் 3.10.99 இரவு மறைவுற்றார் என, 4.10.99 நண்பகல் அறிந்த போது நட்டுவாக்காலி கடித் துவிட்டது போல் தலைசுற்றியது.

தோழர்களும் நானும் உடனே இராயபுரம் விரைந்தோம்; இறுதி அஞ்சலி செலுத்தினோம். இது ஒரு வழமை.

மறைந்த சுந்தரமூர்த்தி அவர்கள் 1938 இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியில் சிறை சென்று மீண்டவர்; மறைந்த மாவீரர்கள் நடராசன், தாளமுத்து ஆகியோரின் சிறைத் தோழர்; ஞானியார் அடிகளால் தட்டிக் கொடுத்துப் பாராட்டப்பட்டவர். பெரியாரின் பேரன்புக்கும் பாராட்டுக்கும் உரியவராக விளங்கியவர். 1948 தொடங்கி இன்று வரை பெரியார் தொண்டர்கள் நடத்திய எல்லாக் கிளர்ச்சிகளிலும் பங்கேற்ற போராட்ட வீரர். தம் சொந்த நேரம், சிந்தனை, பணம் இவற்றைப் பெரியார் கொள்கை வளர்ச்சி - தமிழ் வளர்ச்சி - தமிழர் விடுதலைக்கென மனமுவந்து ஈந்தவர்.

பெரியார் நூற்றாண்டு விழாவினை முதன் முதலாக 1979இல் தில்லி மாநகரில் மா.பெ.பொ.க சிறப்புற எடுத்தது. 23.3.79இல் நடந்த அந்த விழாவுக்குத் தம் துணைவியாருடன் வருகை தந்தார். 1991 அக்டோபரில் அதே தில்லியில் மூன்று நாள் மாநாடுகள். அதற்கும் அன்னார் வருகை புரிந்தார். மா.பெ.பொ.க. பொதுக்குழுவைத் தம் இல்லத்தில் கூட்டச் செய்து, விருந்தளித்து, குடும்பத்தினருடனும் உற்ற தோழர் செஞ்சட்டை கே. பஞ்சாட்சரத்துடனும் மகிழ்ச்சியில் திளைத்தார். மா.பெ.பொ.க வின் எல்லா நிகழ்ச்சிகளிலும், கிளர்ச்சிகளிலும் மகிழ்ச்சியுடன் பங்கேற்றார்.

பெரியார் பெயரை எவர் சொன்னாலும் பெரியார் பெயரால் எவர் நிகழ்ச்சி நடத்தினாலும்; தமிழைத் - தமிழரைக் காத்திட எவர் முன் வந்து போராடினாலும், அமைப்பு வேறுபாடு கருதாமல் ஓடோடிச் சென்று தம் 80ஆம் அகவை வரை பணியாற்றிய மாமனிதர் மறைந்த நம் தோழர் தி.வே. சுந்தர மூர்த்தி அவர்கள்.

அன்னாரின் இழப்பால் துயருறும் குடும்பத்தினர் அனைவர்க்கும் மற்றுமுள்ள தோழர்களுக்கும் மா.பெ.பொ.க சார்பில் ஆழ்ந்த இரங்கலை உரித்தாக்குகிறோம்.

**வளர்க சுந்தரமூர்த்தியின் புகழ்!**

படிப்பகம்

www.padippakam.com



# தமிழ் இசை அறிஞர் ப. தண்டபாணி மறைந்தார்!



தமிழ் இசை ஆராய்ச்சி அறிஞரும், பகுத்தறிவாளரும், சுயமரியாதைக் கொள்கையாளருமான ப. தண்டபாணி அவர்கள் 27.8.1999 அன்று தம் 72-ம் வயதில் மறைவுற்றார்.

6.2.1927ல் விழுப்புரத்தில் பிறந்து, புதுச்சேரியிலும் கடலூரிலும் படித்து வளர்ந்த அவர் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் செயற் பொறியாளராக வேலை பார்த்தவர். பொறியியலில் பட்டமேற்படிப்பு (MSc. Engg) படித்தவர். வேலை பார்க்கும்போதே தமிழ் இசையில் நாட்டம் கொண்டு, சென்னை 'தமிழ் இசைச் சங்கத்தின்' மாலை நேர வகுப்பில் மூன்று ஆண்டுகள் இசை பயின்றார். தமிழ் இசையின் சிறப்புப்பற்றிய இவருடைய கட்டுரைகள் பல இதழ்களிலும் சிறப்பு மலர்களிலும் இடம் பெற்றுள்ளன. இவர் எழுதிய 'தமிழன் கண்ட இசை', 'திராவிடர் இசை' எனும் நூல்கள் தமிழ் இசையின் சிறப்பினை விளக்கும் அரிய நூல்கள். 'சிறுவர் இசை மாலை - ஆரம்பப் பாடநூல்' எனும் நூல், இசையை முறையாகப் பயில்வோரின் கையேடு எனலாம். தமிழில் 'கீர்த்தனைகள்' குறைவாகவே உள்ளன எனும் நிலையைப் போக்க எண்ணி பற்பல ராகங்களுக்கும் கீர்த்தனைகள் இயற்றும் பணியில் கடந்த சுமார் 15 ஆண்டுகளைச் செலவிட்டார்.

சுமார் 4000 கீர்த்தனைகளை இயற்றி அறிஞர் பலருடைய பாராட்டையும் பெற்றவர். எனினும் விடுதலை, பாணன், செந்தமிழச் செல்வி போன்ற சில ஏடுகளில் வெளிவந்த சில கீர்த்தனைகளைத் தவிர, இவை நூல் வடிவில் வெளிவர வரவில்லை என்பது தமிழ் இசைக்குப் பெரிய இழப்பு ஆகும்.

19-ம் நூற்றாண்டின் இறுதியிலும், 20-ம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் ''தமிழ் இசை இயக்கத்தை''த் தனியொருவராக நின்று நடத்தியவர் தஞ்சை மு. ஆபிரகாம் பண்டிதர். அவர் எழுதி வெளியிட்ட - 2000 பக்கங்களைக் கொண்ட - 'கருணாமிர்த சாகரம்' எனும் இசைத்தமிழ் நூலையும் பிற்காலத்தில் ''தமிழ் இசை இயக்கம்'' நடத்திய பெருமக்கள் மறந்துவிட்ட நிலையில், அந்நூலை உலகறியச் செய்தவர் ப. தண்டபாணி ஆவார். 'ஆபிரகாம் பண்டிதர் மன்றம்' எனும் அமைப்பைத் தொடங்கித் தமிழ் இசை நிகழ்ச்சிகளை நடத்தினார்.

இந்தி எதிர்ப்பு, தனித்தமிழ், தமிழ் மொழியுரிமை - இவற்றுக்கான பல போராட்டங்களில் பங்கெடுத்துக் கொண்டதால் - தமிழ் அறிஞர்களிடையே அன்பும் பாராட்டுதலும் பெற்றவர். 1999ல் தஞ்சாவூரில் நடந்த 'தமிழர் தன்னுரிமை மாநாட்டில்' பங்கெடுத்துக் கொண்டமைக்காக 18 நாட்கள் சிறையிலிருந்தார். தமிழ் இசைக் கல்லூரியில் ஈராண்டுகள் (1984-86) ஆராய்ச்சியாளராக வேலை பார்த்தபோது கிடைத்த ரூ.1000 தொகுப்பூதியத்தில் பாதியை ஈழ அகதி மாணவர் இருவர்க்கு மாதத்தோறும் கொடுத்து உதவிய பண்பாளர்.

முரசொலியில் கவிதைகள் எழுதினார் என்பதற்காக 1976ல் நெருக்கடி நிலை - கவர்னர் ஆட்சியில் - வேலை நீக்கம் செய்யப்பட்டார். அதை எதிர்த்து உயர்நீதி மன்றத்தில் வழக்காடி வெற்றி பெற்றாலும் அவருக்குத் திரும்ப வேலையும் தரப்படவில்லை; ஓய்வூதியமும் வழங்கப்படவில்லை. அ.இ.அ.தி.மு.க, தி.மு.க என ஆட்சிகள் பல மாறியும் இவருக்கு நீதி கிடைக்கவில்லை. இறுதியில் வறுமை இவரைச் சூழ்ந்து கொண்டது.

மானமும், வீரமும், அறிவும் ஒருங்கே அமையப் பெற்ற ப. தண்டபாணி அவர்கள் மறைவுற்றார் எனும் செய்தி கூட இரண்டு மாதங்களுக்குப் பின்னரே பலருக்கும் தெரிய வந்துள்ளது என்பது மிக மிக வேதனைக்குரிய ஒன்று! அந்தோ! இது தான் தமிழனின் பண்போ?

— நாஞ்சில்

படிப்பகம்

www.padippakam.com



# கி.பி. 2000 சனவரி 1 சனி, 2 ஞாயிறு வேதாரண்யத்தில் மார்க்சிய பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி

நடத்தும்

- தஞ்சை - திருவாரூர் - நாகை மாவட்ட வேளாண்மை - தொழில் வளர்ச்சி மாநாடு
- சிந்தனையாளன் பொங்கல் சிறப்பு மலர் வெளியீடு.
- தமிழ்த் தேசியஇன மாணவர் - இளைஞர் மாநாடு நிகழ்ச்சிகளுக்கு வருகை தாருங்கள்.

**நாங்கள்:**

★ இந்திய அரசியலை 'மண்டல் மயமாக' ஆக்கியவர்கள்.

★ தாழ்த்தப்பட்டோர் - பிற்படுத்தப்பட்டோர் - பழங்குடியினர் - மதச் சிறுபான்மை வகுப்பு மக்களின் மேம்பாட்டுக்குப் பாடுபடுகிறவர்கள்.

★ பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்க்கு மத்திய அரசு வேலைகளில் தனி இட ஒதுக்கீடு பெற்றுத் தந்தவர்கள்; விகிதாசார ஒதுக்கீடு கோரிப் போராடுகிற வர்கள்.

★ பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்க்கு மத்திய அரசு கல்வியில் விகிதாசார இட ஒதுக்கீடு கோரிப் போராடுகிறவர்கள்.

★ தமிழ்த் தேசியஇன உரிமைக்குப் போராடுகிறவர்கள்.

★ இந்தியாவை சம உரிமை உடைய சமதர்மக் குடி அரசுகள் ஒருங்கிணைந்த உண்மையான கூட்டாட்சியாக உருவாக்கிட உழைப்பவர்கள்.

வேதாரண்யம் மாநாடுகளுக்கு

அனைவரும் வருகை தாருங்கள்!

*- மார்க்சிய பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி*

*(மா.பெ.பொ.க.)*

படிப்பகம்

www.padippakam.com



நீங்கள்

அருள் கூர்ந்து

★ வேதாரண்யம் மாநாட்டுக்கு வருகை தாருங்கள்.

★ வேதாரண்யம் மாநாட்டுக்கு நன்கொடை வழங்குங்கள்.

★ சிந்தனையாளன் பொங்கல் சிறப்பு மலருக்கு விளம்பரம் தாருங்கள்.

★ சிந்தனையாளன் பொங்கல் சிறப்பு மலர் பல வண்ணமுகப்புடன் (450 பக்கம்): விலை ரூ.60. சலுகை விலையில் பெற்றிட முன்பதிவுக்கு ரூ.40 அனுப்புங்கள்.

★ **'சிந்தனையாளன்', 'Periyar Era'** மாத ஏடுகளுக்கு சந்தா செலுத்துங்கள்.

| | | | |
|---|---|---|---|
| **'சிந்தனையாளன்'** | ஆண்டுக்கட்டணம் | : | ரூ. 60.00 |
| " | வாழ்நாள் கட்டணம் | : | ரூ. 500.00 |
| **'PERIYAR ERA'** | ஆண்டுக்கட்டணம் | : | ரூ. 100.00 |
| " | வாழ்நாள் கட்டணம் | : | ரூ.1000.00 |

- ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களின் ஒட்டுமொத்த விடுதலைக்கு
- ஒன்றிணைந்து போராடிட முன்வாருங்கள்!
- இந்தியாவை சம உரிமை உடைய சமதர்மக் குடி அரசுகள் ஒருங்கிணைந்த உண்மையான கூட்டாட்சியாக உருவாக்கிட முன்வாருங்கள்.

*— மார்க்சிய பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி (மா.பெ.பொ.க)*

**தொடர்பு முகவரிகள்:**

1. **தலைமை இடம்:** சிந்தனையாளன் அலுவலகம்: 19, முருகப்பா தெரு, சேப்பாக்கம், சென்னை - 600 005. ☎ 852 2862
2. **வேதாரண்யம் மாநாட்டுக்குத் தொடர்பு முகவரி:**

மா.முத்துச்சாமி, மாநாட்டு வரவேற்புக்குழுத் தலைவர்
92, கடை வீதி, சீர்காழி - 609 110
கடை ☎ 04364-70204; வீடு: ☎ 04364- 71225

படிப்பகம்

www.padippakam.com



# சிந்தனையாளர் மன்றம், சென்னை-5
## THINKERS' FORUM
# அரசமைப்புச் சட்டப் பயிலரங்கம்

சென்னை சிந்தனையாளர் மன்றத்தின் சார்பில் 'இந்திய அரசமைப்புச் சட்டமும் அரசு அலுவலர்களும்' என்ற பொருள் பற்றிய பயிரலங்கம் அக்டோபர் 16, 17 நாள்களில் திருவல்லிக்கேணி, சிவ.இளங்கோ இல்லத்தில் நடைபெற்றது. மாநில அமைப்பாளர் இரா.இரத்தினகிரி தலைமை ஏற்றார். தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றிய மாநிலத் தலைவர் கோ.சூரியமூர்த்தி முன்னிலை வகித்து உரையாற்றினார்.

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர், மதச் சிறுபான்மையினர், அரசு அலுவலர் - ஆசிரியர் பேரவை அமைப்பாளர் கலச. இராமலிங்கம் தொடக்க உரையாற்றினார்.

இந்திய அரசமைப்புச் சட்ட ஆய்வாளர், 'சிந்தனையாளன்', 'பெரியார் ஊழி' இதழ்களின் ஆசிரியர் வே.ஆனைமுத்து இரண்டு நாள்களிலும் ஆய்வுரை நிகழ்த்தினார். அரசு அலுவலர் சங்கங்களின் நிர்வாகிகள், இணைப்புச் சங்க,- தோழமைச்சங்கப் பொறுப்பாளர்கள் ஆகியோர் திரளாகப் பங்கேற்றனர். அ.மதிவாணன் நன்றி நவின்றார்.

பயிலரங்க முடிவில் பின்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தீர்மானம் - 1: இந்திய நாட்டுக் குடிமக்களில்' மத்திய மாநில அரசு - அலுவலர்களும், ஆசிரியர்களும் பொதுத் தேர்தலில் வாக்களிக்க உரிமை பெற்றிருந்தாலும் பொதுத் தேர்தல்களில் வேட்பாளர்களாகப் போட்டியிட அனுமதிக்கப்படுவதில்லை. அரசுப் பணிகளிலிருந்து பதவி விலகிய பின்னரேதான் வேட்பாளர் விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. மத்திய - மாநில அரசுப் பணியாளர்களுக்கு இந்த உரிமை மறுக்கப்படுவதானது உண்மையான மக்களாட்சி நெறிகளுக்கும், உலக மனித உரிமைச் சாசனக் கோட்பாடுகளுக்கும் முரணானது.

இந்திய நாடு விடுதலை பெற்று 52 ஆண்டுகள் ஆகியும் அரசு அலுவலர்களுக்கு அரசியலில் பங்கு பெறும் உரிமை வழங்கப்படவில்லை என்பதைக் கருத்திற் கொண்டு பிற நாடுகளில் உள்ளது போன்றே அரசு அலுவலர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் அரசியலில் பங்கு பெற உரிமை வழங்கப்பட இந்திய அரசியலமைப்புச் சட்டம் திருத்தம் செய்யப்படவேண்டும் என மத்திய அரசைக் கேட்டுக் கொள்ளத் தீர்மானிக்கப்படுகிறது.

தீர்மானம் - 2: இந்திய நாடு அரசியல் விடுதலை பெற்று அரை நூற்றாண்டுக்கு மேலாகிய இன்றைய நிலையில், அரசியல், சமுதாய, பொருளியல் வாழ்வில் எத்தனையோ மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

இந்த நிலைமையில் இந்தியக் குடிமக்களில், சுமார் சரிபகுதி மக்கள் இன்னமும் அடிப்படைக் கல்வி அறிவு பெறாதவர்களாகவும் அவர்களில் பெரும்பான்மையான மக்கள் வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்ந்து வருபவர்களாகவும் - அதிலும் குறிப்பாகப் பெண் மக்கள் மிகவும் மோசமாக நடத்தப்பட்டும் வருகிறார்கள். இந்த இழிவு நிலை மாற்றப்பட வேண்டும்.

இந்தியக் குடிமக்கள் யாவருக்கும் அரசியல், சமுதாயம், பொருளாதாரம் ஆகியவற்றில் உண்மையிலேயே சமநிலை உருவாக்கப்பட மக்களுக்கான புதிய அரசமைப்புச் சட்டம் வகுக்கப்பட வாய்ப்பாக, இந்திய அரசு இதை நோக்கமாகக் கொண்ட புதிய அரசியல் நிர்ணய சபையை உருவாக்கிச் செயல்படுத்த வேண்டுமெனக் கோரித் தீர்மானிக்கப்படுகிறது.

செய்தி: தஞ்சை இரா.இரத்தினகிரி

படிப்பகம்

www.padippakam.com



நூல் மதிப்புரை



# "நீங்கள் படிக்க வேண்டிய மருத்துவ நூல்: சில முக்கிய நோய்கள்"

ஆசிரியர்: டாக்டர் பூ. பழநியப்பன், ப. சுமங்கலி

விலை ரூ 75. பக்கங்கள் 206

கிடைக்குமிடம்:

நிலா பதிப்பகம்
ஏ1/83, 5ஆவது தெரு,
அண்ணா நகர்,
சென்னை 600 040.

இந்தியர்களின் வாழ்வியல் சிந்தனைக ளும் செயல்களும் (மூட) நம்பிக்கைகளின் - (அர்த்தமற்ற) சடங்குகளின் அடியொற்றியே அமைந்துள்ளன. தமிழர்களும் இதே நிலையில் தான் இருக்கின்றனர். இந்தியர்கள் அறிவார்ந்த முறையில் சிந்திக்கவும் செயல்படவும் பெரும் தடைகளாக இருப்பவை மதமும் சாதியும் என்று தந்தை பெரியாரும் அண்ணல் அம்பேத் கரும் தங்கள் வாழ்நாள் முழுவதும் மக்களுக்கு அறிவு விளக்கமளித்து வந்தனர்.

டாக்டர். பூ. பழநியப்பன், ப. சுமங்கலி ஆகியோர் எழுதியுள்ள 'நீங்கள் படிக்க வேண் டிய மருத்துவ நூல்: சில முக்கிய நோய்கள்' என்ற நூல் தமிழர்களிடையே அறிவியல் நோக்கை வளர்ப்பதற்கு உதவும் வகையில் அமைந்துள்ளது. தொழுநோய் - முன் பிறவி யின் கர்ம பலன் என்றும், அம்மை நோய் - மாரியாத்தாவின் சினம் என்றும் எண்ணு கின்ற போக்குப் பெருமளவில் குறைந்திருக் கின்றது. ஆயினும் படித்தவர்கள் என்பவர்களி லும் பெரும்பாலோர் நோய்கள் பற்றிய அறியா மையில் மூழ்கிக் கிடக்கின்றனர்.

தமிழில் பொதுமக்களுக்குப் பயன்படக் கூடிய வகையில் வெளிவந்துள்ள மருத்துவ நூல்கள் சிலவே! அவற்றுள் 1984 ஆம் ஆண்டு 'க்ரியா' வெளியிட்ட 'டாக்டர் இல்லாத இடத் தில்' என்ற நூல் மிகச் சிறந்ததாகும். டேவிட் வெர்னர் எழுதியதன் தமிழாக்கம் அது! பெரும் பாலான நோய்கள் பற்றியும் அவற்றின் அறிகுறி கள், தடுப்பு முறைகள் பற்றியும் எட்டாம் வகுப்புப் படித்தவரும் எளிதில் புரிந்து கொள் ளும்படியாக அமைந்துள்ள அரிய நூல்! மருத்து வர்களின் சமூகப் பொறுப்பின்மையும், பணம் குவிக்கும் பேராசையும் மக்களுக்கான மருத்துவ நூல்கள் எழுதப்படாமைக்குக் காரணங்களாகும். இப்படிப்பட்ட சூழலில் மக்களுக்கு அடிப்படை யான மருத்துவ அறிவை ஊட்டுவதற்கென்றே இந்நூலை எழுதியுள்ள டாக்டர் பூ. பழநியப்பன், ப. சுமங்கலி ஆகியோர் தமிழர்களின் பாராட்டுக் குரியவர்கள்.

இந்நூலில் 15 வகையான நோய்களைப் பற்றி விளக்கியுள்ளனர். இவற்றுள் அய்ந்து பகுதிகள் மட்டுமே டாக்டர். பூ. பழநியப்பன் அவர்கள் வல்லுநராக விளங்கும் மகப்பேறு மருத்துவ இயலுடன் தொடர்புடையனவாக உள்ளன.

மருந்துகளும் பேறு காலமும் என்ற தலைப்பில் என்னென்ன மருந்துகளைக் கரு வுற்ற பெண்கள் உட்கொள்ளக் கூடாது என் றும், அவ்வாறு உட்கொள்ளுவதால் பிறக்கின்ற குழந்தைக்கு எத்தகைய ஊனங்கள் ஏற்படும் என்றும் விரிவாக விளக்கப்பட்டுள்ளது. மருத் துவர்களும், முறையாக மருத்துவம் படிக்காம லேயே 'டாக்டர்களா'க இருப்பவர்களும் கட் டாயம் படிக்க வேண்டிய பகுதி இது!

'மாதவிடாய் நின்று போன நிலை' பற்றிய பகுதி மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. மாதவிடாய் நின்றுவிடக்கூடிய காலத்தில் பெண்களின் உடலில் ஏற்படக்கூடிய மாற்றங் கள், துன்பங்கள் பற்றி ஆண்களும் அறிந்து கொண்டு தம் மனைவியரிடம் பரிவுடனும் அன்புடனும் நடந்து கொள்ளுவதற்கு இச்செய் திகள் உதவும்.

ஆண் உறுப்பின் வீரியக் குறைவு என்று தனிப் பகுதி ஏன் எழுதப்பட்டுள்ளது என்ப தைப் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆண் உறுப்பின் அமைப்பு, செயல்பாடு, விந்தணு ஆகியவைபற்றியும் இணைத்து எழுதியிருந் தால் பயனாக இருந்திருக்கும். வீரியக்

படிப்பகம்

www.padippakam.com



குறைவை நீக்க 'வயாகரா' என்ற மருந்து 1998இல் விற்பனைக்கு வந்தது. 1998இல் நான்கு மாதங்களில் அமெரிக்காவில் மட்டும் 3.6 மில்லியன் டாலர் மதிப்புக்கு வயாகரா விற்பனையாகியிருக்கிறது.

தாய்ப்பால் - புட்டிப்பால் பற்றி இன்னும் விரிவாக எழுதியிருக்கவேண்டும். எய்ட்ஸ் நோய்க்குக் காரணமான வைரஸ் மனித உடலில் இயல்பாய் அமைந்துள்ள நோய்த்தடுப்பு - எதிர்ப்பு - தற்காப்பு அமைப்பு முறையை எவ்வாறு அழிக்கிறது என்பது மிக எளிய முறையில் விளக்கப்பட்டுள்ளது.

பாலியல் அல்லது மகப்பேறு தொடர்பு அல்லாத மற்ற பத்துப் பகுதிகளில் நீரிழிவு நோய் (சர்க்கரை நோய்) அனைவரும் படிக்க வேண்டிய பகுதியாகும். நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டிருப்பவர்களில் பெரும்பாலோருக்கு நீரிழிவு நோய் எவ்வாறு ஏற்படுகிறது என்பதே தெரியாது. இந்த அறியாமையை இந்நூல் அகற்றுகிறது.

குரல்வளைச் சுரப்பியின் வீக்கமும் அயோடின் குறைவும் பற்றிய விவரங்கள் மேனிலைப் பள்ளியில் +2 வகுப்பில் உயிரியல் பாடத்தில் தைராய்டு சுரப்பி பற்றி மீண்டும் படிப்பது போல் சலிப்பூட்டுகிறது.

இந்நூலில் எய்ட்ஸ் பற்றிய பகுதியில், ஆண், பெண் உடல் உறவு என்பதைப் புதிரான ஒன்றாகவோ, அறிந்து கொள்ளக் கூடாத ஒன்றாகவோ ஆக்குதல் கூடாது; பேரறிஞர் பெர்ட்ரண்ட் ரசல் கூறியது போன்று, குழந்தைகள் எப்படி உண்டாகின்றன என்று சிறுவர்கள், இளைஞர்கள் கேட்டால் தெளிவாக அவர்களுக்கு விளக்க வேண்டும்; ஆண் பெண் உடல் உறவு இயற்கையான ஓர் உணர்ச்சி - பசி ஆகும். அது அறிவியல் தொடர்பான ஒரு செய்தியாகும். அதை மறைப்பதும், அறிந்து கொள்ளக் கூடாது என்று கூறி அறியாமையை வளர்ப்பதும் தீமையை உண்டாக்கும் என்று நூலாசிரியர்கள் எழுதியுள்ளனர். 97 ஆண்டுகள் வாழ்ந்த - பலதுறை மேதையாக விளங்கிய -சிறந்த நாத்திகரான பெர்ட்ரண்ட் ரசல் அவர்கள் 1929இல் Marriage and Morals என்ற நூலை வெளியிட்டார். அந்நூலில் பாலியல் கல்வியின் முக்கியத்துவம் பற்றியும் உடலுறவு கொள்வதில் ஆண் பெண் சமத்துவம் பற்றியும் எழுதியுள்ளார். இந்நூல் கடுமையான விவாதத்திற்குள்ளாயிற்று. அமெரிக்க அரசு பல ஆண்டுகள் இந்நூலுக்குத் தடை விதித்திருந்தது.

டாக்டர் பூ.பழநியப்பன் அவர்கள் மகப்பேறு மருத்துவத்தில் வல்லுநர். இந்திய மகப்பேறு மற்றும் மகளிர் நோய் இயல் சங்கங்களின் கூட்டமைப்பின் தலைவராக விளங்கியவர். இவருடைய சீரிய சேவைகளைப் பாராட்டி இந்தியக் குடி அரசுத் தலைவர் இவருக்கு டாக்டர் பி.சி. ராய் விருதை 1997 ஆம் ஆண்டு வழங்கிப் பெருமைப்படுத்தினார். மேலும் டாக்டர் பழநியப்பன் சிறந்த பகுத்தறிவாளர். அவருடைய தந்தையார் காலம் முதல் பெரியார் நெறியைப் பின்பற்றும் பண்பட்ட குடும்பத்தைச் சார்ந்தவர்.

எனவே டாக்டர் பழநியப்பன் அவர்கள் பாலியல் கல்வி பற்றி அறிவியல் பூர்வமான முழுமையான ஒரு நூலை எழுத வேண்டும். கணவன்-மனைவி உடலுறவு என்பது கிட்டத்தட்ட முப்பது ஆண்டுகள் நீடிப்பதாகும். ஆண்-பெண் சேர்க்கை பற்றிய அறியாமைகளை - தவறான புரிதல்களை நீக்குவதாக அந்நூல் அமையும். மாதவிடாய் என்பதைத் 'தீட்டு' என்று இன்றும் பெரும்பாலான வீடுகளில் கருதப்படுகிறது. மாதவிடாய் காலத்தில் பெண்கள் 'தீண்டத்தகாதவர்களாக' ஒதுக்கி வைக்கப்படுகின்றனர். மாதவிடாய் ஓர் இயற்கை நிகழ்ச்சி. மாதந்தோறும் அது ஏன், எவ்வாறு நிகழ்கிறது என்று படித்த பெண்களுக்கே கூடத் தெரியாத அவல நிலை இருக்கிறது.

ஆகவே பாலியல் கல்வி பற்றி - கணவன் மனைவி உடலுறவு, கருத்தறித்தல், கர்ப்ப காலம், குழந்தை வளர்ப்பு முதலானவற்றை உள்ளடக்கிய விரிவான ஒரு நூலை டாக்டர் பழநியப்பன் அவர்கள் உருவாக்கித் தமிழ்ச் சமுதாயத்துக்கு அளிக்க வேண்டும். இத்தகைய நூல் தமிழ் இளைஞர்களை நெறிப்படுத்தித் தமிழர் வாழ்வை வளப்படுத்தும் என்பது திண்ணம்.

- க. முகிலன்

படிப்பகம்

www.padippakam.com



# தென் எல்லைப் போராட்டத்தின் வரலாறு

- நாஞ்சில்

தமிழ்நாட்டில் தென் எல்லைப் போராட்டத்தை முழுமையாக விளக்கும் ஒரு நூல் அண்மையில் வெளியாகியுள்ளது. அப்போராட்டத்துடன், போராட்ட நாயகனின் வரலாறும் பின்னிப் பிணைந்திருப்பதால் அதற்கு ''நேசமணி: ஒரு சரித்திரத் திருப்பம்'' என பெயரிடப்பட்டுள்ளது போலும்.

தென் எல்லைப் போராட்ட வரலாறு பற்றி அறிய முயலுபவர்கள் முன் நிபந்தனையாக இரண்டு செய்திகளை மனதில் கொள்ள வேண்டும்:-

1) இன்றைய கன்னியாகுமரி மாவட்டம் திருவாங்கூர் நாட்டின் ஒரு பகுதியாக இருந்தது. இங்கு 1948 வரை மன்னராட்சியே நடைபெற்றது. (தமிழ்நாட்டின் பிறபகுதிகள் ஆங்கிலேயர் ஆட்சியின்கிழ் இருந்தன)

2) இந்தியா முழுவதும் 15% அல்லது 20% மக்கள் தீண்டாமைக் கொடுமைக்கு ஆளாகியிருந்தனர். ஆனால், திருவாங்கூர் நாட்டில் 75% மக்கள் தீண்டாமை, அண்டாமை, காணாமை ஆகிய கொடுமைகளுக்கு ஆளாகியிருந்தனர். (இங்கு பட்டியலின மக்கள் 5% மட்டுமே)

மேற்கூறிய காரணங்களால் தமிழர் 90% இருந்த பகுதிகளை தமிழ் நாட்டுடன் இணைக்கும் போராட்டம் என்பது உள்ளீடில் கன்னியாகுமரி மாவட்ட மக்களின் 'சமூக விடுதலைப் போராட்டமாகவே' இருந்தது. இத்தன்மையைச் சரியாக விளக்கும் வகையில் இந்நூல் அமைந்துள்ளது பாராட்டத்தக்கது.

**நேசமணி அறிமுகம்:**

மன்னராட்சியானாலும் ஆங்கிலேய அரசின் மேலாண்மைக்கு உட்பட்ட தன்மையில் ஒரு நீதிமன்றம் இங்கும் அமைந்திருந்தது. அங்கு வழக்குரைஞர்களில் மேல்சாதியினர் (பார்ப்பனர், நாயர், வெள்ளாளர்) உட்கார நாற்காலியும், பிற சாதியினர் உட்கார முக்காலியும் (ஸ்டூல்) போடப்பட்டிருக்கும். வழக்குப் போடுவோரில் மேல்சாதியினர் மட்டும் நீதிமன்ற அறைக்குள் செல்லலாம்; பிற சாதியினர் என்றால் வெளியே நின்றுதான் சாட்சி சொல்ல வேண்டும். வழக்குரைஞராகப் பதிவு செய்து நீதிமன்றத்திற்கு வந்த நேசமணி நேரே வந்து நாற்காலியில் அமர்ந்தார். இச்செயல் நீதிமன்ற அவமதிப்பென பிற வழக்குரைஞர்கள் கூக்குரலிட்டும் நேசமணி பின்வாங்கவில்லை. அது போல் தன் சாட்சிகளை வலுக்கட்டாயமாக உள்ளே இழுத்து வந்து விசாரித்தார். இப்படியாகத்தான் 1921ல் ஆரம்பமாயிற்று நேசமணியின் பொது வாழ்க்கை. இந்த நூலும் அச்செய்தியோடு ஆரம்பமாகிறது!

நூலாசிரியர் ஏ.ஏ. ரசாக்கும் குமரிமாவட்டத்தில் பரவலாகத் தெரிந்தவர் தான். திருவாங்கூர் சட்டமன்ற உறுப்பினராகவும், டெல்லி மேல்சபை உறுப்பினராகவும் இருந்தவர். இவர் நல்ல சமூக வரலாறும் அரசியல் வரலாறும் அறிந்தவர் என்பது இந்நூலைப் படிப்போர்க்கு நன்கு விளங்கும். கன்னியாகுமரிப் பகுதியின் தனித்தன்மை வாய்ந்த தமிழ் நடையை நூல் முழுக்கப் பார்க்கமுடிகிறது. அங்கு வழங்கிவரும் பலப்பல கலைச் சொற்களைக் காணமுடிகிறது. பதிவு போல (வழக்கம்போல); குமைந்து போய் (மனதில் குழம்பிப்போய்); தாவளம் (கேம்ப்); கைச்சாத்து (கையொப்பம்); காவட்டு, காக்கட்டை......

'குத்தியிருப்பு மறியல்' (Squating) எனும் புதியதொரு அறவழிப் போராட்டம்பற்றி அறிய முடிகிறது.

**வரலாற்றுக்குறிப்புகள்:**

நூலில் பல வரலாற்றுச் செய்திகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

(அ) இந்தியாவிலேயே 'தீண்டத்தகாதார்' நடத்திய முதல் ஆலய நுழைவுப் போராட்டம்

படிப்பகம்

www.padippakam.com



விவரிக்கப்படுகிறது. 1854-ல் குமாரகோயிலில் (இது ஒரு பெரிய முருகன் கோயில்) நடந்த இக்கிளர்ச்சியில் 150 பேர் கொல்லப்பட்டன ராம்.

ஆ) திருவாங்கூர் திவானாக இருந்த சி.பி. இராமசாமி அய்யர் 1947 ஏப்ரல் 7ஆம் நாள் திருவாங்கூர் பகுதியைத் தனிச் சுதந்திர நாடாக அறிவித்துச் செயல்பட்டுள்ளார்; அதோடு பாகிஸ்தானுடன் இரகசியத் தொடர்பும் ஏற்ப டுத்தியுள்ளார். பின்னர் அவர் ஓடி ஒளிய நேரிட்டள்ளது. (அதுசரி; தனிநாடு கேட்ட பெரியாரைப் ''பிரிவினைவாதி'' எனத் தூற்று வோர், சி.பி. இராமசாமி அய்யரை அவ்வாறு குறிப்பிடுவதில்லையே ஏன்?)

இ) கன்னியாகுமரி மாவட்டத்தை, நாஞ் சில் நாடு எனப் பலரும் குறிப்பிடுவர். ஆனால் அங்கு நாஞ்சில்நாடு, புறத்தாய நாடு, வேணாடு என மூன்று நாடுகள் இருந்த செய்தியை நாம் அறிய முடிகிறது. (வேணாட் டில் ஒரு பகுதியான நெய்யாற்றங்கரை தாலுகா கேரளத்துக்குப் போய்விட்டது)

ஈ) மலையாளிகள் - காங்கிரசுக்காரர், கம்யூ னிஸ்டுக்காரர், சோசியலிஸ்டு எனக் கட்சி வேறுபாடு பார்க்காமலும், சாதி-மத வேறு பாடு பார்க்காமலும் ''அய்க்கிய கேரள கவுன் சில்'' என ஓர் அமைப்பை நிறுவி ஒற்றுமையா கச் செயல்பட்டுள்ளனர். ஆனால் தமிழர் தலை வர்கள் (இன்றுபோல அன்றும்) ஒருவரை ஒருவர் மதியாது, நெல்லிக்காய் மூட்டை போலச் சிதறிக் கிடந்துள்ளனர். தென் எல்லை மாநாட்டில் நிறுவிய ''அய்க்கிய தமிழகக்குழு'' சிந்துவாரற்றுப் போகிறது.

அடக்குமுறை:

திருவாங்கூர்/கேரள முதலமைச்சராயி ருந்த பட்டம் தாணுப்பிள்ளை நடத்திய அடக் குமுறைக் கொடுமைகளை எழுத்தில் அடக்க முடியாது. எனினும் பெருமளவு தகவல்களைத் தந்துள்ளார் நூலாசிரியர்.

இந்நூலில் கண்டுள்ளபடி துப்பாக்கிச்சூட் டில் பலியானோர் - 37; காணாமல் போனோர் 100.க்குமேல்; படுகாயமடைந்தோர் 100.க்கு மேல்; சிறைப்பட்டோர் 1000 ஐத் தாண்டும்; வழக்குகளில் கைதாகாமல் திருநெல்வேலிப் பகுதியில் தலைமறைவு வாழ்க்கை நடத்தி யோர் பல ஆயிரம்.

கன்னியாகுமரி மாவட்ட அம்மன்கோயில் களில் பங்குனி-சித்திரை மாதத் திருவிழாக்க ளில் வில்லுப்பாட்டு ஒரு சிறப்பு நிகழ்ச்சி; 1960.களில் வில்லுப் பாட்டுக் கலைஞர்கள் (கோயிலிலேயே) பட்டம் தாணுப்பிள்ளையின் கொடுமைகளை விளக்கிப் பாடுவர்:

''பட்டம் தாணு சர்க்காரிலே
பட்டபாட்டை நினைக்கும்போது
பஞ்சபூதம் கலங்குதய்யா தோழரே!
-அந்த
பாவி செய்த அநியாயத்தைப்
பாருங்கோ!.....

என மக்கள் அனுபவித்த பல கொடுமைகள் பட்டியலிடப்படும். மக்கள் கண்களில் நீர்வ ழிந்தோடக் கேட்பதை நானே பார்த்திருக்கி றேன். போராட்டம் நடந்தது தென்கோடியில்; ஆனால் அதற்கான களம் அமைத்தது திருநெல் வேலி, சென்னை, மைசூர், நாகபுரி, டில்லி என்று. இவ்வாறு போராட்டத்தைப் பன்முகப் படுத்தி நடத்திச் சென்ற திறமை நேசமணிக்கு நிரம்பவே இருந்திருக்கிறது. எ.எ.ரசாக்கின் அரசியல் திறன் இவற்றுக்கு நன்கு பயன்பட் டுள்ளது.

பட்டம் தாணுப்பிள்ளை பிரஜா சோசிய லிஸ்டு கட்சிக்காரர் (பி.எஸ்.பி). எனவே அவரது கொடுமைகளைக் கண்டித்து ''குத்தியி ருப்பு (குந்தியிருப்பு) மறியல்'' அக்கட்சியின் அகில இந்தியத் தலைவர் கிருபளானியின் டெல்லி வீட்டு முன்னால்; ஆதரவு தேடியது அக்கட்சியின் நாகபுரி மாநாட்டில். போராட் டத்தில் ஈடுபட்டது என்னவோ மூன்றேபேர் தான்; ஆனால் விளைவு - டெல்லி அரசியலில் பெரிய தாக்கத்தையல்லவா ஏற்படுத்திற்று!!

டாக்டர் ராம் மனோகர் லோகியாவும், மதுலிமாயியும் துப்பாக்கிச் சூடுகளைக் கண் டித்துத் தம் கட்சிப் பதவிகளினின்றும் விலகி னர்.

படிப்பகம்

www.padippakam.com



''ஒரு சோசியலிஸ்டு அரசுக்கு மக்களைக் கொல்லும் அதிகாரம் கிடையாது'' என்று உரக்கக் கூவினார் லோகியா. அவர் உண்மையான சோசியலிஸ்டு! (ஆனால் இந்தியா நேருவையல்லவா சோசியலிஸ்டாக விளம்பரப் படுத்துகிறது!)

**தேவிகுளம் - பீர்மேடு:**

திருவாங்கூர் அரசின்கீழ் அடிமைப்பட்டுக் கிடந்த தமிழர் பகுதிகளில் தேவிகுளம், பீர்மேடு, வண்டிப்பெரியாறு, மூணாறு ஆகிய நகர்ப்புறங்களும் அடங்கும். எனவே நேசமணி தலைமையிலான திருவாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ் (தி.த.கா) இப்பகுதி மக்களுக்காகவும் போராடியது. தேயிலை, ரப்பர் தோட்ட முதலாளிகளும் ஆட்சியாளரும் மலையாளிகள்; தொழிலாளர் பெரும் பான்மையினர் தமிழர். தமிழரை அடக்கவென்று மலையாளத் தொழிலாளர் குடியேற்றத்தை முன்னின்று நடத்தியது கேரள அரசு; (ஈழத்தை இது நினைவில் கொண்டு வருகிறதல்லவா!). மலையாளிகள், முதலாளி-தொழிலாளி CITU, INTUC சங்கங்கள்) - அதிகாரி என அனைவரும் கூட்டணியமைத்துத் தமிழர்மீது அடக்கு முறையைக் கட்டவிழ்த்து விட்டனர்.

மதுரை மாவட்ட மேற்கு எல்லையில் அமைந்துள்ளது தேவிகுளம் - பீர்மேடு. 200 மைல்களுக்கு அப்பால் உள்ள நாகர்கோயிலிலிருந்து ஆள் திரட்டி வந்து ஒரு மாதம் தொடர் மறியல் செய்து சிறைபுகுந்த தலைவர்கள் மற்றும் தொண்டர்களின் வீரத்தையும் தியாகத்தையும் பாராட்டும்போது, தாய்த் தமிழகத் தலைவர்களும் கட்சிகளும் என்ன செய்து கொண்டிருந்தனர்? எனக்கேட்கத் தோன்றுகிறது. 'தொண்டர்களுக்கு தி.த.கா- தலைமைக்கு நாங்கள்' எனத் தலைமைதாங்க முன்வந்த ம.பொ.சி., ஜீவானந்தம், அண்ணாதுரை ஆகிய 'மேடைப்பேச்சு வீரர்களை' அப்பகுதி மக்கள் மதியாமல் போனதில் வியப்பென்ன? இப்படிப்பட்ட வீறுகொண்ட போராட்டங்களின் போது ஓடி ஒளிந்து கொண்டவர்கள் இன்று சென்னைவாழ் தமிழர்களிடம் ''தியாகி'' எனும் பட்டம் பெற்றுக்கொள்ளுவது வேடிக்கையாகவும் வேதனையாகவும் உள்ளது.

**தமிழகத்துடன் இணைப்பு:**

1956 நவம்பர் 1 அன்று கன்னியாகுமரி மாவட்டம் தமிழ்நாட்டுடன் முறையாக இணைக்கப்பட்டது. ஃபசல் அலி தலைமையிலான 'மாநிலங்கள் மறு சீரமைப்புக்குழு' பரிந்துரை செய்த பகுதிகள் மட்டும் - (தென் எல்லை - வடஎல்லை) தமிழகத்துக்குக் கிடைத்தன. தென்பகுதி மக்களோடு தாய்த் தமிழக மக்களும் கட்சிகளும் இணைந்து போராடியிருந்தால் விளைவு வேறு மாதிரியாக இருந்திருக்கும். தமிழ்நாட்டுக் காங்கிரசாரும் பொதுவுடைமைக் கட்சியினரும் 'ஏக இந்தியா' வாதிகள்; தி.க., தி.மு.க. போன்ற கட்சிகள் அகண்ட திராவிட நாட்டின் கனவில் இருந்தனர். ஆள்பலம் இல்லாத ம.பொ.சி. யின் தமிழரசுக் கழகம் நடத்தியது வடக்கெல்லைப் போராட்டம். இந்நிலையில் சட்டப்பூர்வமான நடவடிக்கைகளில் ஓரளவேனும் தொடர்ந்து உதவியது தமிழ்நாடு காங்கிரசார் தான்; எனவே தி.த.கா.வும், காங்கிரசில் இணைந்து, ஒரு மாவட்டக் காங்கிரசாகிப் போனது.

ஆனால் இணைப்புக்குப் பின் நடந்த சோகம் மிகக் கொடுமையானது. குஞ்சன் நாடார் போன்ற வீரத்தளபதிகளும், ரசாக் போன்ற அரசியல் திறனாளர்களும், குப்புசாமி போன்ற தொழிற்சங்க வீரர்களும் புடைசூழ வந்த நேசமணியால் தங்களுக்குப் பேராபத்து வரும் எனத் தனிநபர் வழிபாட்டில் மூழ்கிக் கிடந்த தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியினர் உணர்ந்திருக்க வேண்டும். தெளிவான வேலைத்திட்டமும், சன நாயகப்பூர்வமாக விவாதித்து செயல்முறைகளைத் தீர்மானிக்கும் தன்மையும் கொண்ட நேசமணிக்கு சென்னை காங்கிரஸ் தலைவர்களின் நடைமுறைகள் ஒத்துவரவில்லை. இணைப்புக்குமுன் நடந்த போராட்டங்களை நேருவை நம்பிக்கைவிடு

படிப்பகம்

www.padippakam.com



மாறு கூறிய காமராசரின் சமரசத்தை தி.த.கா. மறுத்துவிட்டிருந்ததை காமராசரின் துதிபாடிகள் ஊதிப் பெரிதாக்கியிருந்தனர். இவ்வாறான காரணங்களால் நேசமணி தாய்த் தமிழகத்தில் ஓரங்கட்டப்பட்டார்.

'குளமாவது - மேடாவது; எல்லாம் இந்தியாவுக்குள்தான் உள்ளன' என, 'காமராசர், தேவிகுளம் - பீர்மேடு மீட்பு பற்றிக் கருத்துக் கொண்டிருந்தார். எனவே தாய்த் தமிழகத்துடன் இணைந்தபின், விடுபட்ட நெய்யாற்றங்கரை, தேவிகுளம், பீர்மேடு பகுதிகளை மீட்கும் போராட்டத்தைப் புதுத் தெம்புடன் நடத்திடலாம் எனக் கனவு கண்ட தி.த.கா. தலைவர்களுக்கு ஏமாற்றமே மிஞ்சியது.

1957 தேர்தல்; காமராசரும் சென்னைக் காங்கிரசாரும் தன்னை நடத்திய முறை பிடிக்காத நேசமணி, நாகர்கோயில் பாராளுமன்றத் தொகுதிக்கு வேட்புமனு தாக்கல் செய்துவிட்டு பம்பாய் சென்றுவிடுகிறார். வாக்குப்பதிவு அன்றுதான் திரும்பிவந்தார். எனினும் ஓர் இலட்சம் வாக்கு வித்தியாசத்தில் அவர் பெற்ற வெற்றி அப்பகுதி மக்களின் மனச்சாட்சிக்கு அடையாளம். ஆனால் அதுவே சென்னைவாசிகளின் வயிற்றெரிச்சலுக்கும் காரணமாயிற்று.

இறுதியில் அந்த நேர்மைமிகு வீரத் தலைவனின் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப் போவதாக அறிவிப்புச் செய்தனர். 'புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது'. நேசமணி நிமிர்ந்தே நின்றார்! ஆயினும் பேரிழப்பு தமிழ்நாட்டுக் கல்லவா?

நேசமணியின் மறைவுக்குப் பின்னர் 1969.ல் நாகர்கோயில் பாராளுமன்ற இடைத் தேர்தலில் போட்டியிட்ட காமராசர். ''என்னை நேசமணியின் வாரிசாக ஏற்று ஆதரவு கொடுங்கள்'' என வேண்டுகோள் விடுத்தார்; அதுமட்டுமின்றி, அந்த இடைத்தேர்தலில் போட்டியிடச் சம்மதம் தெரிவிக்குமுன், மாவட்டம் முழுதும் சுற்றுப் பயணம் செய்து, ''நான் போட்டியிட்டால் எனக்கு ஆதரவு தருவீர்களா?'' என மக்களிடையே நேரடியாகக் கருத்துக் கேட்டார். அம்மாவட்டத்திலுள்ள 7-சட்டமன்றத் தொகுதிகளில் 6ல் காங்கிரஸ் கட்சியினரே 1967-ல் வெற்றி பெற்றிருந்தனர்; இச்சூழலில், அகில இந்தியாவிலும் புகழ் பெற்று விளங்கிய காமராசரின் இத்தகைய செயல்பாடுகள் என் போன்ற இளையோர்க்கு அன்று விளங்காததாகவே இருந்தன. 'மாவீரன் நேசமணியைப் புறக்கணித்தது அப்பகுதி மக்களுக்குச் செய்த தீங்கு' என்பதைப் பின்னாளில் காமராசர் உணர்ந்திருப்பார் என்பதே இவற்றுக்குக் காரணம் என்பதை ''நேசமணி: ஒரு சரித்திரத்திருப்பம்'' எனும் நூல் விளக்குகிறது.

தமிழர் அனைவரும் படித்துப் பயன்பெற வேண்டிய ஒரு சமுதாய வரலாற்று நூல் இது!.

# படித்து என்ன, பகுத்தறிவற்று?

த. வேணுகோபால், தக்கோலம்

வெண்ணீறைப் பூசியே வேண்டுமட்டும் பொய் பேசி
கன்னியன் போல் காசைக் கறந்திடுவார் காலமெலாம்
கண்ட பலனென்ன கடவுளரின் கற்பனையால்
கொண்டதென்னவோ கூறு.

ஆத்திகம் பேசியே அறிவை இழந்து விட்டு
நாத்திகத்தை நாவலிக்க ஏசிடுவர் இவரெல்லாம்
நாடு உருப்படவே நாட்டினில் நாட்டிய
நன்மை யென்னவோ கூறு.

படித்திட்ட மேதை யெனப்[illegible]து பேர் கொள்வர்
விடுத்திடார் வீணான வேதாந்தம் எந்நாளும்
எடுப்பார் கைப்பிள்ளையாய் எப்போதும் இருந்துவிடில்
படித்தென்ன பகுத்தறிவற்று?

படிப்பகம்

www.padippakam.com



# சங்கமித்ரா விடையளிக்கிறார்

**வைரமுத்துவின் பெய்யெனப் பெய்யும் மழை படித்தீர்களா? – *த. ரவிச்சந்திரன், சென்னை-13***

பார்த்தேன். கவிதையை விடப் பொய்யுரு [இமேஜ்] முக்கியம் என்பதை அட்டையில் துருத்தும் வைரமுத்துவின் பூதாகாரப் புகைப்படம் காட்டியது.

**26 கட்சிகளின் ஒட்டுப் போட்ட வாஜ்பாய் ஆட்சி அய்ந்தாண்டுகள் நிலைக்குமா? – *கா. அசோகன், பள்ளிப்பாளையம்.***

நிச்சயமாக நிலைக்கும். இவர்கள் பதவிச் சுகத்திற்காகவே கூட்டணி அமைத்து பாரதிய சனதாவுக்கு உயிரும் உயர்வும் கொடுத்தவர்கள். ஜார்ஜ் பெர்னாண்டஸ் என்ன – சரத்யாதவ் என்ன – மம்தா பானர்ஜி என்ன – ராம்விலாஸ் பஸ்வான் என்ன – 1980களில் இவர்கள் ஜனசங்கத்தையோ ஆர்.எஸ்.எஸ்.யையோ ஆதரித்தவர்களா? இல்லை. இன்னமும் எதிர்த்தால் எந்தச் சுகமும் காணாமல் சாவோம் என்ற கவலைதானே இவர்களை பி.ஜே.பி. அணியில் தள்ளியிருக்கிறது!

**உண்மையிலேயே கார்கில் பிரச்சனை என்பது என்ன? – *ஆ.சக்திவேல், ஆத்தூர்.***

உண்மையாகச் சொல்ல வேண்டுமானால் – இந்திய ஊடகங்களும், பாரதிய ஜனதாவும் பாரதிய ஜனதாவின் தேர்தல் வெற்றிக்காகச் செய்த தந்திரம் தான் கார்கில் பிரச்சினை. பாரதிய ஜனதாவின் இன்றைய ஆட்சிக் கட்டிலுக்குக் கீழே நூற்றுக்கணக்கான இந்திய வீரர்களின் சடலங்கள் புதைக்கப்பட்டிருக்கின்றன. பாக்கிஸ்தானின் போக்கும் இதேதான்.

**மாயாவதி 14 இருக்கையும், முலாயம் 26 இருக்கையும் பாராளுமன்றத் தேர்தலில் – உத்திரப் பிரதேசத்தில் பெற்று விட்டார்களே? – *எஸ்.ஜி. கர்ன், திருச்சி,***

இரண்டு பேரும் இணைந்து போட்டியிட்டிருந்தால் 85 இருக்கைகளையும் கைப்பற்றியிருக்கலாம். தாழ்த்தப்பட்டவர்களும் பிற்படுத்தப்பட்டவர்களும் இணைய முடியாத சூழலைத்தான் இனி காங்கிரசும், பி.ஜே.பி.யும் செய்யும். இவர்களும் தூரப்பார்வை இன்றித் தன்னகம் பாவநிலை அரசியல் செய்து மேல் சாதியினரிடம் தோற்பார்கள்.

**தனி ஒரு பெண்ணாக பிரியங்கா, அமேதியில் எப்படி சோனியாவுக்கு வெற்றியைக் குவிக்க முடிந்தது? - *வி.கணேசன், மயிலாடுதுறை***

பிரியங்காவின் அழகு, சுறுசுறுப்பு, கடுமையான உழைப்பு ஒரு பக்கம்; அரண்மனைக் கிளிகளைப் பார்த்துப் பரவசப்படும் சராசரி இந்தியனின் அடிமுட்டாள்தனமான பாமரத்தனம் இன்னொரு பக்கம். டயானா செத்தபோது நூற்றுக்கணக்கான இந்திய மடையர்கள், கண்ணீர் சிந்தினார்கள். காட்டுமன்னார் குடியில் பாம்பு கடித்துச் சாகும் தாழ்த்தப்பட்ட பெண்ணின் உயிரை விட, டயானாவின் உயிர் எப்படி உசத்தியானது? இந்த முட்டாள்தனம்தான் நேரு குடும்பத்துப் பேரன் பேத்திகளைக் கூட நமக்குத் தலைவர்களாக்குகிறது.

**எப்படி மூப்பனார் பற்றி அத்தனைச் சரியாக 'ஊற்றி மூடப்பட்ட கட்சி' என்று உங்களால் சொல்ல முடிந்தது? - *க.ராம்குமார், கும்பகோணம்.***

தமிழக அரசியலில் வெற்றிபெற நடிக்க வேண்டும், பேச வேண்டும், எழுத வேண்டும். இதில் எதுவும் மூப்பனார் செய்யவில்லை; இனி கற்றுக் கொண்டு செய்யவும் வாய்ப்பு இல்லை. பாக்கு மெல்லுவதை ஒரு ராஜ தந்திரமாக தமிழக மக்கள் ஏற்றுக் கொள்ளும் வாய்ப்பும் இல்லை.

பிறகு எப்படி வெல்ல முடியும்? ஒற்றை இலக்க ஓட்டுகளைத் தவிர்க்கத்தானே மூப்பனார், கிருஷ்ணசாமி – திருமாவளவன் என்ற சிவலிங்கங்களிடம் சரணாகதி அடைந்தார்? அப்படியும் தேர் திராவிடக் கட்சிகளிடம் தப்ப முடியவில்லையே!

**மன்சூர் அலிகான், சந்திரசேகர் என்று சினிமா நடிகர்கள் தேர்தலில் அடிவாங்கி விட்டார்களே, ஏன்? – *கா.வள்ளி, தூத்துக்குடி***

சினிமாவும் ஒருவகையான கூலி வேலை

படிப்பகம்

www.padippakam.com



அதில் தலைகாட்டுகிறவர்கள் கொம்பாதி கொம்பர்கள் இல்லை என்பதை மக்கள் கொஞ்சம் கொஞ்சம் புரிந்து கொண்டு வருகிறார்கள் என்ப தால்.

**பாகிஸ்தானில் ராணுவ ஆட்சி வந்து விட்டது எதைக் காட்டுகிறது?** - *எஸ்.வெங்கட்நாராய ணன், திருநெல்வேலி*

எந்த ஆட்சி எத்தனை ஆண்டு இருந்தாலும் பாகிஸ்தான் மக்களுக்கு நல்வாழ்வையும் விழிப்பு ணர்வையும் யாரும் தரப்போவதில்லை என்பதை.

**காங்கிரஸ் கட்சி வரலாறு காணாத வீழ்ச்சியாக மிகக் குறைந்த பாராளுமன்ற உறுப்பினர்க ளைப் பெற்றது எதனால்?** – *அ. முகமது அலி, திருவண்ணாமலை*

நிச்சயமாக சோனியா ஒரு வெளிநாட்டுக்கா ரர் என்பதால் அல்ல. சரியான தேர்தல் வியூகங் களை வகுக்கக் கூடியவர்கள் அக்கட்சியில் இல்லை என்பதால்தான்.

**சுப்பிரமணியசுவாமி டிபாசிட் இழந்து விட் டாரே?** – *இ. துரைசாமி, திருவிடைமருதூர்*

இந்த நாட்டுப் பார்ப்பன ஊடகங்கள் உரு வாக்கிய தலைவர்களில் ஒருவர் சுப்பிரமணிய சாமி. தேர்தல் என்பது மக்கள் மன்றத்தில் நடப்பது. உலகின் வேறு பகுதிகளாக இருந்தால் சுப்பிரமணியசாமி நடத்துவது போன்ற இழிந்த அரசியலுக்கு அவர் உதைபடுவதிலிருந்து தப்பித் திருக்க முடியாது.

**வெளியில் இருந்தே ஆதரவு என்று சந்திரபாபு நாயுடு கடைசியில் சொல்லி விட்டாரே?** – *கா. மெய்யப்பன், அரியலூர்*

விந்திய மலைக்குத் தெற்கே – சுயமரி யாதை உள்ள ஒரே மனிதர் சந்திரபாபு நாயுடுதான். தன் அரசியல்வாதிகளைப் பதவி சுகத்தில் பழக்கி விட்டால் ஆந்திர மக்களுக்கு நன்மை செய்வது கெட்டுப் போகும் என்று மிகச் சரியான நிலைப் பாடு மேற்கொண்டிருக்கிறார்.

**கலை என்றால் சினிமா மட்டும்தானா? கலை மணி என்று போட்டுக் கொண்டு தினமணி, தினந்தோறும் சினிமா பிரச்சாரம் செய்வது நியாயமா?** – *வி.நாகராசன், சென்னை-5.*

அது பிரச்சாரம் இல்லை. வியாபாரம். கதா காலட்சேபம். தெருக்கூத்து, பாவைக் கூத்து, கரகாட்டம் எல்லாம் பற்றி எழுதினால் யார் படிக்கிறார்கள்? கசப்பான செய்திகளைக் கொடுத்து, வியாபாரத்தையும் கெடுத்துக் கொள்ள – கோயங்கா என்ன மார்க்சிய பெரியாரி யப் பொதுவுடைமைக் கட்சியின் கொள்கை பரப்புச் செயலாளரா?

**சிறு பத்திரிகைக்காரர்களைப் பற்றிஉங்கள் கருத்து என்ன?** – *வழக்கறிஞர் டி. சுவாமிநா தன், நாகப்பட்டினம்.*

நேரத்தையும் பொருளையும் வீணாக்கிக் கொண்டு திரியும் பிழைக்கத் தெரியாதவர்கள் தான். சிற்றிதழ்ச் செய்தி நசன், பயணம் சுப்பிர மணி, மேடை வீரபாண்டியன், எழுச்சி தலித் முரசு சந்திரகேசன், கோடு ஜெயந்தன் போன்ற சிலர் சேர்ந்து திட்டமிட்டு உழைத்தால் – குமுதம், ஆனந்தவிகடன் எல்லாம் மக்கள், குப்பையில் வீசி எறியச் செய்யும் யுகப் புரட்சி யைப் பத்திரிகை உலகில் கொண்டு வந்துவிட முடியும். அதைவிட்டு விட்டு இமயமலைக்குள் ளாக எலி பாதை போட முயற்சிக்கிற மாதிரி இவர்கள் தனித்தனியாகத் துரப் பணம் போடுகி றார்கள். [இந்தத் திருக்கூட்டத்தில் அடியேனும் ஒருவன்... ஹா.. ஹா..!]

**இராமாயணத்தில் மேனேஜ்மெண்ட் டிப்ஸ் என்று இந்தியன் வங்கி சேர்மன் டி.எஸ்.ராக வன் எழுதுவதைப் படிப்பதுண்டா?** – *இரா.ம ணிகண்டன், விருத்தாசலம்*

மலத்தில் அரிசி பொறுக்கும் வேலை என்பார் பெரியார், இதை. பார்ப்பனர்கள் வருண தர்மத்தை நிலை நாட்ட அதையும் செய்கிறார் களே. நாம் ஏன் அதைப் படிக்க வேண்டும்?

**79 வயதுஜெமினி கணேசனின் நாலாவது மனைவி 35 வயது ஜூலியானா காதல் பற்றி உங்கள் கருத்து என்ன?** – *வி.சுந்தர்ராஜன், மயிலாடுதுறை*

ஏங்க, நாங்க விகிதாச்சார இடஒதுக்கீடு, புதிய அரசியல் சட்டம் போன்ற 'அல்ப' சமாச்சா ரங்களில் முழுகிக் கிடக்கிறோம். சத்தியமா, இந்த உலகப் பிரளயச் சங்கதிகள் பற்றி எங்க ளுக்கு ஒன்றும் தெரியாதுங்க...

படிப்பகம்

★

www.padippakam.com



# இந்திய அரசியல்: கெட்டதிலிருந்து கழிசடைக்கு!

மக்கள் நாயக நாடு என்று சொல்லப்படுகிற நாடுகளில் முதலாவது இடத்தில் இருப்பது இந்தியா. ஏனெனில், இங்கு தேர்தல் மூலம் மய்ய அரசும், மாநில அரசாங்கங்களும் 1946 முதல் - 1952 முதல் கடந்த 53 ஆண்டுகளாக அமைந்துள்ளன. அதாவது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களே 53 ஆண்டுகளாக ஆட்சிப் பொறுப்பில் இருக்கிறார்கள்.

இத்தன்மைக்கு இந்திய அதிகார வர்க்கமும், நீதித் துறையும், அரசியல் கட்சிகளும், இக்கட்சிகளால் அமைக்கப்பட்ட ஆட்சிகளும் மற்றும் பத்திரிகைத் துறையும், வாக்காளர்களும் உண்மையில் நிறையப் பங்களிப்புச் செய்திருக்கிறார்கள்.

இது ஒரு சாதனை என்று சொல்லப்படுகிறது.

இந்த 53 ஆண்டுக் கால மக்களாட்சி தான் 100க்கு 40 பேர்களை எழுத்தறிவு இல்லாதவர்களாக வைத்திருக்கிறது; 100க்கு 40 பேர்களை ஏழ்மைக் கோட்டுக்குக் கீழே வைத்திருக்கிறது என்பதை இந்த ஆட்சிகள் விளைத்த வேதனை என்பதை வசதியாகவே இவர்கள் எல்லோரும் மறைத்து விடுகிறார்கள்; மறந்து விடுகிறார்கள்.

இதில் முதலாவது பரிசு காங்கிரசுக்கே.

1952 தேர்தல் முதல் 1999 வரை நடைபெற்ற 13 மக்களவைத் தேர்தல்களில், எப்போதும் இல்லாத அளவுக்கு 1999 தேர்தலில் மிகவும் குறைவான இடங்களைப் பிடித்தது காங்கிரசுக் கட்சியே.

காங்கிரசுத் தலைவரான நேரு 1959இல் தம் வாரிசு அரசியலை நிலைக்க வைத்திட வழி அமைத்தார்; நேருவின் மகள் இந்திரா காந்தி 1969இல் காங்கிரசில் தம் குடும்ப ஆதிக்கமும், மத்தியத்துவப்படுத்தப்பட்ட கட்சி நடப்பும் மேலோங்க அடித்தளம் அமைத்தார்; 1989இல் காங்கிரசு ஒரு கொள்கைக்காரக் கட்சி என்பதை உலகம் அறிய இராஜீவ் காந்தி செய்து காட்டினார். நேருவின் குடும்ப ஆட்சி 1991இல் மறைந்தது. மத்தியத்துவப்படுத்தப்பட்ட காங்கிரசின் தலைவரான பார்ப்பன நரசிம்மராவ் ஆட்சி பகற்காலத் திருடர்களின் ஆட்சியாக 1991 முதல் 1996 வரை நீடித்தது. இப்படி 1948 இலேயே காங்கிரசு ஆட்சி மாறிவிட்டதை, காந்தியார் தாம், முதலாவதாக, 1948 சனவரியில் வெளிப்படையாகச் சொன்னார். அவர் அன்று போட்ட கணக்குச் சரியானது என்பதை - 53 ஆண்டுகளில், 46 ஆண்டுகள் ஆட்சி செய்த காங்கிரசு எண்பித்துவிட்டது.

ஆனாலும் அதற்குப் பிறகு இங்கு மக்களாட்சி மலர்ந்து விட்டதாக எல்லோரும் சொல்லுகிறார்கள். நேருவின் குடும்ப வாரிசான எவராவது ஓர் ஆளை முன்னிறுத்தி இந்தியாவில் காங்கிரசின் கொள்ளை ஆட்சி மீண்டும் வர்வும் நீடிக்கவும் வகை செய்ய வேண்டும் என்கிற எண்ணம் 1999லும் பலருக்கு வந்திருக்கிறது என்றால் காங்கிரசும் மற்ற எல்லாக் கட்சிகளுமே இதற்குக் காரணம் ஆகும்.

காங்கிரசுக்கு எடுபிடியாக 1969 முதலே திராவிடக் கட்சிகள் மாறிவிட்டன; அம்பேத்கரியக் கட்சிகளும் அப்படியே மாறிவிட்டன.

1977க்குப் பிறகு 1999 வரையில் பொதுவுடைமைக் கட்சிகளும், லோகியா வாதக் கட்சிகளும் அப்படியே மாறிவிட்டன்.

இதன் நேரடி விளைவு என்ன?

மக்கள் விரோதக் கட்சியான காங்கிரசுக்கு மாற்றாக வளர்ந்திருக்க வேண்டிய பொதுவுடைமைக் கட்சிகளும், லோகியா வாதிகளின் கட்சிகளும்; திராவிடக் கட்சிகளும், அம்பேத்கரியக் கட்சிகளும் காங்கிரசின் கலாசாரத்தில் அடிபட்டுப், பதவிக்கும் பணத்துக்கும் பகட்டுக்கும்

படிப்பகம்

www.padippakam.com



ஆளாகி விட்ட நிலைமை மிக வேகமாகவே இங்கு வளர்ந்துவிட்டது.

கொள்ளைக்காரக் கட்சியான காங்கிரசுக்கு மாற்றாக, இந்திய அளவில் பார்ப்பன - வேதமத - பழமை வாத ஆதிக்கக் கட்சியான ஆர்.எஸ். எஸ் சின் அரசியல் பிரிவான பாரதிய சனதா வளர்த்தெடுக்கப்பட்டு, இன்று ஆட்சியில் அமர்த்தப்பட்டு விட்டது. இதற்கும், மேலே குறிப்பிடப்பட்ட எல்லோரும் துணை நின்றார் கள்; இன்றும் துணை போகிறார்கள்.

*1951*இல் ஜன சங்கம் என்ற பேரால் அரசிய லில் குதித்த ஆர்.எஸ்.எஸ். *1948* பிப்ரவரியில் புனாவில் இதற்கான இரகசியத் திட்டத்தை வகுத்தது. ''இந்தியாவில் உள்ள எல்லா அரசி யல் கட்சிகளிலும், சமூக மற்றும் மக்கள் சார்ந்த அமைப்புகளிலும் ஆர்.எஸ்.ஏஸ் காரர்கள் ஊடு ருவ வேண்டும்'' என்பதே அந்தத் திட்டம். இதைப் பையப் பைய அவர்கள் செய்தார்கள்.

தென்னாட்டில் தி.மு.க வின் துணையுடன் *1975* நவம்பரில் ஆர்.எஸ்.எஸ் ஊடுருவிற்று. வட மாநிலங்களில் லோகியா வாதக் கட்சிகளி டையே *1977*இல் ஆர்.எஸ்.எஸ் ஊடுருவிற்று. மாணவர் அமைப்புகள், தொழிலாளர் அமைப்பு கள், மகளிர் அமைப்புகள், அரசு ஊழியர் அமைப்புகள் என எல்லாவித அமைப்புகளிலும் திட்டமிட்டு ஆர்.எஸ்.எஸ் ஊடுருவிற்று. இதற்கு அவர்களால் கையாளப்பட்ட வியூகம் தான் - வலிமையானதொரு திட்டம்தான் - இந்துத்துவா பாதுகாப்பு.

இது *1989* வரையில் எங்குமே அதிகப்பல னைத் தரவில்லை.

*1990*இல் உ.பி.யிலும் மேற்கு இந்தியாவி லும் இது நல்ல பலனைத் தந்தது.

தமிழ் நாட்டில் *1984*இல் ஓர் இடத்திலும்; *1989*இல் *3* இடங்களிலும்; *1991*இல் *15* இடங்களி லும்; *1996*இல் *37* இடங்களிலும் போட்டியிட்ட பாரதிய சனதாக் கட்சி ஓர் இடத்தில் கூட மக்களவைத் தேர்தலில் வெற்றி பெற முடிய வில்லை. ஏன்? ஏன்?

தமிழ்நாட்டில் 26 ஆண்டுகளாக எதிரும் புதிருமாக நின்று, தமிழர்களை இரண்டு அணிக ளாகப் பிரித்து, ஏறக்குறைய சமமான பலத்துடன் விளங்கிய - விளங்குகின்ற தி.மு.க. - அ.இ.தி. மு.க என்கிற திராவிடக் கட்சிகள் 1977 முதல் 1996 வரையில் மாறி, மாறி காங்கிரசுக்கு நல்ல சவாரிக் குதிரைகளாக - எடுபிடிகளாகப் பயன்பட் டன. தமிழ்நாட்டுச் சாதியக் கட்சிகளும், இஸ்லா மியக் கட்சிகளும், மற்றக் கட்சிகளும் பெரிய அடியாட்களான தி.மு.க. - அ.தி.மு.க. அணியில் அவ்வப்போது இணைந்து கொண்டன.

நாடாளுமன்றத் தேர்தலில் *1998* தேர்தலில் தான் முதன் முதலாக திராவிடக் கட்சியான - சமமான அளவில் தமிழர்களைப் பிரித்து வைத் திருக்கிற அ.தி.மு.க.வுடன் பாரதிய சனதாக் கட்சி கூட்டு வைத்தது.

தமிழ்நாட்டில் 5 நாடாளுமன்றத் தொகுதிக ளில் போட்டியிட்டு, 3 இடங்களில் முதன் முதலாக பா.ச.க். வெற்றி குவித்தது 1998இல் தான். தமிழகத்தில் ஊர்தோறும் தெருத்தோறும் தாமரைச் சின்னத்தையும், காவிக் கொடியையும், வாஜ்பேயின் மாபெரும் புகழையும்(!) பெரிய அளவில் பரப்பிய - கொள்ளைக்காரியான - பார்ப்பனத்தியான - சராசரிப் பெண்ணுக்குரிய எந்தப் பண்பாடும் இல்லாத அகம்பாவி செயலலி தாவுக்கு, மேலும் சில எடுபிடிக் கட்சிகள் அன்று உடனிருந்து, தமிழ்நாட்டில் பா.ச.வுக்கு இதனால் ஒரு மதிப்பைத் தேடித் தந்துவிட்டனர்.

எந்தப் பண்பாடும் இல்லாத செயலலிதா அவிழ்த்துப் போட்டு விட்டு ஆடுவதை அறை யில்தான் செய்ய வேண்டும் என்று இல்லாமல் - பார்ப்பனப் புத்தியின் காரணமாக அம்பலத்தி லேயே அவிழ்த்துப் போட்டுவிட்டு ஆடினார். இந்த அடாவடித்தனத்தைத் தாள முடியாத நிலை ஏற்பட்டவுடன் கண்ணைப் பொத்திக் கொண்டு கதறிய மாபெரும் தலைவர்(!) வாஜ்பேயிக்குக் கைகொடுத்துக் காப்பாற்றிட, அறையிலும் அம்ப லத்திலும் நன்றாக ஆடத் தெரிந்து கொண்ட கலைஞர் கருணாநிதி ஓடோடிக் கை கொடுத்தார். அ.தி.மு.க.வுக்குச் சரிசமமான பலம் உள்ள தி.மு.க. தனக்கு எடுபிடியாகக் கிடைத்தவுடன் வாரி அணைத்து உச்சிமோந்து கேட்டதை எல் லாம் தந்து நல்ல அடிமைகளாக இவர்களை ஆக்கிக் கொண்டது பா.ச.க.

இந்த அடிமைகள் கோரியபடி 8 பேருக்கு - தமிழர்களுக்கு அமைச்சர் பதவி தரப்பட்டு விட்டது.

படிப்பகம்

www.padippakam.com



இது இன்று தி.மு.க.வையும் அதன் தொங்கு சதையான கட்சிகளையும் எங்கே கொண்டு போய்விட்டிருக்கிறது?

1996 தேர்தலிலும், 1998 தேர்தலிலும் அறையிலும் - அம்பலத்திலும் 1979 முதல் மூப்பனாருடன் வைத்திருந்த கூட்டை முறித்துக் கொண்டு - பல்வேறு உதிரிக் கட்சிகளையும் ஓடி வாரி அணைத்துக் கொண்டு, எல்லோருடனும் பா.ச.க.வின் காலடியில் தி.மு.க. சரணம் ஆவதில் கொண்டு போய் விட்டு விட்டது.

''காமராசர் ஆட்சி அமைப்போம்'' என்று 1998க்குப் பிறகு உரத்துக் கூவத் தொடங்கும் மூப்பனார் யார்?

1. இந்திரா காலத்திலும், இராஜீவ் காலத்திலும் காங்கிரசுக் கட்சியின் மேலிட ஆணைப்படி 'தரகு போன அரசியல் சாணக்கியர்';

2. 1991 - 1996இல் கொள்ளைக்காரி செயலலிதாவுடன், கொள்ளைக்கார நரசிம்மராவ் வைத்திருந்த கூட்டுக்கு மவுனமாக வெண்சாமரம் வீசியவர்;

3. 1996 இல், ஒரு கொள்ளைக்காரன்தான் நரசிம்மராவ் என்பதை வசதியாக மறந்து விட்டு, அவர் ஒரு கொள்ளைக்காரியோடு - பழைய சதிர் ஆட்டக்காரியான செயலலிதாவோடு கூட்டு வைக்கக் கூடாது என்று கூறிப் போர்க்கொடி தூக்கித் தன்னை ஒரு 'புனிதராக'க் காட்டிக் கொண்டவர்.

இவர் பல ஆயிரம் ஏக்கர் நிலங்களுக்கு - நூற்றுக்கணக்கான மாளிகைகளுக்கு இன்றும் சொந்தக்காரர்.

தந்தை குமாரசாமியும் - தாய் சிவகாமியும் வாழ்ந்த வீட்டைத் தவிர வேறு ஓர் அசையாச் சொத்தோ, அசையும் சொத்தோ, ரொக்கப் பணமோ இல்லாத - பொதுவாழ்வில் புடம் போட்ட சொக்கத் தங்கமாக - மொட்டை மரமாக விளங்கியவர் - காமராசர். இவருக்கும் மூப்பனாருக்கும் எதில் - எத்தனை விழுக்காடு ஒற்றுமை?

*(2.10.1975 பிற்பகலில் மறைந்த காமராசரிடம், 30.9.1975 காலை 9 மணிக்கு பெரியாரைப் பற்றி நேர்காணல் செய்த நான், 1957 முதல் அவரைப் பல தடவைகள் கண்டு உரையாடியவன்.)*

இன்றைய பொதுவாழ்வில் - தி.மு.க. என்கிற குதிரைமேல் ஏறி நின்று (!) கொண்டதால் பெரிய கட்சியாக - காமராசர் போன்ற பெரிய தலைவராக ஆகிவிட்டதாக இவரும் நினைத்துக் கொண்டுவிட, இதை 1998 வரையில் கலைஞரும் கண்ணை மூடி நம்பிக் கொண்டு, அதனால் 1998 நாடாளுமன்றத் தேர்தலில் இரு கும்பலும் மண்ணைக் கவ்விய பிறகு, இந்த இருவருக்கும் புதிய 'ஞானம் உதயம்' ஆகி இருக்கிறது.

நரசிம்மராவ் ஊரறிந்த கொள்ளைக்காரர் - அவர் செயலலிதாவோடு கூட்டுச் சேரலாம்; நேரு குடும்பம் 1969 முதல் கொள்ளைக்காரக் குடும்பம் - 1989 இல் உலகமே நாறிய கொள்ளைக் கூட்டம் - ஆனால் இவர்கள் மட்டும் செயலலிதாவோடு கூட்டுச் சேராமல் இருந்தால் போதும் - இப்படிப்பட்ட காங்கிரசின் கூட்டு மட்டும் கிடைத்தால் மூப்பனாருக்கு அது இனிக்கிறது. ஆனால் தமிழ்நாட்டின் தலைசிறந்த கொள்ளைக்காரி செயலலிதா கூட்டு மட்டும் கசக்கிறது. இதுவா உண்மை? இல்லை, இல்லவே இல்லை. தன் வீட்டில் அன்றொரு நாள் சதிர் ஆடிய நாட்டியக்காரியை, 1991 இல் நரசிம்மராவ் இணைத்துக் கொண்டபோது வாயை மென்று கொண்டிருந்துவிட்டு, இப்போது, 'ஊழலின் சின்னம்' என்று வெளியில் கூறிவிட்டு, பழைய சதிர் ஆட்டக்காரியிடம் கூட்டுச் சேராமல், ஒதுங்கி நின்று 'தூயவர்' போல் பீற்றிக் கொள்பவர்தாம் மூப்பனார்.

காமராசர் ஆட்சியை அமைக்க இது இவருக்கு ஒரு வழியாம். இது பொய் இல்லையா?

இதன் விளைவாக, பட்டியல் குல மக்களின் தலைவர்கள் பலரையும் இணைத்துக் கொண்டு, 1999 தேர்தலில் தமிழ்நாட்டில் பதிவான வாக்குகளில் 9.35% விழுக்காட்டை - 26.53 இலக்கம் வாக்குகளைக் குவித்து விட்டார், மூப்பனார்.

இப்படி இவர்கள் வாக்குகளைப் பிரித்திருக்காவிட்டால் - தேசிய மக்கள் நாயக முன்னணி (NDA) என்கிற மதவாதக் கூட்டணியினர் - திருப்பத்தூர், திண்டிவனம், திருச்செங்கோடு

படிப்பகம்

www.padippakam.com



முதலான தொகுதிகளில் வெற்றி பெற்றிருப்பார்கள் எனக் கூற முடியாது.

ஏறக்குறைய 14 நாடாளுமன்றத் தொகுதிகளில் தி.மு.க. - பா.ச.க. கூட்டணிக்கு நேர இருந்த தோல்வியைத் தடுத்திட த.மா.கா. கூட்டணியின் பங்களிப்பு மிக அதிகம்.

இது தி.மு.க.வுக்கு - தேசிய மக்கள் நாயக முன்னணிக்கு ஓர் அபாய மணி. இது போகப் போகத் தெரியும்.

தமிழக வட மாவட்டங்களில் வன்னியர் வாக்கு வங்கியைப் பெரிய அளவில் பெற்றிட தி.மு.க. அணிக்கு இத்தேர்தல் உதவியது உண்மை. இது ஒரு மாற்றம். ஆனால் தமிழகம் முழுவதிலும் உள்ள பட்டியல் குலத்தினரின் வாக்கு வங்கியில் - நிரந்தரமாக உள்ள தி.மு.க. உறுப்பினர்களின் வாக்கில் கூடப் பெரும் பகுதியைத் தி.மு.க. இழந்து விட்டது என்பது கெட்டியான உண்மை.

வழக்கம் போல் முக்குலத்தோர் - கொங்கு வேளாளர் வாக்கு வங்கி எம்.ஜி.ஆர். காலத்திலும், இன்றும் அ.தி.மு.க. அணிக்குச் சாதகமாக இருப்பது போல், இந்த 1999 லிலும் ஏறக்குறைய அப்படியே இருந்திருக்கிறது. மேலும் கூடுதலாக பாரம்பரியமாக அ.தி.மு.க. உறுப்பினர்களாகவும், நேரு குடும்ப விசுவாசிகளாகவும் உள்ள பட்டியல் குலத்தினர் பலரின் வாக்கு - தி.மு.க.வினரை விட அ.தி.மு.க.வினருக்கு அதிகமாகவே 1999 தேர்தலில் கிடைத்துள்ளது.

இதுவும், இனி தி.மு.க.வுக்கு சரிவைத் தருவதுதான்.

1999 இல் திருவட்டாறு, நத்தம் தொகுதிகளில் நடைபெற்ற சட்டமன்றத்திற்கான இடைத் தேர்தல்களில் தி.மு.க. அணி தோற்றது இவர்க்ளுக்கு இன்னொரு அபாயமணி.

தி.மு.க. - பா.ச.க. கூட்டினால், காலங்காலமாக இந்தியாவை நாசப்படுத்திய காங்கிரசிடமிடருந்த அரசாட்சி - இந்திய மத்திய ஆட்சி - உண்மையான அதிகாரம் படைத்த ஆட்சி இந்தக் கேடுகெட்ட கும்பலிடமிருந்து, இவர்களை விடக் கேடர்களான - கழிசடைக் கும்பலான பாரதிய சனதாக்காரர்களிடம் ஒப்படைக்கப்படுவதில் முடியப் போகிறது.

தேசிய மக்கள் நாயக முன்னணியில், இன்று, பா.ச.க. பெற்றுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் இடங்கள் 182.

இவர்களில் பட்டியல் குலத்தினர் (S.C.) 25 பேர்; பட்டியல் பழங்குடியினர் (S.T.) 21 பேர்; இஸ்லாமியர் ஒருவர்.

பெண்கள் 15 பேர்கள். இவர்க்ளின் வகுப்பு வாரி விவரம் தெரியவில்லை.

மீதம் உள்ள 120 பேர்கள் பிற்படுத்தப்பட்டோரும், மேல் சாதியினரும் ஆவர். இவர்களில் பார்ப்பனரும் ஜாட்களும் இராசபுத்திரருமே அதிகம் பேர்.

நாடாளுமன்றத்தில் 1998 இல் 180 ஆக இருந்த பா.ச.க.வினர் இன்று 182 ஆக வளர்ந்திருக்கிறார்கள்.

இந்த வளர்ச்சி 200 ஆக இப்போது மாறி விடாமல் தடுத்தவர்கள் சமாஜ வாதக் கட்சி, பகுஜன் சமாஜக் கட்சியினர்தாம்.

இந்த 182 பேர் வருவதற்குக் கூட, பிகாரில் காட்டாட்சி நடத்தும் லாலுவின் சரிவும், பீகாரில் செல்வாக்காக உள்ள பஸ்வானும், ஃபெர்னாண்டசும், நிதிஷ்குமாரும் பட்டியல் குலத்தினரையும் பிற்படுத்தப்பட்டோரையும் பா.ச.க. கூட்டணிக்கு அடிமைப்படுத்தியதும்; அரியானாவின் அடியாள் கூட்டமான தேவிலால் - சௌதாலா கொள்ளைக்காரர்கள் பா.ச.க.வுக்குத் தெண்டனிட்டதுமே தலையான காரணங்கள்.

மேற்கு உ.பி.யில் பாரதிய சனதாவுக்கு ஏற்பட்ட சரிவு, பீகாரில் பாரதிய சனதாவுக்கு ஏற்பட்ட கூடுதல் வளர்ச்சி, அரியானாவிலும் ஆந்திராவிலும் பா.ச.க. கூட்டணிக்கு ஏற்பட்ட பெருவளர்ச்சி, தமிழகத்திலும், குஜராத்திலும் பாரதிய சனதாவுக்கு இன்று ஏற்பட்டுள்ள வளர்ச்சி; காங்கிரசுக்கு ஏற்பட்டுள்ள மாபெரும் சரிவு இவற்றால் நாம் அறியும் அரசியல் பாடம் என்ன?

மேற்கு உத்தரப் பிரதேசத்தில் சாதிப் பிடிப்பினால் (சமார் ஜாடவ்) கன்சிராமின் பகுஜன் சமாஜ் கட்சி பெற்றுள்ள வலிமை; மேற்கு உ.பி. யாதவரிடையேயும் இஸ்லாமியரிடையேயும் முலாயம்சிங் பெற்றுள்ள செல்வாக்கு; வடக்கு

படிப்பகம்

www.padippakam.com



பிகாரில் சாதிப்பிடிப்பினால் (பஸ்வான்) ராம்விலாஸ் பஸ்வான் என்கிற லோகியாவாத - அம்பேத்கரியவாதக் கட்சியினர் பெற்றுள்ள செல்வாக்கு; மத்திய பிகாரிலும் தெற்கு பிகாரிலும் கிழக்கு பிகாரிலும் அடர்த்தியாக உள்ள யாதவ் - கொய்ரி - குர்மி என்கிற பிற்படுத்தப்பட்ட வகுப்புகளின் தலைவர்களான நிதிஷ் குமார், லாலு யாதவ், சரத் யாதவ் ஆகிய இவர்கள் பெற்றுள்ள வலிமை; தமிழ்நாட்டில் பெரியார் - அம்பேத்கர் பேரால் அரசியல் பண்ணும் தி.மு.க.வும், அதன் கூட்டணிக் கட்சியினரின் தலைவர்களும் பெற்றுள்ள செல்வாக்கு - இத்துணையும் ஒன்றாகத் திரட்டப்பட்டு, பிற்படுத்தப்பட்டோர் - மிகப் பிற்படுத்தப்பட்டோர் - பட்டியல் குலத்தினர் - பட்டியல் பழங்குடியினர் - இஸ்லாமியர் - கிறிஸ்தவர் எனும் மத்ச்சிறுபான்மை மக்கள் வென்றெடுக்கப்பட்டு - இவர்கள் அம்பேத்கர் காட்டிய மக்கள் நாயக ஆட்சி அமைப்புக்கான வழியில் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையினராக இடம் பெற்றாலன்றி, 100க்கு 85 பேராக உள்ள ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களுக்கு சமூக - அரசியல் - பொருளாதார விடுதலை என்றுமே வராது என்பது தான்.

இங்குள்ள தொழிற்சங்கவாதப் பொதுவுடைமைக்காரர்களால் இது என்றுமே ஆகாது. இவர்கள் இந்தியாவில் இருந்து செயல்படுபவர்களாக இன்றும் இல்லை; அன்றும் இல்லை.

இங்குள்ள அம்பேத்கரிய வாத - லோகிய வாத - பெரியாரிய வாதக் கட்சிகளால் மட்டுமே இது இங்கே நடத்தப்பட முடியும். இதற்காகவும் இதை நோக்கியும் எந்தப் பங்களிப்பும் செய்யாமல், கேடு கெட்ட இந்திரா காங்கிரசுக்கு ஒரு சாரார் முட்டுக் கொடுப்பதும்; கழிசடை மதவாத - பார்ப்பனியவாத பாரதிய சனதாவை நின்று நிலைக்க வைத்திட இன்னொரு சாரார் பாடுபடுவதும் சில ஆயிரம் அரசியல்வாதத் திருடர்கள் பொறுக்கித் தின்னவும், நாற்காலிச் சுகம் பெறவும், பகட்டாக வாழவும் வழிவகுக்க மட்டுமே பயன்படும்.

இது கி.பி. 2001லேயே தமிழகத்தில் தெளிவாகத் தெரியும்; அடுத்த இரண்டு ஆண்டுகளிலேயே இந்திய அளவில் இது உறுதியாகப் புரியும்.

22.10.99 வே. ஆனைமுத்து

# தேர்தல் கூத்து

து. தில்லைவனம்

"இந்தியா உலகின் மிகப்பெரிய மக்கள் நாயக நாடு. இந்திய மண்ணில் மக்கள் நாயகம் மிக ஆழமாக வேரூன்றியுள்ளது," என்பது இந்தியாவில் நடைபெற்ற தேர்தல் பற்றி மற்ற மக்கள் நாயக நாடுகள் சூட்டியுள்ள புகழாரம் ஆகும்.

'மக்கள் நாயக ஆட்சியின் மாறா இலக்கணமாகத் திகழ வேண்டிய கோட்பாடு: 'மக்களின் நன்மைக்காக - மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட - மக்கள் பிரதிநிதிகளால் நடத்தப்படும் ஆட்சி' என்பதாகும்.

ஆனால் இந்தியாவில் 1952 முதல் நடைபெற்ற தேர்தல்களில் யாருடைய நலன்களைக் காப்பாற்றுவதற்காக வெகு மக்கள் வாக்களித்துள்ளனர் என்பதைக் கவனித்தோமென்றால், இதுவரை நடந்த தேர்தல்களில் பொதுமக்கள் நலன்களைப் பேணிகாக்கும் பிரதிநிதிகளைப் பெருமளவில் நாம் தேர்ந்தெடுக்கவில்லை என்பது புலனாகும்.

பண நாயகம்
மேல்சாதி நாயகம்
பழமைவாதிகள் நாயகம்
அதிகார வர்க்க நாயகம்

போன்றவற்றைக் கட்டிக் காப்பவர்களைத் தேர்ந்தெடுப்பதற்காகவே நாடாளு மன்றத்திற்கு 1998 வரை நடந்து முடிந்த 12 பொதுத் தேர்தல்களும் நடத்தப் பெற்றன என்பது தெள்ளத் தெளிவாகத் தெரிகின்றது.

படிப்பகம்

www.padippakam.com



இப்போக்கு 1952 இல் இலை மறைவு காய் மறைவாகத் தோன்றி அண்மைக்காலத் தேர்தல்களில் மிகவும் வெளிப்படையாகவே தெரிந்தது.

1999 செப்டம்பர் - அக்டோபர் திங்கள்களில் 13ஆவது மக்களவைக்கு நடைபெற்ற பொதுத் தேர்தலின் போது நாடு முழுவதும் விவாதிக்கப்பட்ட மக்கள் பிரச்சினை என்ன என்பதைச் சற்றே எண்ணிப் பாருங்கள்.

முன்னெப்போதும் இல்லாத ஒரு தனிப் போக்காக, இந்தத் தேர்தலில்தான் இந்தியாவின் பல மாநிலங்களிலும் உள்ள பிராந்தியக் கட்சிகள் மற்றும் அனைத்திந்தியக் கட்சிகள் 'தேசிய மக்கள் நாயக முன்னணி' என்கிற பெயரால், பாரதிய சனதாக் கட்சியின் தலைமையில், பொதுத் தேர்தலுக்கு முன்பே அமைத்துக் கொண்டன.

சிலகட்சிகள் மட்டும் இந்திரா காங்கிரசுக் கட்சியின் தலைமையில் இயங்க ஏற்ற வண்ணம் தனி அணி அமைத்துக் கொண்டன. இந்த அணிகளுக்கு வெளியில் நின்ற இடது சாரிக் கட்சிகள் தாங்கள் போட்டியிடாத இடங்களிலெல்லாம் இந்திரா காங்சிரசுக் கூட்டணியை ஆதரித்தன. எனவே இதனை மூன்றாவது அணி என்று கூற முடியாது.

முலாயம் சிங்கின் சமாசவாதிக்கட்சி, மூப்பனாரின் தமிழ் மாநிலக் காங்கிரசு, சரத் பவாரின் தேசியவாதக் காங்கிரசு, கன்சிராமின் பகுசன் சமாசக் கட்சி போன்ற கட்சிகள் மட்டுமே இந்த இரண்டு அணிகளிலும் சேராமல் மக்களிடம் வாக்குக் கேட்டன.

இந்தியாவில் நூறு கோடி மக்கள் உள்ளனர். அவர்களின் பிரச்சினைகள் நூற்றுக்கணக்கில் கூடவா இல்லாமலிருக்கும்? ஆனால் தேர்தலுக்கு நின்ற கட்சிகள் அல்லது கூட்டணிகள் வெகு மக்களின் எந்தப் பிரச்சினையையாவது முன்னிறுத்தினவா?

பாரதிய சனதாக் கட்சியாகட்டும், இந்திரா காங்கிரசின் அணித் தலைமையை ஏற்றிருந்த கட்சிகளாகட்டும், அல்லது ஓரிடத்தில் கூட வெற்றி பெறாது வரலாறு படைத்த தமிழ் மாநிலக் காங்கிரசு போன்ற கட்சிகளாகட்டும் நான்கைந்து திங்கள்கள் நீடித்த தேர்தலுக்கு முந்தைய நெடிய காலக்கட்டங்களில் பொதுமக்கள் பிரச்சினையில் எதையாவது தூக்கிப்பிடித்து மக்களிடம் வாக்குக் கேட்டனவா என்பதைச் சற்றே எண்ணிப் பாருங்கள்.

''நிலையான ஆட்சிகள்'' அமைந்தால் அவை அடித்தளத்து மக்களின் பிரச்சினைகள் அனைத்தையும் தீர்த்துவிட்டதைப்போல, ''நிலையான ஆட்சி'' ''அய்ந்து ஆண்டுகள் நீடிக்கக் கூடிய ஆட்சி'' என்பதே மாபெரும் தேர்தல் பிரச்சினையாக ஆக்கப்பட்டது.

அதேபோல் இத்தாலியில் பிறந்த சோனியா இந்தியப் பிரதமர் ஆகலாமா, கூடாதா என்பது பற்றி நாடு முழுவதும் அரசியல் பட்டிமன்றங்கள் அரங்கேற்றப்பட்டன.

பனிமலைமீது நடந்து முடிந்த கார்கில் போரில் வெற்றி நாயகன் வாஜ்பாயா? படைவீரர்களா? என்பது பற்றியும், அந்நியப் படைகள் ஊடுருவலை முன்கூட்டியே தடுக்காத பாரதிய சனதாக்கட்சி நாட்டுப்பற்று உள்ளதா? நாட்டுப்பற்று இல்லாததா? என்பது பற்றியும் இலாவணிகள் பாடப்பட்டன.

குறைந்தபட்சம், இந்த நாட்டை காங்கிரசுக் கட்சி ஆளுவது நல்லதா, பாரதிய சனதாக் கட்சி ஆளுவது நல்லதா என்ற பிரச்சினைகூட மக்கள் முன் வைக்கப்பட வில்லை. அதுபோலவே இவ்விரு கட்சிகளின் அல்லது கூட்டணிகளில் உள்ள உறுப்புக் கட்சிகளின் சாதக பாதகமான கூறுகளை விளக்கும் வண்ணம் மக்களிடம் எதையும் எடுத்துச் செல்லவில்லை. இது அகில இந்திய நிலை.

தமிழ்நாட்டில் தேர்தல் பரப்புரையை இரண்டு வாரங்கள் முன்பாகவே தொடங்கிய செயலலிதா மேடைதோறும் வாஜ்பாயைப் பற்றி ஒரு பாட்டை மட்டும் பாடியே தனது தேர்தல் பரப்புரையை முடித்துக் கொண்டார்.

நான்கு திங்கள்களுக்கு முன் இதே பாரதிய சனதாக் கட்சியின் தலைமையிலான அமைச்சரவையில் தாங்கள் பங்கு பெற்றிருந்ததனாலோ என்னவோ, பாரதிய சனதாக் கட்சி ஒரு (இந்து) மத அடிப்படை வாதக் கட்சி என்பது அஇஅதிமுக வினால் மக்கள் முன் வைக்கப்படவே இல்லை.

இந்த வேலையை ஓரளவிற்காவது செய்ய முயன்றவை பொதுவுடைமைக் கட்சிகள் மட்டுமே. ஆனால் தமிழ்நாட்டில் காங்கிரசுக் கட்சியுடன் அவை தேர்தல் கூட்டு கொண்டிருந்த காரணத்தால் இந்திய மக்களின் அடையாளங்களை அழிக்கப் போகும், 'உலக வணிக நிறுவனம்' போன்ற அமைப்புகளால் ஏற்படக்கூடிய தீமைகளைப் பற்றிப் பொதுவுடைமைக் கட்சிகளால் கூட எடுத்துரைக்கப்படவில்லை.

படிப்பகம்

www.padippakam.com



ஏனெனில் இத்தீமைகளுக்கெல்லாம் வித்திட்டதும் வழி வகுத்ததும் இந்திரா காங்கிரசுக் கட்சியின் ஆட்சியல்லவா?

செயலலிதாவைப் பின் தொடர்ந்து ஏறத்தாழ அவர் பேசிய எல்லா ஊர்களிலும் மேடை போட்டுப் பேசிய தமிழ் நாட்டு முதலமைச்சர் மக்கள் பிரச்சினையைப் பற்றியோ, தம் கட்சியின் மூன்றரை ஆண்டுக்கால ஆட்சியின் சாதனை பற்றியோ பேசாது, செயலலிதாவின் பாட்டுக்குப் பொழிப்புரையும், கருத்துரையும் கூறியே தனது தேர்தல் பரப்புரைகளை முடித்துக் கொண்டார். அப்பேச்சுகளில் நக்கல் நன்றாகவே இழையோடியது.

ஊழலையும் எதிர்ப்போம்; மதவாதத்தையும் எதிர்ப்போம் என்று கச்சை கட்டிய தமிழ் மாநிலக் காங்கிரசு தலைமையிலான கூட்டணி, கூட்டணி ஒப்பந்தம் போட்டு வேட்பாளர்களை அறிவிக்கும் முன்பாகவே மற்ற இரு கூட்டணிகளும் தேர்தல் வேலைகளைப் பெருமளவுக்கு முடித்திருந்தன.

இந்தக் கூட்டணிக்குச் சொந்தத்தில் பத்திரிகை கூடக் கிடையாது. இவர்கள் போட்ட தேர்தல் கூட்டங்களும் எண்ணிக்கையில் குறைவானவை; குறைவான எண்ணிக்கையிலேயே மக்களைத் திரட்டிய கூட்டங்கள் அவை.

இந்தக் கூட்டங்களில் கூட இந்து அடிப்படை மதவாதக் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்துள்ளவர்களால் வரப்போகும் தீமைகள் பற்றியோ, செயலலிதா சசிகலா - தினகரன் ஆகியோரின் ஊழல் முக்கூட்டு பற்றியோ யாரும் விரிவாக விளக்கவில்லை.

எனவே, இந்தத் தேர்தலில் பாரதிய சனதாக் கட்சியின் தலைமையிலான கூட்டணியோ, இந்திரா காங்கிரசுக் கட்சியின் தலைமையிலான கூட்டணியோ, பொதுவுடைமைக் கட்சிகளின் தலையிலான கூட்டணியோ, உதிரிக் கட்சிகளின் கூட்டணியோ அல்லது சுயேச்சைகளோ இந்திய வாக்காளர்களிடம் அவர்களின் அன்றாட வாழ்க்கை பிரச்சினை பற்றியோ, நாட்டின் பொருளாதாரச் சீரழிவு பற்றியோ, அண்டை நாடுகளுடனான உறவு சீர் கெட்டு வருவது பற்றியோ, வெளியுறவுக் கொள்கை குழப்பமாக இருப்பது பற்றியோ, இன்றைய உலகின் அரசியல் பொருளாதார நிலைமை பற்றியோ எதுவும் கூறாமல், ஒரு மாபெரும் தேர்தல் கூத்தை மிகவும் வெற்றிகரமாக நடத்தி முடித்துவிட்டன.

இதற்கு இந்தியாவிலுள்ள அதிகார வர்க்கமும், மக்கள் நாயகத்தின் நான்காவது தூண் என்று கூறப்படும் பத்திரிகை உலகமும் முழுவதுமாகத் துணை போயின. அவ்வளவு மக்கள் பற்று இவர்களுக்கு!

இந்தியாவில் மக்களை அரசியல் படுத்தாமல், இளந்தலை முறையினர்க்கு அரசியல் கருத்துகளைக் கற்பிக்காமல் இருப்பது இங்குள்ள ஓட்டுப் பொறுக்கும் கட்சிகளுக்கு மிகவும் கை வந்த கலை. இது வாக்குப் பொறுக்குவதற்குச் சாதகமானது; அதிகார வர்க்கத்திற்கும் ஏற்புடையது.

ஆனால் பத்திரிகைகள் வேறுவிதமாக அல்லவா - மக்களை அரசியல் படுத்த அல்லவா முயன்றிருக்க வேண்டும்? ஆனால் அவைகளும் திட்டமிட்டு, வேண்டுமென்றே மாபெரும் தவறுகளை அல்லவா செய்துள்ளன!

ஆண்டுக்காண்டு தேர்தல் வந்தாலும், தேர்தல் செலவுகளுக்காகப் பொதுமக்களின் வரிப்பணம் வீணடிக்கப்பட்டாலும், ஓரளவுக்காவது மக்கள் அரசியல் தெளிவு பெற இருந்த வாய்ப்புக் கூடத், திட்டமிட்டே இவர்களால் தட்டிப் பறிக்கப்பட்டு விட்டது.

மக்களிடம் எந்தக் கொள்கை பற்றியும் எந்தவித விவரமும் கூறாமல், மக்கள் மன்றத்தில் உண்மையான பிரச்சினைகள் எதுவும் விவாதிக்கப்படாமல் இந்தத் தேர்தல் நாடகம் நடந்து முடிந்துள்ளது.

பிணைத் தொகையைப் பறிகொடுத்த தேர்தல் வேட்பாளர்களின் நிலையைவிட, வாக்காளர்களின் நிலைமைதான் இந்தியப் பொதுமக்களின் நிலைமைதான் - மிகவும் பரிதாபத்திற்குரியது.

மக்களுக்கு அரசியல் அறிவூட்டும் வேலைகள் மிகப்பரவலாகவும் திட்டமிட்டும் மேற்கொள்ளப்படாவிட்டால், இனி வருகின்ற தேர்தல்களில் இதைவிடவும் மோசமானதும், பொது மக்களுக்குத் தொடர்பேதும் இல்லாததுமான பிரச்சினைகளை மக்கள் முன்வைத்தே காலிகளும், சாராயக்கூலிகளும், கறுப்புப்பணக்காரர்களின் கையாள்களும், சாதி மத வெறித் தலைவர்களும் வாக்குக் கேட்டுப் பெற்றுவிடுவார்கள். இந்த ஏமாற்றுக் கலையில் வல்லவர்கள் இந்திய அரசியல் வாதிகள்.

எச்சரிக்கை! எச்சரிக்கை!!

படிப்பகம்

www.padippakam.com



# பெரியார் திராவிடர் கழகம் - மயிலாடுதுறையில் நடத்திய 'இராவண லீலா' இன எழுச்சி மாநாடு

9.10.99 அன்று காலை 11 மணியளவில் மயிலாடுதுறை நடிகவேள் எம்.ஆர்.இராதா நினைவரங்கில் முனைவர் சக்குபாய் தலைமையில் கருத்தரங்கம் தொடங்கியது. பெரியார் திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் தொடக்கவுரை நிகழ்த்தினார். பேராசிரியர்கள் செயராமன், அ.மார்க்ஸ், சிவப் பிரகாசம் மற்றும் எஸ். நடராசன், அழகிரி ஆகியோர் கருத்தரங்கில் பங்கேற்று உரையாற்றினர். பிற்பகல் 3.30 மணியளவில் கவிஞர் அறிவுமதி தலைமையில் தணிகைச் செல்வன், தமிழேந்தி, தமிழமுதன், பாவரசு, கவியன்பன் ஆகியோர் எழுச்சிமிக்கக் கவிதைகளை வழங்கினர்.

மாலை 6 மணியளவில் சுயமரியாதை வீரர் மாயவரம் நடராசன் நினைவரங்கில் 'தடைசெய் இராமலீலா'வை உரை வீச்சு நிகழ்ச்சி பெரியார் தி.க. தலைவர் ஆனூர் செகதீசன் தலைமையில் தொடங்கிற்று. அமைப்புச் செயலாளர் மு. பாலகுரு தொடக்கவுரை ஆற்றினார். பல்வேறு தோழமை அமைப்புகளின் சார்பில் பெ. மணியரசன், சீர்காழி மா. முத்துச்சாமி, பேராசிரியர் சரசுவதி, நா. இரகுபதி உள்ளிட்ட தோழர்கள் உரை நிகழ்த்தினர். நிகழ்ச்சியின் தொடக்கத்தில் முரசொலி முகிலன் குழுவினரின் எழுச்சிமிக்க கலை நிகழ்ச்சி நடைபெற்றது. எல்லா நிகழ்ச்சிகளிலும் கருஞ்சட்டை இளைஞர் பட்டாளமும் பொது மக்களும் திரளாகக் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

செய்தி: தமிழேந்தி

## செந்தமிழ்ச் சிலப்பதிகார உலகளாவிய மாநாடு

### மலேசியத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்

கோலாலம்பூரில் டிசம்பர் திங்கள் 11, 12 காரி, ஞாயிறு கிழமைகளில்
செந்தமிழ்ச் சிலப்பதிகார
உலகளாவிய மாநாடு நடத்துகிறது.

சிலப்பதிகாரக் காப்பியத்தில் உள்ள தமிழின் சிறப்பையும், தமிழர் நாகரிகத்தையும், பண்பாட்டுக் கூறுகளையும் ஆய்ந்து, தமிழ் மறவர்களின் மறமாண்புகளையும், உலகத் தமிழர் உணர்ந்திட வகை செய்கிறது.

தொடர்பு முகவரி:

**Malasiyan Movement for Tamil Culture**
**Tamil Panpagam, No. 1983, 2nd Floor,**
**Jalan Tun, Sambandan, Brick Fields, 50470, Kualalumpur**
**Tel: 2747844**

படிப்பகம்

www.padippakam.com



# கொள்கை ஏடுகளும் நம் கடமையும்

கருத்துப் பரப்பலுக்கு இன்று மிகப்பல ஊடகங்கள் உள்ளன.

தொலைக்காட்சி, வானொலி, கணினி இணையம் என்பவை மிகவும் கவர்ச்சியான - விசையான ஊடகங்கள். நாடகம், திரைப்படம், பொதுக் கூட்டம், இசை நிகழ்ச்சி, நாட்டிய நிகழ்ச்சி, மாநாடுகள், விழாக்கள் என்பவை ஏற்கெனவே செல்வாக்குப் பெற்றுள்ள ஊடகங் கள்.

இவ்வளவும் வந்த பிறகும் நாள் தாள்கள், கிழமை இதழ்கள், பிறை இதழ்கள், திங்கள் இதழ்கள் முதலியவற்றின் செல்வாக்குக் குறைந் துவிடவில்லை: நாள் தோறும் இந்த அச்சிடப் பட்ட கருத்துப் பரப்புக் கருவிகள் (Print Media) எண்ணிக்கையில் பெருகிக் கொண்டே உள்ளன. ஆனால் செய்திகளைத் தருவதற்காகவும்; வாணி பம் - தொழில் - பக்தி - சோதிடம் இவற்றைப் பற்றிய கருத்துகளைப் பரப்புவதற்காகவுமே வெளிவரும் ஏடுகளின் எண்ணிக்கை வளர்ந்தி ருக்கிற அளவுக்கு, அறிவியல் அறிவை- அரசி யல் அறிவை-புரட்சிகரச் சிந்தனையை- ஆராய்ச்சி மனப்பான்மையை வளர்க்கிற ஏடுக ளின் எண்ணிக்கை வேகமாக வளரவில்லை. அத்துடன் துப்பறியும் ஏடுகள், காதல் புதினக் கதைகள், நடிகர்-நடிகைகள் பற்றிய கிசுகிசுப்பு ஏடுகள்தான் இளந்தலை முறையின் எல்லாத் தரப்பினராலும் விரும்பிப் படிக்கப்படுகின்றன.

இப்படிப்பட்ட ஏடுகளை நடத்துவோர் வணிக நோக்குடன் நடத்துவதில் கெட்டிக்காரர் களாக இருக்கிறார்கள். ஆனால் மாறுதல் எது வும் எந்தத் துறையிலும் வரக் கூடாது என்பதற் காகவே ஏடுகளை நடத்துவதில் இவர்கள் மிக வும் குறியாக இருக்கிறார்கள். வெகு மக்கள் பழமைச் சிந்தனைக்கு அடிமைப்பட்டவர்கள். எனவே அவர்கள் விரும்புகிற தன்மையில் தங்களின் ஏடுகளை வெளியிட்டு வலிமையா கவே வளர்த்தெடுக்கிறார்கள். இது எளிது.

இப்படிப்பட்ட ஏடுகள் அன்றாட அரசிய லின் போக்கை உருவாக்குவதிலும் முதன்மை யான பங்கு பெற்றுள்ளன. இதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

இவ்வளவு வலிமை வாய்ந்த பத்திரிகை ஊடகம், கடந்த 150 ஆண்டுகளாகப் பார்ப்பனர் பனியா, மார்வாரிகள், தொழிலதிபர்கள் ஆகியோ ரின் ஆதிக்கத்திலேயே உள்ளது. இவர்களை எட்டிப் பிடிக்க வேண்டும் என்கிற முயற்சியில் வெற்றி பெற்ற மற்றவர்கள்கூட இவர்களை விடவும் வேகமாக பழமைச் சிந்தனையையே தூக்கிப்பிடிக்கிறார்கள்; மாறுதல் வருவதற்கு எதி ரான தன்மையிலேயே செய்திகள், கட்டுரைகள், விமர்சனங்கள், கருத்துப்படங்கள், தொடர்கதை கள் இவற்றைத் தங்கள் ஏடுகளில் வெளியிடுகி றார்கள்.

இவ்வளவுக்கும் இடையில் தான், மக்களி னத்தின் எல்லாத்துறை விடுதலையையும் நோக் கமாகக் கொண்ட மார்க்சிய - இலெனினிய மாவோ இய - பெரியாரிய - அம்பேத்கரியக் கொள்கை ஏடுகள் தோன்றுகின்றன; ஆரவார மாக வெளிவருகின்றன; ஆர்வலர்களால் தொடக்கத்தில் பெரிய வரவேற்பைப் பெறுகின் றன. ஆனால் நீண்ட காலம் தாக்குப்பிடிக்க முடியாமல் பல ஏடுகள் இடையிலேயே துவண்டு விழுகின்றன. இப்படிப்பட்ட ஏடு களை அதிக எண்ணிக்கையினர் விரும்பி விலை கொடுத்து வாங்கிப் படிப்பது இல்லை; பல ஏடுகளில் படிப்போர் பெற விரும்புகிற எல்லாத் துறைச் செய்திகளும், பல சுவைகளும் இருப்ப தில்லை. எல்லாவற்றுக்கும் மேலாக, ஏடுகளை வாழ வைக்கிற விளம்பர வருமானம் கிடைப் பது இல்லை.

பன்னாட்டு மூலதனங்கள் இங்கே குவியத் தொடங்கிய பிறகு - பொதுத் துறைத் தொழில் நிறுவனங்களும், வணிக நிறுவனங்களும் முடம் படுத்தப்பட்டுத் தனியார் துறை நிறுவனங்கள் ஊக்குவிக்கப்பட்ட பிறகு மாறுதல் வேண்டாத பழமை வாதிகள் வெளியிடும் ஏடுகளுக்கு மலை யளவில் விளம்பரங்கள் குவிகின்றன. இதன்மூ லம் ஏடுகளை நடத்துவோருக்கும் கொழுத்த வருமானம்; ஏடுகளில் பணிபுரிவோருக்கும் நல்ல ஊதியம்; விளம்பரம் தருவோருக்கும் நல்ல பயன்.

படிப்பகம்

www.padippakam.com



இப்படிப்பட்ட சூழலில், இங்கே மார்க்சியத்தை முதன்மைப்படுத்திடவும், வென்றெடுத்திடவும் ஏற்ற வழிமுறைகளாகப் பெரியாரியத்தையும் அம்பேத்கரியத்தையும் தூக்கிப் பிடிக்கிற ஏடுகள் வளருவது மிக மிகத் துன்பமானதாகவே இருக்கிறது; இடர் மிகுந்ததாகவே உள்ளது.

படிக்காத பெரிய கூட்டத்தைச் சேர்ந்த படித்த சிலர்; வறுமையிலும் ஏழ்மையிலும் உழலும் பெரிய கூட்டத்திலிருக்கும் மாத வருமானக்காரர் சிலர் பத்தியத்துடன் மருந்து உண்பது போல் கருதி, மார்க்சிய பெரியாரிய ஏடுகளை வாங்குகிறார்கள்; வாங்குகிறவர்களில் சிலர் மனங்கொண்டு இவற்றைப் படிக்கிறார்கள்; பலர் இவற்றை மனங்கொண்டு படிப்பது கூட இல்லை. இருப்பினும் ''சிந்தனையாளன்'' போன்ற சில சிற்றேடுகள் உயிரை வைத்துக் கொண்டு உள்ளன.

'சிந்தனையாளன்' ஒரு வார ஏடாக 17-8-1974இல் தொடங்கப்பட்டது; இன்று வார ஏடாகவே 26ஆவது ஆண்டில் வெளிவந்திருக்க வேண்டும். ஆனால் இந்த வார ஏடு பிறை ஏடாக மாறி, பிறை ஏடு மாத ஏடாகக் குறுகி, இடையில் அதுவும் வெளிவராமல் நிறுத்தப்பட்டு, இன்று 22ஆம் ஆண்டில் மாத ஏடாகவே வெளிவருகிறது. இதற்கு உயிர்த்தண்ணீர் ஊற்றுகிற சில தோழர்களால் தான், இது மிகப்பெரிய கடன் சுமையோடு 22ஆம் ஆண்டில் வெளிவருகிறது.

உலக அளவிலும் இந்திய அளவிலும் பெரியாரியத்தை - தமிழர் விடுதலையை - ஈழ விடுதலையை முன்னிறுத்த வேண்டும் என்கிற ஒரே நோக்கத்தோடு 1993 அக்டோபரில் தொடங்கப்பட்டது. ''PERIYAR ERA'' ஆங்கில மாத ஏடு. திராவிட இயக்கம் வெளியிடுகிற ஆங்கில ஏடுகளில், இது தனித்தரத்துடன் விளங்குகிறது. இது அய்ந்தாண்டுகளாத் தன்னலங் கருதாத தோழர் எஸ்.ஏ. டேவிட் அவர்களின் தனி முயற்சியாலும், மா.பெ.பொ.க தோழர்களின் ஒத்துழைப்பாலுமே தொடர்ந்து வந்து இன்று 6 ஆவது ஆண்டில் இது அடியெடுத்து வைத்துள்ளது.

''சிந்தனையாளன்'', ''Periyar Era'' ஏடுகள் ஆண்டுக்கட்டணம், வாழ்நாள் கட்டணம், வளர்ச்சி நிதி, சிறு அளவிலான விற்பனைத் தொகைகள் இவற்றை மட்டுமே வருவாய் வழியாகக் கொண்டவை. இவற்றின் எண்ணிக்கையைப் பெருக்குவது என்பது மிகவும் பெரிய அளவிலான உடலுழைப்பை, ஓயாத அலைச்சலை, அதிக நேரச் செலவை உள்ளடக்கியதாகும். இதைச் சுமந்தே தீர வேண்டும் என்று உறுதி பூணுகிற நாம், இதைச் செய்வது மிகவும் கடினமானது.

இந்தக் கடினமான தன்மை உள்ள பணியை மேற்கொள்வதை ஒருநாள் - ஒரு மாதம் - ஓர் ஆண்டு - ஒரு தடவை மட்டும் நாம் செய்தால் போதாது. என்றும் - ஆண்டு முழுவதும் இடையீடு இன்றி இப்பணியைச் செய்து கொண்டே இருக்க வேண்டும்.

நம் கொள்கை பரப்பப்பட நாம் ஒவ்வொருவரும் தொடர்ந்து தந்தே தீரவேண்டிய பெரிய விலை இது.

அவரவர் சொந்தத் தொழிலுக்கும் குடும்பப் பணிகளுக்கும் மாதம் 30 நாள்களிலும் உழைப்பது எல்லோராலும் தொடர்ந்து சுணக்கமின்றிச் செய்யப்படுகிறது. இவர்களில் சிலரேனும் சொந்தப் பணிகளுக்கு மாதத்தில் 28 நாள்கள்; கட்சிப் பணிகளுக்கு மாதத்தில் 2 நாள்கள் என்று முழுமையாக ஒதுக்கிச் செயல்படுவது இன்றைய நம் உடனடித் தேவையாகும்.

இது மாபெரும் தொண்டு; மதிப்பிட முடியாத பெரிய ஈகம்.

மா.பெ.பொ.க. மாவட்டப் பொறுப்பாளர்களும், தோழர்களும், நண்பர்களும் அருள் கூர்ந்து இதனை ஒரு கட்டளை போல் ஏற்றுத் தொடர்ந்து செயல்பட்டால் நம் ஏடுகள் வெற்றிகரமாகவே வெளிவரும்.

ஏடுகள் இல்லாமல் நம் இயக்கம் வளராது; எந்த அமைப்பும் வளராது.

வகையாகத் திட்டமிட்டுப் பிடிவாதமாகச் செயல்பட்டால் ''சிந்தனையாளன்'' மாதா மாதம் 10 ஆயிரம் படிகள் அளவுக்கும்; ''Periyar Era'' 3 ஆயிரம் படிகள் அளவுக்கும் வளர முடியும். அதனால் கட்சியும் வலிமை பெறும்.

இதைச் செய்து காட்டிட முன் வாருங்கள்! குழுவாகச் சேர்ந்து சென்றே செயல்படுங்கள்! தொடர்ந்து முனைப்புடன் செயல்படுங்கள்!

இது நம் கடமை.

1.11.99 வே. ஆனைமுத்து

★

படிப்பகம்

www.padippakam.com



# சனவரி 1, 2 - 2000 வேதாரண்யம் மாநாட்டுச் சிந்தனைகள்

## மக்களே மேலோர்! மக்களே வெல்வர்!!

- சங்கமித்ரா

சனவரி 1, 2 - 2000ல் நாகை மாவட்ட வேதாரண்யத்தில் மாநாடுகளை நடத்துவதுஎன்பது சனவரி 1998 - காஞ்சிபுரம் மாநாட்டில் முன்மொழியப்பட்டு, சனவரி 1999 செயங்கொண்டம் மாநாட்டில் உறுதி செய்யப்பட்டது.

**ஏன் - வேதாரண்யம்?**

பெரியார் இயக்கத்துக்கு பிரமாண்டமான பங்களிப்பைச் செய்தது தஞ்சை - குறிப்பாகக் கிழக்குத் தஞ்சை. தொடர்ந்து நடந்த போராட்டங்களில் 1000 - 2000 பேர் என்று கலந்து கொண்டவர்கள் கிழக்குத் தஞ்சையின் ஏழ்மை - ஏதிலி - விவசாயக் கூலிகள். பெரியார் இயக்கத்துக்காக இவர்கள் தங்களை அழித்துக் கொண்டார்கள் என்று கூடச் சொல்லலாம்! கிழக்குத் தஞ்சையின் உயிர் பிரச்சினை - சில பண்ணைகள் - பல கூலிகள் என்பதுதான். பார்ப்பன ஒடுக்குமுறை - கோவில் - ஆதீனம் - குன்னியூர் - முடிகொண்டான் - உடன்குடி - சம்பங்குடி - பாலக்குறிச்சி என்கிற பண்ணைகள் மூலமே நடந்தது.

**ஆட்சியில் திராவிடர் இயக்கம் - ஏழ்மையில் திராவிடர் தொண்டர்கள்**

1967 முதல் ஆட்சியில் திராவிடர் இயக்கம் இருக்கிறது. திராவிடர் இயக்கத் தலைவர்களில் கருணாநிதி, அன்பழகன், நெடுஞ்செழியன், மன்னை நாராயணசாமி என்ற பலர் - பழைய தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். இருப்பினும் கிழக்குத் தஞ்சையின் வளர்ச்சிக்கு எந்த உருப்படியான திட்டமும் இல்லை. கிழக்குத் தஞ்சை கெட்டதிலிருந்து கழிசடை நிலைக்குப் போய்விட்டது.

**ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் தரிசாக**

கிழக்குத் தஞ்சையில் பயணம் செய்யும் எவருக்கும் நெஞ்சு உருகும். ஆயிரம் ஏக்கர் - இலட்சம் ஏக்கர் என்று நிலங்கள் தரிசாகக் கிடக்கின்றன. இன்றைய திருவாரூர் - நாகை - தஞ்சை என்று மூன்று மாவட்டங்களில் வாழும் சுமார் 30 இலட்சம் மக்கள் - இவர்களில் 60% பேர் நிலமற்ற தினக் கூலிகள் - உலகின் மோசமான ஏழைகளாக - மனித உருவில் விலங்குகளாக வைக்கப்பட்டுச் சுரண்டப்படுகிறார்கள். காவிரி வறண்டு விட்டது. நிலங்கள் தரிசாகப் போடப்பட்டு விட்டன. நாகை துறைமுகம் புறக்கணிக்கப்பட்டு விட்டது. நாகை இரயில்வே ஒர்க் ஷாப் திருச்சிக்கு மாற்றப்பட்டு விட்டது. நாகை ஸ்டீல் ரோலிங் மில் மூடப்பட்டு விட்டது. பெருந் தொழில் முதலீடு இல்லை. சிறு தொழில் ஊக்குவிப்பு இல்லை. வேதாரண்யம் கள்ளத் தோணித் துறையாகி விட்டது.

**மனச்சாட்சி இல்லையா - அரசியல் தலைவர்களுக்கு?**

★ இந்தப் பகுதியில் பெருந்தொழில் முதலீட்டுக்கு அரசு ஏன் முயற்சிக்கவில்லை?

★ ஆயிரக்கணக்கான சிறு தொழில் - குறுந் தொழில்களை ஏன் வளர்க்கவில்லை?

★ ஜப்பான், வியட்நாம், கொரியா பகுதிகளில் உள்ள மக்கள் அடர்த்திப் பிரதேச சிறு தொழில்களான பனியன் வேலைகள், பொம்மை வேலைகள், எலக்டிரானிக் வேலைகள், எலக்டிரிகல் விளையாட்டுச் சாமான்கள் என்பனவற்றை உலகச் சந்தைக்கு ஏற்றவற்றை, ஏன் ஏற்படுத்தவில்லை?

★ போர்க்கால நடவடிக்கையாக - பெரிய பெரிய பண்ணை நிலங்களைப் பிடுங்கி நில

படிப்பகம்

www.padippakam.com



மற்ற விவசாயக் கூலிகளுக்கு ஏன் கொடுக்க வில்லை?

★ நீண்டகாலக் குத்தகைக்குக் கொடுத்தால் கூட நிலம் பறிபோய்விடும் என்று இலட்சக்க ணக்கான ஏக்கராக்களைத் தரிசாகப் போட்டிருக் கும் கோவில் பண்ணை முதலாளிகளை ஏன் தடுக்கவில்லை?

★ வறண்ட காவிரிக்கு மாற்றாக - தஞ்சை டெல்டாவின் நூற்றுக்கணக்கான ஆறுகளில் 5 கிலோ மீட்டருக்கு ஒன்று வீதம் தண்ணீர் தடுப்புச் சிற்றணைகளையும் (Small Check Dams), தடுப்புச் சுவர்களையும் (Barracks) கட்டி, நீர்வளத்தையும், நிலத்தடி நீரையும் பெருக்க அரசு ஏன் திட்டம் வகுக்கவில்லை? சென்னை மேம்பாலத்திட்டமான ரூ.120 கோடிச் செலவில் - 120 சின்ன அணைகளை/ தடுப்புச் சுவர்களைக் கிழக்குத் தஞ்சையில் கட்டியிருக்கலாமே?

**அரசியலே காரணம்**

கிழக்குத் தஞ்சையின் பின்னடைவுக்குப் பொறுப்பற்ற அரசியல் தலைவர்களின் கவலை யற்ற சுயநலப் புத்தியே காரணம். இப்பகுதியின் பாதிக்கப்பட்ட உழைப்பாளி மக்கள் - தாழ்த்தப் பட்ட - மிகப் பிற்படுத்தப்பட்ட - பிற்படுத்தப் பட்ட - மதச் சிறுபான்மை, வாயில்லாப் பூச்சிகளாக இருந்தது மிகப் பெரிய காரணம்.

**உங்கள் வாழ்க்கை மேம்பட உதவாத அரசியல்வாதியை...?**

நம் வாழ்க்கை மேம்பாட்டுக்குத் திட்டமி டாத - உழைக்காத அரசியல்வாதிகளை நாம் என்ன செய்வது? நமது வாழிடங்களைத் தரிசா கப் போட்டு - நம் வயிற்றைக் காயப் போட்டு, நம் வளர்ச்சியைச் சில நூற்றாண்டுகளுக்குத் தள்ளிப் போட்டுவிட்ட இக் கும்பலை நாம் எப்படித் தண்டிப்பது?

**தோழர்களே, திரளுங்கள்!**

தோழர்களே!

★ தஞ்சை - திருவாரூர் - நாகை மாவட்டங் கள் வறட்சிப் பகுதியாக மாறுவதைத் தடுத்திட வழி காணுங்கள்.

★ கிழக்குத் தஞ்சையின் ஏழ்மைக்குத் தீர்வு காண வாருங்கள்.

★ இதை நோக்கமாகக் கொண்ட எழுத்தா ளர் - சிறு பத்திரிகையாளர் - தமிழர் அறிஞர் அனைவரும் ஒன்றுபடுங்கள்.

★ மாணவர்கள் - இளைஞர்கள் அணிதிர ளுங்கள்.

★ மக்கள் மேம்பாட்டுச் சிந்தனை கொண்ட அதிகாரிகள் - ஆசிரியர்கள் - ஆய்வாளர்கள் கைக்கொடுக்க முன்வாருங்கள்.

★ கிராமங்களில் நிலமற்றோர் - கிராமத் தொழிலாளர் - சிறு விவசாயிகள் - ஆகியோர் கூட்டமைப்பான 'மக்கள் மேம்பாட்டு மன்றங்' (MMM) களை ஏற்படுத்துங்கள். இதில் சாதி பார்க்காதீர்கள் - இதில் கட்சி பார்க்காதீர்கள்.

★ கிழக்குத் தஞ்சையின் பிரச்சினைகளில் தனி அக்கறையும் ஆர்வமும் கொண்டவர்கள் - தீர்வுகளைக் கைவசம் வைத்திருக்கும் வெளி நாட்டுத் தமிழர்கள் - உள்ளூர் வசிப்பிலா (NRI) இந்தியர்கள் அருள் கூர்ந்து உதவ முன்வாருங்கள்.

வேதாரண்யம் மாநாடுகள் பழைய தஞ்சை மாவட்டத்தின் பெரிய வளர்ச்சியைப் பாய்ச்சல் வேகத்தில் மேற்கொண்டிட வழிகாணவே கூட் டப்பட்டுள்ளன.

வேதாரண்யம், மாணவர் - இளைஞர் - மாநாடு தமிழ்த் தேசிய இன உரிமைக்குக் குரல் கொடுத்திடவே கூடுகிறது.

**கி.பி.2000 - திருப்பு முனையாகட்டும்!**

ஆம். 2000, சனவரி. 1, 2இல் வேதாரண்யம் மாநாடுகள் நமக்கொரு திருப்புமுனையாகட் டும். சிந்தனையாளன் பொங்கல் சிறப்பு மலர், தஞ்சை - திருவாரூர் - நாகை வளர்ச்சி மலராகட் டும். வேதாரண்யக் கூட்டம் - மக்கள் பிரச்சி னைக்குத் தீர்வு தரும் மக்கள் சிந்தனையாளர் களின் கிளர்ச்சிக் குரலாகட்டும்.

**உழைக்கும் மக்களே மேலோர்! உழைக்கும் மக்களே வெல்வர்!** ★

படிப்பகம்

www.padippakam.com



# ஸ்டாலினும் இந்தியப் பொதுவுடைமைக் கட்சியினரும்

இராமியா

''1950களில் இந்தியப் பொதுவுடைமைக் கட்சியினரின் பேரில் ஸ்டாலினுக்கு ஏற்பட்ட வெறுப்பு'' என்ற கட்டுரையை ''சிந்தனையாளன்'' அக்டோபர்'99 இதழில் படித்தேன். அது தொடர்பான எனக்குத் தெரிந்த விவரங்களைச் சிந்தனையாளன் வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

இச்செய்திகள் மறைந்த மார்க்சிஸ்ட் கட்சித் தலைவர்கள். திரு.பி. ராமமூர்த்தி மற்றும் தெலுங்கானா போராட்ட நூலை எழுதிய திரு.வி.பி. சிந்தன் ஆகியோர் கூறக் கேட்டவை.

தெலுங்கானா போராட்டம் ஆரம்பித்த பொழுது அவர்களுக்கு வெற்றி கிட்டவே செய்தது. ஜமீந்தார்கள் எல்லோரும் கிராமங்களைப் பற்றி நினைக்கவே குலை நடுங்கினர். தெலுங்கானாப்பகுதி முழுவதும் பொதுவுடைமைக் கட்சியின் ஆட்சியே நடந்து கொண்டிருந்தது. ஆனால் இந்நிலைமை தொடர்ந்து நீடிக்கவில்லை. தெலுங்கானா விவசாயிகள் போராட்டத்துக்கு எதிராக இந்திய இராணுவம் ஏவி விடப்பட்டது.

காவல் துறையினருக்கு எதிராகப் போரிட்டு வெற்றி பெற்ற தெலுங்கானா விவசாயிகள் இந்திய இராணுவத்தை வெற்றி கொள்ள முடியவில்லை. நான்கு ஆண்டுகள் இந்திய இராணுவத்தைத் தாக்குப் பிடித்தது, தெலுங்கானா விவசாயிகளின் வீரதீரச் செயல்தான். அவர்களின் வீரத்தை எந்த ஒரு சுதந்தரப் போராட்டத்தின் வீரத்துக்கும் குறைத்து மதிப்பிட முடியாது.

ஆனால் இறுதியில் அப்போராட்டம் சிங்கத்திடம் சிக்கிய சிறுமுயல் போல ஒடுங்கிவிட்டது.

இவ்வாறு நடைபெற்றுக் கொண்டிருந்த போராட்டத்தின் நடுவில் தங்களிடம் ஆயுத பலக் குறைவால் தான் இந்திய இராணுவத்தைச் சமாளிக்க முடியவில்லை என்றும், ஆயுத பலம் மட்டும் இருந்துவிட்டால் காவல்துறையினரை வென்றது போலவே இராணுவத்தையும் வென்று விடலாம் என்றும் கணக்குப் போட்டனர் இந்தியப் பொதுவுடைமைக் கட்சியினர்.

ஆகவே மாஸ்கோ சென்று ஸ்டாலினிடம் ஆயுதங்களை வேண்டிப் பெறுவது என்று முடிவு செய்தனர். அப்படித்தான் ஒரு குழு மாஸ்கோ சென்று கேட்டுக் கொண்டது.

## வாஜ்பேயி அமைச்சரவை மாநிலங்களின் பங்கு

| மாநிலம் | அமைச்சர்களின் எண்ணிக்கை |
|---|---|
| பீகார் | 11 |
| மகாராட்டிரம் | 8 |
| தமிழ்நாடு | 8 |
| மத்தியப்பிரதேசம் | 7 |
| உத்தரப்பிரதேசம் | 6 |
| ஆந்திரா | 4 |
| ஒரிசா | 4 |
| குசராத் | 4 |
| மேற்கு வங்கம் | 3 |
| கர்நாடகம் | 3 |
| இராசஸ்தான் | 3 |
| தில்லி | 2 |
| ஜம்மு காஷ்மீர் | 2 |
| இமாசலப்பிரதேசம் | 1 |
| அசாம் | 1 |
| அரியானா | 1 |
| கேரளம் | 1 |
| மணிப்பூர் | 1 |
| மொத்த அமைச்சர்கள் | 70 |
| காபினெட் அமைச்சர்கள் | 26 |
| பெண் அமைச்சர்கள் | 8 |

www.padippakam.com



பிரச்சினையைக் கூர்ந்து கேட்ட ஸ்டாலின் பின்வருமாறு கேட்டிருக்கிறார்: ''சரி, நான் ஆயுதம் தருகிறேன். எந்த இடத்தில் வாங்கிக் கொள்கிறீர்கள்?'' நம் பொதுவுடைமைக் குழுலினர் திருதிருவென விழித்திருக்கின்றனர்.

தெலுங்கானாப் பகுதி கடல் வழியில் இல்லாத சிறுநிலப்பகுதி. இப்பகுதிக்கு ஆயுதங்களைக் கொண்டு செல்ல வேண்டுமெனில் நீர் வழியில்லை.

அப்புறம் ஸ்டாலின் மேலும் கூறியிருக்கிறார்: ''உலக அரங்கில் இந்தியா சோவியத் யூனியனுக்கு நட்பு நாடு. அதற்கு எதிராக எப்படிச் செயல்படுவது? நீங்கள் புரட்சிகரச் சூழ்நிலையை உருவாக்கியுள்ள இடமோ மிகச் சிறியதும் கடல்வழி இல்லாததுமான பிரதேசம்.

நீங்கள் ஒழுங்காக வேலை செய்திருப்பதாகக் கூற வேண்டும் என்றால், நாடு முழுவதும் புரட்சிகர உணர்வை ஏற்படுத்தியிருக்க வேண்டும். அப்படிச் செய்திருந்தீர்கள் என்றால் இந்திய இராணுவத்தை ஏற்றி வரும் இரயில்களை ஓட்ட மறுக்கும்படி உங்கள் இரயில் தொழிலாளர்களுக்கு அழைப்பு விடுத்திருக்க முடியும். அனால் நீங்கள் செய்ததெல்லாம் என்ன? ஒரு சிறு நிலப் பகுதியிலுள்ள விவசாயிகளைத் திரட்டி அவர்களைப் பலி கொடுத்தது தான்''.

ஸ்டாலினின் எதார்த்தமான வினாக்களுக்கு விடையளிக்க முடியாத நம் பொதுவுடைமைக் குழுவினர் திரும்பி வந்து விட்டனர்.

''இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியினர் அங்கே கட்சியை நாசப்படுத்தி விட்டனர்'' என்று ஸ்டாலின் கூறியிருக்கிறார் என்றால், புரட்சிகர உணர்வை நாடு முழுவதும் பரப்புவதற்குப் பாடுபடாமல் ஒரு சிறு பிரதேசத்தில் ஒரு சிறு பகுதி மக்களைப் போராட்டத்தில் ஈடுபடுத்தி அவர்களைப் பலி கொடுத்து, அதனால் அக்கட்சியினரைப் பார்க்கவே மக்கள் அச்சம் கொள்ளும்படிச் செய்த தன்மையினால் இருக்கலாம். (இப்பொழுது அவர்கள் பஃபூன்களைப் போல் தெரிகிறார்கள் என்பது வேறு செய்தி.)

## தேசிய மக்கள் நாயக முன்னணி அமைச்சரவையில் கட்சி நிலவரம்

| கட்சி | உறுப்பினர் எண்ணிக்கை | காபினெட் அமைச்சர்கள் | இணை அமைச்சர்கள் |
|---|---|---|---|
| பா.ச.க. | 182 | 15 | 31 |
| ஐக்கிய சனதாதளம் | 20 | 4 | 2 |
| சிவசேனை | 15 | 2 | 1 |
| திமுக | 12 | 2 | 1 |
| பிஜு சனதா தளம் | 10 | 1 | 1 |
| திரிணமுல் காங்கிரசு | 8 | 1 | 1 |
| பா.ம.க. | 5 | — | 2 |
| மதிமுக | 4 | — | 2 |
| தேசிய மாநாடு | 4 | — | 1 |
| மணிப்பூர் மாநில காங்கிரஸ் | 1 | — | 1 |
| சுயேச்சை | — | 1 | 1 |
| | 261 | 26 | 44 |

படிப்பகம்

www.padippakam.com



# சாலயார் பண்பாட்டு மய்யக் கருத்தரங்க மாநாடு

பேராசிரியர் சாலய் இளந்திரயன் அறக்கட்டளை, 'சாலயார் பண்பாட்டு மய்ய'த்தை 11.7.99ல் தோற்றுவித்தது என்பதை நீங்கள் அறிவீர்கள். அந்த மய்யத்தின் முதலாவது கருத்தரங்க மாநாடு, சாலயார் மறைந்த முதலாண்டு நினைவு நாளான 4.10.99-ல் திருப்பூரில் நடைபெற்றது. காலை நிகழ்ச்சியில் கள்ளிப்பட்டி கொ.இராமலிங்கம் வரவேற்புரை ஆற்ற, முனைவர் சாலினி இளந்திரயன் தலைமையில், கு.வெ.கி. ஆசான் சாலயாரின் படத்தைத் திறந்து வைத்து, சாலயாரின் கருத்துக் கோவை என்ற குறுநூலையும் வெளியிட்டார். பேரூராட்சித் தலைவர் ப. பெரியசாமி, உ.த.மு.க. பொதுச் செயலாளர் ம.செ. தமிழ்மணி வாழ்ந்துரைத்தார்கள். சாலயாரின் பணியும் படைப்பும் என்ற கருத்தரங்கைத் தொடங்கி வைத்து ஏற்றதோர் உரை நிகழ்த்தினார் சொல்லாய்வறிஞர் அவர்கள். சாலயாருடைய தில்லித் தமிழ்ப் பணிகள் குறித்துப் புலவர் விசுவநாதன், அவருடைய அறிவியக்கப் பணிகளையும் படைப்புகளையும் குறித்துப் பாவலர் எழுஞாயிறு ஆகியோர் விளக்கிக் கருத்தரங்கிற்கு வலிவு ஊட்டினார்கள். ஓங்கிய குரலில் நெறிமுடியார் இசைத்த புரட்சிக் கவிஞர்-சாலயார் பாடல்களும் மழலைச் செல்வங்கள் வழங்கிய சாலயாரின் உரைவீச்சு, கவிதைகளும் அரங்கத்திற்கு எழில் சேர்த்தன.

மாலை நிகழ்ச்சியைச் சக்திவேல் தன் வரவேற்புரையுடன் முனைவர் சாலினி இளந்திரயன் தலைமையில் தொடங்கினார். கோவை ஞானி சாலயாரின் ஆழமான கருத்தோட்டங்களை எடுத்து விளக்கி, சாலினியார் எழுதிய 'ஆசிரியப் பணியில் நான்' என்ற நூலை வெளியிட்டு வைத்தார். பின்னர் மாநாட்டுத் தீர்மானங்களின் முன்வரைவுகளைச் சக்திவேல் அவையோருக்கு அறிமுகப்படுத்தினார். அறிவியக்கப் பேரவையின் பூங்குன்றன், பா.ம.க.வின் ஆ.தங்கராசு, உ.த.மு.க.வின் தமிழப்பன், மனிதநேயப் பாசறையின் புலவர் மு. நவமணிடேவிட், த.தி.க.வின் தோழர் அரங்ககுமார் ஆகியோர் வாழ்த்திசைத்தனர். சுசீந்திரன், இரும்பொறை ஆகியோரின் உணர்ச்சிமயமான வீர உரைகளுக்குப் பின் பேராசிரியர் சுப. வீரபாண்டியன் மாநாட்டுத் தீர்மானங்களைத் தெளிவுபடுத்தி விளக்க உரை ஆற்றினார். அவரும் அவையோரும் சொன்ன ஓரிரு திருத்தங்களுடன் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இறுதியாக மாவீரன் பழ.நெடுமாறன் பேருரையாற்றி, சாலயார் பண்பாட்டு மய்யக் கருத்தரங்க மாநாட்டை நிறைவு செய்தார்.

## செவ்வண்ணன் மறைந்தார்

ஓய்வு பெற்ற மேல் நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியரும், 1944 முதல் பெரியார் கொள்கையாளராக விளங்கியவரும், வே. ஆனைமுத்துவின் உடன் பயின்ற நண்பரும் – உற்ற தோழருமான ச. செவ்வண்ணன் அவர்கள் தம் 71 ஆம் வயதில் கோவில் பாளையம் தம் இல்லத்தில், 26–10–99 பிற்பகல் 3 மணிக்கு மறைவுற்றார் என்பதை வருத்தத்துடன் அறிவித்துக் கொள்கிறோம்.

-ஆசிரியர் குழு

## புதிய இல்லம் திறப்பு விழா

உளுந்தூர்ப் பேட்டை வட்டம் பெரிய குப்பத்தில் த.வேலாயுதம் - (சார் ஆய்வாளர், நில அளவை, கடலூர்) உருவாக்கிய 'பெரியார் இல்லத்தினை' 2.10.99 சனிக்கிழமை காலை வே.ஆனைமுத்து திறந்து வைத்து உரையாற்றினார். வழக்கறிஞர் இரா.கருணாமூர்த்தி, இ.பொன்னுசாமி, இல.மணவாளன், சி.அப்பாவு, இராமசாமி, பி.ஏ., சட்டமன்ற உறுப்பினர் ஜெ. மணிக்கண்ணன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

கே.ஆர். குமார் - செயமணி துணைவர்களால் மந்திரமா - தந்திரமா நிகழ்ச்சி நடத்திக் காட்டப்பட்டது. இராசேசுவரி வேலாயுதம் நன்றி கூறினார்.

படிப்பகம்

www.padippakam.com



# விவசாயிகள் குமுறல்

தொ. எழில்நிலவன், களமருதூர்.

வீரிய விதை
வேளாண்மை அலுவலகத்தில்
தருவதாகச்
சொன்னாங்க!
விவசாய
அலுவலருக்கு
மனுப் போட்டுப்
பல நாளாச்சு...
அவன் அவன்
விழுந்த மழையை நம்பி
நாட்டு நெல்லை
உடனே விதைச்சு -
முந்தினவனுக்கு
பயிராகிப்
போச்சு...
அலுவலகத்தை நே கி
அலைஞ்சதே மிச்சம்
தரிசாப் போடாமே-
நாட்டு நெல்லையே
நானும் விதைச்சேன்
அது
பயிராகி வந்த போது
அலுவலர் வந்து
விதை நெல்லைக்
கொடுக்கவும்
விதைக்க நிலம்
எங்கே என்று,
கஞ்சி காய்ச்சிக்
குடிச்சாச்சி
வெளஞ்ச
கதிரை
களத்துலே
அடிக்கும் போது
உரங் கொடுத்தாங்க;
மருந்து கொடுத்தாங்க...
பேப்பரைப்
பார்த்தாக்கா,
தீவிர சாகுபடின்னு
உயர் விளைச்சல்ன்னு
என்னென்ன மோ.
எழுதியிருக்காங்க.
நாங்க
பட்டினிதாங்க...
நாடுதான்
தன்னிறைவு
அடைஞ்சிருச்சே!
சும்மா சொல்லலை
பத்திரிகையைப் பாருங்க...
ஓ...பசுமைப் புரட்சியே!
புள்ளி விபரங்களே
நாட்டின் முதுகெலும்பு.
விவசாயிகளல்ல....
நாட்டின் முதுகெலும்பு!

## தக்கோலத்தில் தந்தை பெரியார் 121வது பிறந்த நாள் விழா

வேலூர் மாவட்டம் தக்கோலத்தில் தந்தை பெரியார் அவர்கள் 121வது பிறந்த நாள் விழா பெரியார் தொண்டர் த.வேணு கோபால் அவர்களால் நடத்தப்பட்டுவரும் இடைக்காலத் தொடக்கக் கல்வி நிலையத்தில், பெரியார் தொண்டர் த.மு.துரைவேல் முன்னிலையில் நடைபெற்றது. அவ்வயம் த.வேணுகோபால் அவர்களால் இயற்றப் பட்ட சுயமரியாதை இயக்கப் பாடல்கள் அங்கு கூடியிருந்த மக்கள் மனதில் பதியும் வண்ணம் சிறுவர்களால் பாடப்பட்டன. த.மு.துரைவேல் அவர்களால் அனைவருக் கும் இனிப்பு வழங்கப்பட்டது.

செய்தி: த.வேணுகோபால், தக்கோலம்

படிப்பகம்

www.padippakam.com



## பெரியார் பெற்றிருந்த உண்மையான நண்பர்
# "ஈ.வெ.ராம சகாப்தம்" எனும் பெரியாரிய வரலாற்றுக் கட்டத்தை முதன் முதலாக மொழிந்தவர்,
## அருப்புக்கோட்டை "நாடார் குலமித்திரன்" ஆசிரியர்
# சூ.ஆ. முத்துநாடார் அவர்களுக்கு நூற்றாண்டு விழா எடுத்திட வாரீர்!

தந்தை பெரியார் தமக்கென ஓர் ஏட்டை 2.5.1925 இல்தான் தொடங்கினார்.

1919 முதல் காங்கிரஸ் கட்சியில் செயல் பட்ட அன்னாரின் சொற்பொழிவுகளும் அறிக் கைகளும் "தமிழ்நாடு", "இந்து", "சுதேச மித்திரன்" முதலான ஏடுகளில் வெளிவந்தன. இவற்றை அன்னியில், பெரியாரைப் பற்றிய செய்திகளை 1922 முதல் தொடர்ந்து வெளியிட்ட இன்னொரு ஏடு அருப்புக் கோட்டை "நாடார் குல மித்திரன்".

அத்தகைய சிறந்த ஏட்டினை அருப்புக கோட்டையில் நிறுவி, 12 ஆண்டுகள் நடத்திய வர்தான் சூ.ஆ. முத்துநாடார்.

'சுயமரியாதை இயக்கத்தின் கர்த்தா ஈ.வெ.ரா.' என்பதை, செங்கற்பட்டில், 1929 பிப்ரவரி 17, 18ல் நடந்த சென்னை மாகாண முதலாவது சுயமரியாதை மாநாடுதான் அறிவித் தது. அப்போது பெரியாரின் 'குடிஅரசு' வெளி வந்தது; நீதிக் கட்சியின் நாளேடான 'திராவி டன்' வெளியாயிற்று. ஆயினும், இவற்றில் எதிலும் - எவராலும் அறிவிக்கப்படாத ஓர் அரிய - வரலாற்றுச் சிறப்பு மிக்க - பெரியார் ஆண்டு வரிசையை சூ.ஆ. முத்துநாடார் முதன் முதலாக அறிவிப்புச் செய்தார். அச்சிந்தனையின் மூலவர் இவரே.

"ஈ.வெ.ராம சகாப்தம் 1" என, "நாடார் குலமித்திரன்" தலையங்கப் பகுதியில் தம் சிந்தனை முத்தைப் பதித்த முதலாவது மாமனி தர் சூ.ஆ. முத்து நாடாரே ஆவார்.

சுயமரியாதைக் கொள்கை என்கிற ஒரு புதிய கோட்பாட்டின் தொடக்குநர் - நிறுவனர் ஒரு சகாப்தத்தின் - ஒரு காலகட்டத்தின் - ஒரு நூற்றாண்டுக் கணக்கு வரிசையின் கருத்தா ஈ.வெ.ராமசாமி என்பதைத்தான், அவ்வளவு துலாம்பரமாக, 1929லேயே அவர் அறிவித்தார்.

பிற்காலத்தில் அறிஞர் சி.என். அண்ணாத் துரை 'பெரியார் ஒரு சகாப்தம் - ஒரு காலகட் டம்' எனக் குறிப்பிட்டதை நாம் எல்லோரும் அறிவோம். இவருக்கு 40 ஆண்டுகளுக்கு முன் னரே இக் கருதுகோளை உருவாக்கிய தெள்ளிய அறிஞர் முத்து நாடார் ஆவார்.

அம்மட்டோ!

பெரியாரின் அறிவுமொழிகளைத் தொகுத்து "தோழர் ஈ.வெ.ராவின் பொன்மொழி கள்" எனும் பெயரில் ஒரு நூலை முதன் முதலாக வெளியிட்டவரும் அவரே.

காங்கிரசுக் கட்சியில் ஈடுபாடு கொண்ட ஈ.வெ.ராவும், முத்து நாடாரும் காங்கிரசு மாநா டுகள் பலவற்றில் சேர்ந்து சென்றே பங்கேற்ற னர். 1924ல், பெல்காம் காங்கிரசில், காங்கிரஸ் பார்ப்பனர் அல்லாதார் தனியே நடத்திய மாநாட் டில், ஈ.வெ.ராவுடன் முத்து நாடாரும் பங்கேற் றார்.

தந்தை பெரியாரால், 'முத்து நாடார் உண் மையான நண்பர்' எனக் கொண்டாடப்பட்ட அன்னாரை, 'முதலாளி' என்று பெரியார் அழைப்பதும் உண்டு.

இத்தகைய மதிப்புமிகு சூ.ஆ.முத்து நாடார் 1882 சனவரி 3 இல் பிறந்தவர். அன்னாரின் 70 ஆம் பிறந்த நாள் 1950ல் சிறப்புறக் கொண்டா டப்பட்டது. அவ்விழாவின் போது வந்த வாழ்த் துக்கள், நடந்த சொற்பொழிவுகள் அடங்கிய நூல் திரட்டு 1951ல், முத்து நாடார் நலமாக இருந்தபோதே, வெளியிடப்பட்டது. அந்நூல் திரட்டுக்கு மதிப்புரை அளித்த தந்தை பெரியார்

படிப்பகம்

www.padippakam.com



தம் நெஞ்சந் திறந்து முத்து நாடாரைப் பாராட்டி யுள்ளார்.

அம் மதிப்புரையின் சில பகுதிகளைப் படித்துப் பாருங்கள்.

....... ''நண்பர் முத்து நாடார் அவர்களது நட்பு எனக்கு சுமார் 25 ஆண்டுகளாக இருந்து வருவதாகும். எங்கள் நட்பும், எம்மில் ஒருவரைப் பற்றி ஒருவர் கொண்டுள்ள எண்ணங்களும் இந்த 25 ஆண்டுகளில் ஒரு சிறு மாறுதலுமில்லாது ஒரேபடித்தாய் இருந்து வருவனவாகும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் மகிழ்ச்சியோடு குறிப்பிடுகிறேன்.

நண்பர் முத்து நாடார் ஒரு பெரியாராவர். எப்படியெனில் அவர் தங்குல முன்னேற்றம் கருதி நாடார் குல மக்களுக்கு இணையற்ற தொண்டாற்றி இருக்கிறார்...

..... முத்து நாடார் அவர்களது குலத் தொண்டிற்கு எடுத்துக்காட்டு என்னவென்றால், அவர் 'நாடார் குல மித்திரன்' என்று ஒரு பத்திரிகை நடத்தினாலும், பெருவாரிய எதிர்ப்புக்கும் தொல்லைக்கும் உள்ளான சுயமரியாதை இயக்கத்தில் கலந்து கொண்டு தொண்டாற்றியதும், ஆங்காங்கு சமுதாய பேதமும் இழிவும் நீங்கும் படியான சீர்திருத்தப் பிரசாரம் செய்ததும், குலநலத் தொண்டாற்றுவதற்கு என்றே துவக்கப்பட்ட நாடார் மகாஜன சங்கத்திற்கு உறுதுணையாய் இருந்து வந்து பணியாற்றியதும் முதலியவையே ஆகும்....

....... அப்படிப்பட்ட பெரியாரது 60ம் ஆண்டு 70ம் ஆண்டு விழா நடவடிக்கைத் தொகுப்பு நூலுக்கு மதிப்புரை எழுத எனக்குக் கிடைத்த வாய்ப்பை, பெருமையான வாய்ப்பாகக் கொள்வதோடு, முத்து நாடார் வாழ்வு மற்றவர்களுக்கு வழிகாட்டியாயிருந்து பயனளிக்கத் தக்கதாகும் என்றும் கூறி முடிக்கிறேன்.

முத்து நாடாரின் உண்மையான நண்பர்
சென்னை ஈ.வெ.ராமசாமி
30.8.51

முத்து நாடாரின் உண்மையான நண்பரான ஈ.வெ.ரா. அவர்களின் முழுமையான வரலாற்றை எழுதிட ஏற்ற ஆவணங்களைத் திரட்டும் முயற்சியில் நான் 1975ல் ஈடுபட்டேன். இம்முயற்சிக்கு, வரவேற்புக் கூறி, ''நாடார் குல மித்திரன்'' ஏட்டின் தொகுதிகளை எனக்குப் படிக்கக் கொடுத்து, அருப்புக்கோட்டையில் தம் இல்லத்தில் இனிய விருந்தோம்பி, மூன்று நாள்கள் என்னையும் தோழர் ஆசிரியர் ந.கணபதியையும் ஊக்குவித்தவர் சூ.ஆ.மு. முத்து முருகன் ஆவார்.

இவர் முத்து நாடார் அவர்களின் இளைய மகன் ஆவார், 'நாடார் குலமித்திரன்' தொகுதிகளிலிருந்து எனக்கு வேண்டிய பக்கங்களை 1987ல் மதுரையில் ஒளிப்படம் எடுத்தளித்தவரும் இவரே.

இன்றளவும், பல சமயங்களில், பெரியாரைப் பற்றியும் பெரியார் இயக்கத்தின் எதிர்காலம் பற்றியும் இவரை நேரில் கண்டு ஆர்வத்துடனும், ஆழமாகவும், கலந்துரையாடுவதை நான் வழக்கமாகக் கொண்டுள்ளேன். பல சமயங்களில் சீர்காழி மா. முத்துச்சாமி, கு.ம. சுப்பிரமணியன் ஆகியோருடன் குழுவினராகவும் இருந்து உரையாடுவோம்.

இந்தக் கலந்துரையாடலுக்கு மூலகாரணரான சூ.ஆ.மு. முத்துநாடார் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவினை 1982 சனவரி 3 இல் சிறப்புற எடுத்திருக்க வேண்டும்.

தவற விட்ட அந்த வாய்ப்பை எண்ணி, நானும் தோழர்களும் பல தடவைகள் வருந்தினோம்.

இதன் வெளிப்பாடாக, சூ.ஆ.முத்து நாடார் அவர்களின் 118 ஆவது பிறந்த நாளை 4-5, சனவரி 2000 இல் ''சூ.ஆ. முத்து நாடார் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவாக'' அருப்புக் கோட்டையில் மார்க்சிய பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி பொறுப்பேற்று முன்னின்று நடாத்திட மனமார விழைந்தது. இதற்கு இசைவு அளித்த இனிய தோழர் சூ.ஆ.மு. முத்து முருகன் அவர்களுக்கும், அவர்தம் குடும்பத்தினர்க்கும், மா.பெ.பொ.க. சார்பில் நன்றியினை உரித்தாக்குகிறேன்.

பெரியாரின் உண்மையான நண்பர் முத்து நாடாருக்கு விழா எடுப்போம்!

பெரியாரியத்தின் நூற்றாண்டு வரிசையை முதன் முதலாகத் தொடக்கிய மூதறிஞருக்கு விழா எடுப்போம்!!

சென்னை வே.ஆனைமுத்து
1.11.99

படிப்பகம்

www.padippakam.com



# தஞ்சை - திருவாரூர் - நாகை மாவட்ட வளர்ச்சி மாநாடு
# 'சிந்தனையாளன் பொங்கல் மலர்' வெளியீடு!

## 1-1-2000 சனி அன்று வேதாரண்யத்தில் நடத்திடவும்;

## மாதம் இரண்டுநாள் கட்சிக் களப்பணிக்குச் சென்றிடவும்

## மா.பெ.பொ.க பொதுக்குழுவினரின் கருத்துரைகள் - முடிவுகள்!

மார்க்சிய பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் பொதுக்குழுக் கூட்டம், 3-10-99 ஞாயிறு காலை, 11 மணிக்கு, சென்னையில் கட்சியின் தலைமை அலுவலகத்தில் வே. ஆனைமுத்து தலைமையில் நடைபெற்றது. பல்வேறு மாவட்டங்களிலிருந்தும் 48 தோழர்கள் - தோழியர்கள் வருகை தந்தனர்.

தமிழ்நாட்டில் அந்தந்த மாவட்டத்திலும், உள்ளூரிலும் மக்கள் எதிர் கொள்ளும் சிக்கல்களைத் தீர்க்கப் போராடுதல்; "சிந்தனையாளன்" "பெரியார் ஈரா" இதழ்களுக்கு மாவட்டப் பொறுப்பாளர்கள் மாதந்தோறும் உறுப்பினர்கள் சேர்த்துத்தருதல்; மாதந்தோறும் இரண்டு நாள்கள் சிற்றூர்களுக்குச் சென்று புதிய கிளைகளை உருவாக்குதல்; தேசிய இனச்சிக்கல்கள், மார்க்சிய - இலெனினியம் பற்றி முதன்மை தந்து தொடர்ந்து பயிற்சி வகுப்புகள் நடத்துதல்; வேளாண்மைத் தொழிலாளர்கள், சிற்றூர்ப்புறக் கைவினைஞர்கள், சிறு தொழில் நடத்துவோர், உதிரிப் பாட்டாளிகள், கட்டடத் தொழிலாளர்கள் ஆகியோரின் சிக்கல்களை அடையாளங்கண்டு தீர்வுக்குப் போராடுதல்; தீண்டாமைக் கொடுமை ஒழிப்பு, நிலமற்ற வேளாண்மைக் கூலிகளுக்கு நிலம் தரப்படாமை இவற்றை விளக்கித் தீவிரப் பிரசாரம் செய்தல் மற்றும் நேரடி நடவடிக்கை எடுத்தல்; வேளாண்மைக் கூலிகளுக்கு ஞாயமான கூலி வழங்கப்படவும், வேளாண் விளைபொருள்களுக்குக் கட்டுபடியாகக் கூடிய விலை தரப்படவும் போராடுதல்; காவிரிப் பாசனப்பகுதி மற்றும் பாசனக்கிணறுகள், பாசனஏரிகள் நீர்வசதி குறைந்து தமிழக வேளாண்மை சீரழிவை நோக்கிப் போவதை அரசுக்கும் மக்களுக்கும் உணர்த்திடப் பிரசாரம் செய்தல், போராடுதல்; தமிழ்நாட்டின் நெற்களஞ்சியமான நாகை - திருவாரூர் - தஞ்சை மாவட்ட வேளாண்மை, தொழில், வணிக வளர்ச்சிகளை முதன்மைப்படுத்தி 'தஞ்சை - திருவாரூர் - நாகை மாவட்ட வளர்ச்சி மாநாடு' என 1-1-2000 சனி அன்று வேதாரண்யத்தில் பெரிய அளவில் மாநாடு நடத்திடுதல்; இம் மாநாட்டில் "சிந்தனையாளன் பொங்கல் மலர்" வெளியிடப் பட ஆவன செய்தல் எனப் பல்வேறு செய்திகளையும் விளக்கிப் பல தோழர்கள் கருத்துரை வழங்கினர்.

கருத்துரை வழங்கிய தோழர்கள் சி.நடராசன் (காஞ்சி மாவட்டச் செயலாளர்), வாலாசா வல்லவன் (வேலூர் மாவட்டச் செயலாளர்), பொ.சுப்பிரமணியன் (திருவண்ணாமலை மாவட்டச் செயலாளர்), புலவர் இரா.கலியமூர்த்தி (பெரம்பலூர் மாவட்ட அமைப்பாளர்), வடக்கு மாங்குடி பா.மோகன் (கடலூர் மாவட்டச் செயலாளர்), சீர்காழி சோ. கோவிந்தராசன் (சீர்காழி ஒன்றிய அமைப்பாளர்), க.முகிலன் (புரட்சிக்கவிஞர் கலை இலக்கிய மன்றம்); சி.விடுதலைமணி (ஆசிரியர் - அலுவலர் பேரவை அமைப்பாளர்), அம்பத்தூர் தே.முத்து (பெரியார் - நாகம்மை கல்வி அறக்கட்டளையின் செயலாளர்), சீர்காழி மா.முத்துச்சாமி (மா.பெ.பொ.க அமைப்புக் குழுவின் துணைச் செயலாளர்) ஆகியோர் முற்பகலிலும்; பரணம் வே.பரமசிவம் (ஆசிரியர்-அலுவலர் பேரவை), துரை. கலையரசு (ஆசிரியர் - அலுவலர் பேரவை), கவிஞர் தமிழேந்தி (புரட்சிக் கவிஞர் கலை இலக்கியமன்ற மாநில அமைப்பாளர்), கு.ஏகாம்பரம் (காஞ்சி மாவட்ட மா.பெ.பொ.க பொருளாளர்), கலசம் (ஆசிரியர்-அலுவலர் பேரவை அமைப்பாளர்), இரா.பச்சைமலை (ஆசிரியர் - அலுவலர் பேரவை), சங்கமித்ரா (பெரியார் தமிழ்ப் பேரவை அமைப்பாளர்), வே.ஆனைமுத்து (மா.பெ.பொ.க அமைப்புக் குழு செயலாளர்) ஆகியோர் ஆவர்.

படிப்பகம்

தோழர்களின் கருத்துரைக்குப் பின்னர் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

www.padippakam.com



**தீர்மானம் 1.** காவிரி நீர்ச்சிக்கல் தீர அனைத்துக் கட்சிகளின் தலைவர்களையும், விவசாயச் சங்கங்களின் தலைவர்களையும் உள்ளிட்ட ஒரு குழுவினரைத் தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்கள் தம் தலைமையில் தில்லிக்கு அழைத்துச் சென்று மய்ய அரசுக்குப் போதிய அழுத்தம் தந்து காவிரி நீர்ப் பங்கீட்டுக்கு நிரந்தரத் தீர்வு கண்டிட வழிகாண வேண்டும் என அரசினரை இப்பொதுக்குழு வற்புறுத்தி வேண்டிக் கொள்கிறது.

காவிரிச் சிக்கலை அவரவர் கட்சியின் நிலைபாட்டிலிருந்து அணுகாமல், தமிழகத்தின் பொது நலனை மட்டும் கருத்தில் கொண்டு அனைத்துக் கட்சியினரும் ஒரே கோரிக்கையுடன் ஒரே அணியில் நின்று செயல்பட வேண்டும் என்று தொடர்புடைய அனைத்துக் கட்சியினரையும் இப்பொதுக்குழு வேண்டிக் கொள்கிறது.

**தீர்மானம் 2.** தமிழ்நாட்டில் சுயமரியாதைக் கொள்கைகளைப் பரப்புவதில் கடந்த 75 ஆண்டுகளாகச் செயல்பட்டுங்கூட, சிற்றூர்களில் உண்மையில் தீண்டாமைக் கொடுமை ஒழிக்கப்பட வில்லை. "தீண்டப்படாதவர்" என்போரில் 64 விழுக்காடு மக்கள் சொந்த நிலம் அற்ற நிலையிலுள்ள பொருளாதார அடிமைத்தனம் நீக்கப்படவில்லை. இவற்றை அகற்றிட எந்தக் கட்சியும் நேரடியாக அரசை எதிர்த்துப் போராடவில்லை. இதற்கு மாறாக நிலமற்ற வேளாண்மைக் கூலிகளுக்கு வெறுமனே அவரவர் சாதி உணர்ச்சியையும் கட்சி உணர்ச்சியையும் ஊட்டி, அவர்கள் சாதி அடிப்படையில் பிரிந்து நின்று தங்களுக்குள் மோதிக் கொள்ளவே சாதிவழிப்பட்ட எல்லா அரசியல் அமைப்புகளும் வழி வகுத்துவிட்டன. இது கடுங் கண்டனத்துக்கு உரியது. திராவிடக் கட்சிகள், பொதுவுடைமைக் கட்சிகள் இச் சிக்கலைத் தீர்க்கப் போதிய அளவில் அக்கறை காட்டவில்லை. இவற்றையெல்லாம் வெகுமக்களுக்கு உணர்த்தும் வகையில் மா.பெ.பொ.க தீவிரப்பிரசாரம் மேற்கொள்ளுவது என்றும், போதிய அளவு பிரசாரத்திற்குப் பின் குறிப்பிட்ட இடங்களில் இக்கோரிக்கைகளை முன்வைத்து நேரடிக் கிளர்ச்சிகளை மேற்கொள்ளுவது என்றும் இப்பொதுக்குழு தீர்மானிக்கிறது.

**தீர்மானம் 3.** மா.பெ.பொ.க மாவட்டப் பொறுப்பாளர்கள், மாதந்தோறும் அவரவர் மாவட்டச் சார்பில் "சிந்தனையாளன்" ஏட்டுக்கு 25 ஆண்டுக் கட்டண உறுப்பினர்களையும், 'பெரியார் ஈரா' ஏட்டுக்கு இரண்டு ஆண்டுக்கட்டண உறுப்பினர்களையும் தவறாமல் சேர்த்துத் தரவேண்டும் எனக் கோரித் தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் 4.** மாதந்தோறும் ஏதேனும் ஒரு சனி – ஞாயிறு என உறுதி செய்து, இரண்டு நாள்கள் அவரவர் மாவட்டத்தில் ஒரு குழுவினராகச் சிற்றூர்களுக்குச் சென்று மா.பெ.பொ.கவுக்குப் புதிய கிளைகளை உருவாக்கிட ஒவ்வொரு மாவட்டத்தின் பொறுப்பாளரும் கட்டாயம் முன்வர வேண்டும் என்று கோரித் தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் 5.** தஞ்சை – திருவாரூர் – நாகை மாவட்டங்கள் தமிழகத்தின் நெற்களஞ்சியப் பகுதியின் நடுநாயகம் ஆகும். இம்மாவட்டங்கள் தொழிலிலும், வணிகத்திலும் பின்தங்கியவை, வேளாண்மைக் கூலிகள் இம் மாவட்டங்களில் அதிகம் பேர்.

இவற்றை அனைவர்க்கும் உணர்த்தும் வண்ணம் வேளாண்மை கால்நடைவளர்ப்பு – தொழில் – வணிகத்துறை அறிஞர்களைக் கொண்டு ஆய்வுக் கட்டுரைகளைத் திரட்டி அவற்றை முதன்மைப்படுத்தி "சிந்தனையாளன் பொங்கல் மலர்" உருவாக்கப்பட வேண்டும் என்றும்; "தஞ்சை – திருவாரூர் – நாகை மாவட்ட வளர்ச்சி மாநாட்டில்" 1–1–2000 சனி அன்று வேதாரண்யத்தில் சிந்தைனையாளன் பொங்கல் மலரை வெளியிடுவது என்றும், இம்மலருக்கு எல்லா மாவட்டங்களிலும் நல்ல அளவில் தோழர்கள் விளம்பரம் திரட்டித் தரவேண்டும் என்று வேண்டியும் தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் 6.** தஞ்சை – திருவாரூர் – நாகை மாவட்ட வளர்ச்சி மாநாட்டுக்கு உரிய எல்லாப் பணிகளையும் மேற்கொள்ளுவதற்கு சீர்காழி மா.முத்துச்சாமி, சங்கமித்ரா, து.தில்லைவனம், தஞ்சை இரா.இரத்தினகிரி, சீர்காழி சோ.கோவிந்தராசன், கே.எம். கருப்பய்யா, குடந்தை ஆர். புஷ்பதுரை, நாகை ஏ. மீனாட்சிசுந்தரம், சீர்காழி ஆசிரியர் செயராமன் ஆகியோரைக் கொண்ட மாநாட்டு வரவேற்புக் குழுவினருக்கு அதிகாரம் அளித்துத் தீர்மானிக்கப்பட்டது.

தோழர்கள் அனைவரும் பேரார்வத்துடன் கருத்துரை வழங்கியது மிகவும் போற்றத் தகுந்த தன்மையில் அமைந்திருந்தது.

வே.ஆனைமுத்து நன்றி கூறலுடன் மாலை 6–30 மணிக்குப் பொதுக்குழுக் கூட்டம் முடிவுற்றது.

3–10–99 வே.ஆனைமுத்து

படிப்பகம்

www.padippakam.com



# "சிந்தனையாளன்" 1999 அக்டோபர் இதழ் பிழை திருத்தம்

| பக்கம் | பத்தி | வரிகள் | பிழை | திருத்தம் |
|---|---|---|---|---|
| 1 | | 13 | சென்னை மாகான | சென்னை மாகாண |
| 2 | 1 | 47 | அடியோடு போய்விட்டு | அடியோடு போய்விட்டது |
| 2 | 2 | 29, 30 | ஆனால், 220 டி.எம்.சி நீர் தான் தரமுடியும் என்று கருநாடகம் ஒப்பியது | ஏறக்குறைய 300 டி.எம்.சி காவிரி நீரைத் தரமுடியும் என்று... |
| 3 | 1 | 33 | அடிமைப் கட்சியாக | அடிமைக் கட்சியாக |
| 7 | 2 | 12,13 | 55 பேருக்கு மேல் அகதிகளாக ஆகி | 55 ஆயிரம் பேருக்கு மேல் அகதிகளாக ஆகி |

# தோற்பது நாமே!

(மறு வெளியீடு) — தமிழேந்தி

ஆர்வம் ததும்பக் காத்திருக்கும்
அனைத்து மக்களின் விழிபிதுங்க
தேர்தல் முடிவுகள் தெரிந்துவிடும்
புதிய திருடர்யார்? புரிந்துவிடும்!
ஒற்றை ஆட்சியா? கூட்டணியா?
உள்ளத் தவிப்புக்கு விடைதெரியும்
பற்றாக் குறையா? ஆள்பிடிக்க
பணமூட் டைகளின் கடைவிரியும்
கமண்டலப் பேயைக் கடந்தமுறை
சுமந்தது புரட்சித் தலைவியடா
காவிப் பிசாசுகள் குணமறிந்தும்
இடங்கொடுத் தவர்நம் கலைஞரடா
காவிரிச் சிக்கல் தீர்த்தவராம்
கார்கிலில் வெற்றி சேர்த்தவராம்
சாயம் வெளுத்துப் போனதடா
தலைக் காவிரியும் கானலடா
பாதிரி யாரா் கொளுத்திவிடு
பருவப் பெண்களா கெடுத்துவிடு
ஈதொன் றேஅவர் புதுத்திட்டம்
ஒரிசா பிகாரில் புதுத்திட்டம்
புரட்சியின் இலக்கணம் புரியவைக்க
தூக்கில் கிடந்தவன் பக(வ)த்சிங்
புரட்டுத் தலைவியின் அருள்கிடைக்க
போயசில் கிடந்தவர் சுர்ஜித் சிங்
மாமா நேரு வழிவந்த
மருமகள் ஆளத் துடிக்கின்றார்
மாயா வதிகள் மமதாக்கள்
மறுபுறம் போர்க்கொடி பிடிக்கின்றார்
லல்லு, முலாயம், சரத்துபவார்
மல்லுக்கு நிற்கும் கௌடாக்கள்
வெல்லப் போவது யார்யாரோ?
தொடர்ந்து தோற்பது நாமேதான்!

படிப்பகம்

www.padippakam.com



## தமிழக அரசே!

# பள்ளியில் பெரியார் படம் வைக்கப் போராடிய ஆசிரியை அறிவுக்கண்ணுவைப் பழிவாங்காதே

தந்தை பெரியார் வழியில் ஆட்சி நடத்துகிறோம் என்று கூறும் திராவிடக் கட்சிகள்தான், கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாகத் தமிழகத்தை ஆண்டு வருகின்றன. இன்றைய தமிழக முதல்வரோ மாவட்டந்தோறும் பெரியார் நினைவு சமத்துவபுரங்கள் நிறுவி வருகிறார். ஆனால் மங்கலம்பேட்டை அரசு மேனிலைப் பள்ளியில் பெரியார் படத்தை வைப்பதற்கு முயற்சித்த ஒரே காரணத்திற்காகவே ஓர் ஆசிரியை இடம்மாற்றம் செய்யப்பட்டுப் பழிவாங்கப்பட்டு வருகிறார்.

ஆசிரியை அறிவுக்கண்ணு பணியில் சேர்ந்ததில் இருந்து கடந்த 11 ஆண்டுகளாகவே +2 பொதுத் தேர்வில் இவர் பாடத்தில் மாணவர்கள் 100/100 தேர்ச்சி அடைந்துள்ளனர். பள்ளிப் பணியோடு ஓய்வு நேரங்களில் தமிழ் வளர்ச்சிப் பணிகளும், மொழி உரிமைக்கான நடவடிக்கைகளிலும் ஈடுபட்டவர். மறைந்த முன்னாள் ஆசிரியரும் பெரியார் தொண்டருமான களமருதூர் சி. மாசிலாமணி அவர்களின் மகளான இவரும் பகுத்தறிவுக் கருத்துக்களைப் பரப்புவதோடு ஒடுக்கப்பட்ட மக்களுக்காகவும் குரல் கொடுத்து வருபவர் ஆவார்.

1993-ஆம் வருடம் பள்ளியில் பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவரும் ஆர்.எஸ்.எஸ். ஆதரவாளருமான வேணுகோபால் செட்டியாரின் கடும் எதிர்ப்புகளை மீறிப் பொது மக்கள் திரண்டு ஊர்வலமாகச் சென்று, பள்ளியில் பெரியார் படத்தை வைத்தனர். 1995-ல் இந்து முன்னணி இராம. கோபாலன், ஆசிரியை அறிவுக்கண்ணு மீது நடவடிக்கை எடுக்கும்படி புகார் செய்தார். அதே ஆண்டில் பள்ளிக்கு வந்த மாவட்டக் கல்வி அலுவலரிடம், "அறிவுக் கண்ணுவை இடமாற்றம் செய்யாவிட்டால், அவர் உடம்பில் உள்ள துணியை எல்லாம் உருவிவிட்டு ஓட விடுவோம்" என வேணுகோபால் செட்டியார் மிரட்டியுள்ளார்.

1996-ல் அப்பள்ளியில் வாக்காளர் அட்டை தயாரிப்புப் பணியிலிருந்த ஆசிரியை அறிவுக்கண்ணுவை, வேணுகோபால் செட்டியாரின் ஆர்.எஸ்.எஸ். குண்டர்கள் வெறித்தனமாகத் தாக்கினர். இதை அடுத்து மாவட்ட ஆட்சியரின் தலையீட்டின் பேரில் வேணுகோபால் செட்டியார் பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் பொறுப்பிலிருந்து நீக்கப்பட்டார். தி.மு.க. ஆட்சியில் ஓராண்டிலேயே அவர் மேற்படி பொறுப்புக்கு மீண்டும் வந்துவிட்டார். வந்தவர் தனது அடியாட்கள் மூலம் ஆசிரியை அவர்களுக்குத் தொடர்ந்து தொல்லை கொடுத்து வந்தார்.

இந்தக் கல்வியாண்டு தொடக்கத்தில், பள்ளியில் இருந்த பெரியார் படம் நீக்கப்பட்டதையடுத்து, அனைத்துக் கட்சி மற்றும் இயக்கங்கள் சார்பில் முதல் அமைச்சருக்குப் புகார் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில்தான் வேணுகோபால் செட்டியாரும், சட்டமன்ற உறுப்பினர் குழந்தை தமிழரசனும் சேர்ந்து ஆசிரியை அறிவுக்கண்ணு அவர்களைத் தொழுதூருக்கு இடமாற்றம் செய்துள்ளனர். சென்னை உயர்நீதிமன்றம் மேற்படி மாறுதலுக்கு இடைக்காலத் தடைவிதித்த பின்பும் பணியில் சேரவிடாமல் கல்வி அதிகாரிகள் பழிவாங்கி வருகின்றனர்.

### தமிழக அரசே!

★ ஆசிரியை அறிவுக்கண்ணு அவர்களின் இடமாற்றல் உத்தரவை ரத்து செய்து மீண்டும் அவரை மங்கலம்பேட்டை பள்ளியிலேயே பணிஅமர்த்து.

★ வேணுகோபால் செட்டியாரை பெற்றோர் ஆசிரியர் கழகப் பொறுப்பிலிருந்து நீக்கு.

★ பெண் ஆசிரியர்களுக்குத் தகுந்த பாதுகாப்பு வழங்கு

★ மதவெறியர்களைப் பெற்றோர் ஆசிரியர் கழகப் பொறுப்புகளில் இருந்து நீக்கு

தமிழ் உரிமைக் கூட்டமைப்பு
கடலூர்-விழுப்புரம் மாவட்டம்.

படிப்பகம்

www.padippakam.com



# 'அயோத்திதாசர் சிந்தனைகள்'

## நூல் வெளியீட்டு விழா

| | |
|---|---|
| இடம் | : உலகப் பல்கலைக்கழகச் சேவை மையம் (World University Service Centre) சேத்துப்பட்டு, சென்னை. |
| நாள் | : 13.11.99, சனிக்கிழமை, மாலை 6 மணி |
| வரவேற்புரை | : **பிரான்சிஸ் செயபதி சே.ச.,** |
| தலைமை | : முனைவர் **பொற்கோ** (துணைவேந்தர், சென்னைப் பல்கலைக்கழகம்) |
| வெளியிடுபவர் | : **வே.ஆனைமுத்து** (பதிப்பாசியர், 'பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள்') |
| முதல்படி பெறுபவர் | : **ஜினராஜ்** (செயலர், தென்னிந்திய பௌத்த சங்கம், பெரம்பூர்) |
| சிறப்புரை | : **பெ.சு.மணி**<br>பேராசிரியர் **அ.மார்க்ஸ்**<br>பேராசிரியர் **பெருமாள்**<br>ஆய்வறிஞர் **வ. கீதா**<br>பேராசிரியர் **வீ. அரசு** |
| நன்றியுரை | : **ஞான. அலாய்சியஸ்** (தொகுப்பாசிரியர், **'அயோத்திதாசர் சிந்தனைகள்'**) |

*நூலின் இரண்டு தொகுதிகளின் (1500 பக்கங்கள்) விற்பனை விலை ரூ.600. 13.11.99 வெளியீட்டு விழாவில் சிறப்புத் தள்ளுபடி ரூ.150 கழித்து, ரூ.450க்குக் கிடைக்கும்.*

அருப்புக்கோட்டை 'நாடார் குலமித்திரன்' ஏட்டின் ஆசிரியர் சு.ஆ. முத்துநாடார் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா 4, 5 - சனவரி 2000 இரு நாள்களிலும் அருப்புக்கோட்டையில் மா.பெ.பொ.க. சார்பில் நடைபெறும்.

படிப்பகம்

www.padippakam.com



# மகிழ்ச்சியும் நன்றியும்!

அன்புத் தமிழ் நெஞ்சங்களே!

வணக்கம்.

எங்களுடைய மூத்த மகள் கோ.ரா.சுந்தர காந்தம் 1997 ஆம் ஆண்டில் பன்னிரண்டாம் வகுப்பில் (மத்திய அரசுப் பாடத்திட்டம்) உயிரியல் பாடத்தில் நூற்றுக்கு நூறு மதிப் பெண் பெற்றார். பின்னர் 1997-98 ஆம் கல்வி ஆண்டில் தமிழக அரசு நடத்திய 5 ஆண்டு சட்டப் படிப்பில் சேருவதற்கான நுழைவுத் தேர்வில் 60.32% மதிப்பெண் பெற்று பொதுப் போட்டியில் முத லிடம் பெற்றார்.



தற்போது 1999 - 2000 ஆம் கல்வி ஆண்டில் எங்களுடைய மகன் கோ.ரா.வெற்றி 5 ஆண்டு சட்டப் படிப்பில் சேருவதற்கான நுழைவுத் தேர்வில் 65.80% மதிப்பெண் பெற்று பொதுப் போட்டியில் முதலிடம் பெற்றுள்ளார்.

தோழர் வே.ஆனைமுத்து அவர்கள் நடத் திய பயிற்சி முகாம்கள், அறைக் கூட்டங்கள், மாநாடுகள், ஆசிரியர் - அலுவலர் பேரவை நடத்திய பயிற்சி வகுப்புகள் மற்றும் பிற அமைப்புகள் நடத்திய நிகழ்ச்சிகளில் எம் மக்கள் இருவரும் அவ்வப்போது கலந்து கொண்டு அறிஞர்களின் சொற்பொழிவைக் கேட்டனர். இதனால் இவர்கள் சுயமரியாதை உணர்வும் தமிழ் உணர்வும் பொது அறிவும் பெற்றுள்ளனர்.

எம் மக்களிடம் அன்பு காட்டி, ஊக்கம் ஊட்டி, அறிவு புகட்டி இவர்கள் இத்தகைய சிறப்பினை அடையச் செய்த உறவினர்கள், நண்பர்கள், இயக்கத் தோழர்கள், ஆசிரியர்கள், அறிஞர்கள் மற்றும் பல வகையான சிரமங் களை ஏற்று நிகழ்ச்சிகளை நடத்திய அமைப் பாளர்கள் ஆகிய அத்துணைப் பேருக்கும் எங்களுடைய மனம் நிறைந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். இம் மகிழ் வான வேளையில் சிந்தனையாளன் ஏட்டின் வளர்ச்சிக்கு ரூ.500/- (அய்நூறு) நன்கொடை அளித்து மகிழ்கிறோம்.

அன்புடன்
கலசம் - கோவி
12.10.1999


## "சிந்தனையாளன் கி.பி. 2000 பொங்கல் சிறப்பு மலர்"

★ மலர் 450 பக்கங்களைக் கொண்டது.

★ பலதுறை ஆய்வாளர்கள், அறிஞர்கள், கவிஞர்கள் எழுதும் கட்டுரைகளையும் கவிதைகளையும் கொண்டது.

★ பலவண்ண முகப்புடன் ஆர்ட் அட்டை கொண்டிலங்குவது.

**விற்பனை விலை ரூ.60**

முன்பதிவு செய்திட விரும்புவோர் 15.12.99க்குள் ரூ.40 அனுப்புங்கள்

முகவரி: **சிந்தனையாளன்**
19, முருகப்பா தெரு, சேப்பாக்கம்
சென்னை - 600 005.


படிப்பகம்

www.padippakam.com

# சிந்தனையாளன் வளர்ச்சி நிதி - நவம்பர் 1999

| பெயர் | ஊர் | ரூ.பை |
|---|---|---|
| டாக்டர் பெ. இளங்கோவன் | அரியலூர் | 200.00 |
| ஓர் அன்பர் | சென்னை | 30.00 |
| இரா. பத்மநாபன் | ,, | 25.00 |
| ப.இளங்கோவன் | ,, | 25.00 |
| ந.இளமுருகன் | திட்டக்குடி | 25.00 |
| இரா.சுதாகர் | சட்டுவந்தாங்கல் | 50.00 |
| மு.நடேசன் | ஆர்க்காடு | 50.00 |
| வ.அருவி, வ.அரிமா | சென்னை | 10.00 |
| சீ.இளமதி, சீ.அகிலா | ,, | 20.00 |
| ந. அப்துல் ரகுமான் | ,, | 100.00 |
| முத்து அன்பழகன் | சீர்காழி | 10.00 |
| அழகு அன்பழகன் | ,, | 10.00 |
| முத்து அ. அறிவுக்கடல் | ,, | 10.00 |
| க.முகிலன் | சோளிங்கபுரம் | 50.00 |
| கி.கலை | ,, | 50.00 |
| க.குப்புசாமி | ,, | 50.00 |
| ஜெ.அய்.ஏ.காந்தி | எரும்பி | 10.00 |
| வள்ளி விசயன் | திருக்கோவிலூர் | 20.00 |
| நா.பா. செந்தமிழ்க்கோ | வேலூர் | 50.00 |
| பகுத்தறிவன் | அரக்கோணம் | 25.00 |
| இள.ப. தமிழ்மாறன் | சிதம்பரம் | 10.00 |

## மா.பெ.பொ.க. வளர்ச்சி நிதி

| | | |
|---|---|---|
| கி.விடுதலை | சோளிங்கபுரம் | 50.00 |
| சுகுணா - வடிவேலு | சென்னை | 10.00 |
| அப்துல் ரகுமான் | ,, | 100.00 |


## முந்துங்கள்...!

*தற்பொழுது பரபரப்பான விற்பனையில்!*
*மிகக் குறைந்த படிகளே உள்ளன.*

1. தந்தை பெரியாரின் இறுதிச் சொற்பொழிவு (இரண்டாம் பதிப்பு) — ரூ.8/-
2. கி.பி.2025 இந்தியா - தமிழகம் என்ன ஆகும்? (ஆய்வு நூல்) — ரூ.20/-
3. பெரியாரின் அயல்நாட்டுக் குறிப்புகள் — ரூ.125/-
4. தந்தை பெரியார் மறைவிற்குப் பின் பெரியார் கொள்கைக்குக் குழிதோண்டிய திராவிடர் கழகம் — ரூ.65/-

*கிடைக்குமிடம்:*

**மார்க்சிய பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி**

19, முருகப்பா தெரு (மாடி), சேப்பாக்கம்,
சென்னை -5 :: தொலைபேசி: 8522862


### மூலிகை மருத்துவம்

## நீங்களும் மருத்துவராகலாம்!

### உங்களைப் பாம்பு கடித்துவிட்டால்...

பாம்புகள் மனிதர்களின் கை, கால்களில்தான் கடிக்க வாய்ப்புகள் உள்ளன. பாம்பு நஞ்சு உடம்பில் பரவினாலும் கை, கால் பாதங்களை ஒட்டியே அது தேங்கி இருக்கும்.

முதலில் பாம்பு கடித்தவுடன் சிறியா நங்கை என்னும் நிலவேம்பை உண்ண வேண்டும். நுரை தள்ளிய நிலையில் மயக்கமாக இருந்தால் தும்பைச் சாற்றை மூக்கில் விட மயக்கம் தெளியும். பாம்பு கடித்த இடத்திற்கு மேலே நன்றாக இறுக்கிக் கயிற்றால் கட்டிவிட்டு, பின் சோடா பாட்டிலை உடைத்து நுண்ணிய கூர்முனையால் பாம்பு கடித்த பகுதியைச் சுற்றிலும் கொந்துதல் வேண்டும். இப்படிக் கொந்தும் போது நரம்புகளில் கூர்முனை படாமல் கொந்த வேண்டும். இந்தக் கொந்துதல் முறையால் கறுப்பு இரத்தம் (நஞ்சு) உடனே உடம்பில் இருந்து கால், பாதம் (அ) கைகளின் மூலமாக எந்தப் பகுதியில் கொந்துகிறோமோ அப்பகுதியிலிருந்து முற்றிலும் வெளியேறிவிடும். உடனே கயிற்றை அவிழ்த்துவிட வேண்டும். இம்முறையால் பிற்காலத்தில் தீங்கு இல்லை.

(தொடரும்)

- கோ. அருண்மொழி

மார்க்சிய பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சிக்காக வெளியிடுபவர், ஆசிரியர்: வே.ஆனைமுத்து, 19, முருகப்பா தெரு (மாடி), சேப்பாக்கம், சென்னை-5. அச்சுக்கோப்பு: என்.ஏ.எம். பிராசஸ், சென்னை-18 அச்சிட்டோர்: பெரியார் அச்சிடுவோர் வெளியிடுவோர் கழகம், சென்னை-5. தொலைபேசி: 852 28 62

படிப்பகம்

www.padippakam.com

Licenced to post without prepayment WPP C290
Registrar of Newspapers of India under licence No. 24452/74 'Sinthanaiyalan' TN/MS(c)931/1999

# எரி மூளட்டும்!

தமிழேந்தி



வாள்வீரப் பேச்செல்லாம்
வாயோடு என்பதையும்
வரலாற்றில் பதவிக்காய்த்
தமைவிற்றோர் முன்கதையும்

ஆள்காட்டிப் படைக்கூட்டம்
அதிகரிக்கும் தொகையதையும்
அஃதிகாரத் 'தில்லி'யினார்
அறிந்தறிந்து உவக்கின்றார்

தாள்கிழிக்கும் நாள்காட்டிப்
போல்தலைகள் அறுக்கின்றார்
தமிழ்த்தேச உணர்வுத்தீ
குரல்வளையை நெறிக்கின்றார்

நாள்குறித்து விட்டார்கள்;
விழிமுன்னர் தூக்குமரம்!
நாம்அவரைக் கைவிட்டால்
பழிபின்னர் யார்க்குவரும்?

புலிஎட்டுத் திசைகொட்டப்
பொல்லாங்கின் வெறியாட்டம்!
புரட்சியதன் கருவினிலே
பூத்திட்ட உயிர்நான்கும்

அவியட்டும் என்றந்த
அறமன்றம் எண்ணியதோ?
அடிமைகளாய் நமைஎன்றும்
ஆக்கஇதைப் பண்ணியதோ?

செவிஎட்ட இச்சேதி
தெரிந்தும்நாம் உறங்குவதா?
தெரிந்தேதான் நம்தலையில்
இடிவந்து இறங்குவதா?

குவியட்டும் விண்ணப்பக்
கோரிக்கை உலகெங்கும்
கொதிப்பில் எரிமூளட்டும்
கொலைத் 'தூக்கு' மாளட்டும்!

19, முருகப்பா தெரு (மாடி) சேப்பாக்கம், சென்னை-600 005. தொ.பே.எண். 852 28 62

படிப்பகம்